
அமுதசுரபி

அக்டோபர் 1994 விலை ரூ. 6









Acc. No. 10594

அக்டோபர் '94
பவ - ஐப்பசி

அமுதசுரபி

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே - பாரதியார்

மலர் : 47
இதழ்: 6

☆ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா ☆ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணிய
☆ ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன் ☆ இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார் ☆ தனி
இதழ் விலை : ரூ. 6/-. ☆ ஆண்டுச் சந்தா : ரூ. 72/-. ☆ மேலட்டை வண்ணப்படம் : யோக





அமுதசுரபி

47 ஆவது ஆண்டு
தீபாவளி மலர்
1994

கலைக் கருவூலமாக – போற்றிப் பாதுகாக்கும் பொக்கிஷமாக – எழுத்துலகச் சிற்பிகளின் கை வண்ணத்தில் பிரபல ஓவியர்களின் சித்திரங்களுடன் புதுப் பொலிவுடன் தயாராகிறது.

விலை ரூ. 40/-

☆ பதிவுத் தபாலில் பெற ரூ. 10/- சேர்த்து அனுப்பவும்.

☆ உங்களூர் விற்பனையாளரிடமும் பதிவு செய்து கொள்ளலாம். அல்லது 15.10.94–க்குள் மணியார்டர் அல்லது டிராஃப்ட் அனுப்பவும்.

அமுதசுரபி

த.பை.எண். 5043,
145, லிங்கிச் செட்டி தெரு,
சென்னை – 600 001.
தொலைபேசி : 52 28 545, - 51 05 35.

எஸ். இராஜரத்தினம்

நாணயம்

நேர்மை, நாணயம், உழைப்பு செழிக்கவும் உங்கள் பொருளாதாரம் கொழிக்கவும் வழிகாட்டும் புதிய பகுதி.

வளம் பெற வழிகள்

பெஞ்சமின் பிராங்கலின் என்ற அமெரிக்கர் அமெரிக்க சுதந்திரப் போராட்ட வீரர். விஞ்ஞான மேதை. தொழில் நிபுணர். அரசியல் விற்பன்னர். சிறந்த எழுத்தாளர். பொதுநல ஊழியர்.

சிக்கனத்தைப் பற்றி சலிப்படையாமல் எழுதுவதும், பேசுவதும் கடைப்பிடிப்பதும் இவருக்குப் பிடித்த ஒரு செயல்பாடு. அவர் ஆண்டுக்கொரு முறை வெளியிட்ட பஞ்சாங்கம் (ஆல்மனக்) மிகப் பிரசித்தி வாய்ந்தது. அதில் அவர் எளியவர் ரிச்சர்ட் கூற்றாக பல நல்ல கருத்துகளைச் சொல்வதுண்டு. அவருடைய இந்த வருடாந்திர முயற்சிக்குக் கற்றவர்களின் பாராட்டுகள் கிட்டவில்லை. எனினும் பாமர மக்கள் விரும்பி வாங்கிப் படித்ததுடன் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் போது பழமொழிகளைச் சான்றாக தங்கள் கருத்துகளைக் கூறுவது போல எளியவர் ரிச்சர்டின் கூற்றாகக் கூறுவது ஒரு பழக்கமாகி விட்டது. இதைப் பற்றி "வளம் பெற வழிகள்" என்ற கட்டுரையில் பாமர மக்கள் கலந்துரையாடலாக எழுதியிருக்கிறார். தனி மனிதனின் வளமே நாட்டின் வளம் என்ற அவரது கொள்கையையும், அதற்குத் தனி மனிதனின் கொள்கை எதுவாக இருக்க வேண்டும் என்பதையும் அந்தக் கட்டுரை சிறப்பாக வலியுறுத்துகிறது.

"காலம் ரொம்பக் கெட்டுப் போச்சு, பெரியவரே! எதற்கெடுத்தாலும் வரி வரி என்று போட்டால் எங்கிருந்து கொடுப்பது? என்னதான் செய்வது? என்று சந்தையில் கூடிய ஒரு சில விவசாயிகள் ஓர் அனுபவசாலியான பெரியவரிடம் கேட்கின்றனர்.

அந்தப் பெரியவர் சொல்வதாக அவர் சொல்கிறார். நாம் கொடுக்கும் வரி அரசாங்கம் விதிப்பது மட்டுமல்ல. அதைவிட மிகச் சுமையான வரிகளை நாம் கண்டு கொள்வதில்லை. நாம் அரசுக்குச் செலுத்தும் வரிகளை விட இரு மடங்கு நமது சோம்பேறித்தனம் வசூலிக்கிறது. அதைவிட மூன்று மடங்கு நமது அர்த்தமற்ற படாடோபத்தினால் கொடுக்கிறோம். நான்கு மடங்கு நமது விவேகமற்ற பல செயல்களினால் இழக்கிறோம். இந்த மற்ற வரிகளுக்கு வரி விலக்கோ வரிச்சலுகையோ இல்லை. அரசு விதித்த வரிகளில் தப்பிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால், நாம் நமக்கே விதித்துக் கொள்ளும் வரிகளைத் தவிர்க் கலாமல்லவா? நாம் நமக்கே உதவி செய்து கொள்ளாவிட்டால் இறைவன் நமக்கு ஏன் உதவி செய்ய வேண்டும்?

சோம்பேறித்தனம் நமது முதல் எதிரி. அர்த்தமற்ற கேளிக்கைகளிலும் சும்மாயிருப்பதிலும் நாம் நேரத்தை வீணாக்குவது, நாம் கையில் இருக்கும் காசை ஊதாரித்தனமாக உதறிவிடுவதாகவே கொள்ள வேண்டும். அதிகாலையில், விழித்தெழாவிட்டால் அதிகப்படி தூங்குவதால் தொலைந்து போன நேரம் தொலைத்துவிட்ட காசுக்குச் சமம். அந்த நேரத்தைப் பயனுள்ள விஷயங்களில் பயன்படுத்த முடியாதா? தூங்காத ஆமை கூட, தூங்கும் முயலை முந்தவில்லையா? வாழ்க்கை என்ற ஓட்டப் பந்தயத்தில் ஒரு சோம்பேறி பின் தங்கிவிடுவதுடன் ஏழைமையின் நண்பனாகிறான்.

காலம் கெட்டுப் போகவில்லை. நாம் தான் கெட்டுப் போகிறோம். நமது தோல்விகளுக்குக் காலத்தைக் குறை கூறுவது மடமை.

சுறுசுறுப்பாக இருந்தாலே பல நன்மைகள் அடையலாம். உழைப்பின்றி உயர்வில்லை. உங்கள்

'ஏரியல் சூப்பர் சோக்கர்'

ப்ராக்டெர் & காம்பள் ஹோம் புரொடக்ஸ் லிட் சலவையில் மற்றுமொரு புதுமை செய்திருக்கிறார்கள். இந்திய நடுத்தர குடும்பத்தினர் உபயோகத்திற்கு ஏற்றவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்ட ஏரியல் சூப்பர் சோக்கர் மிகச் சிறந்ததொரு சலவைத்தூள். இதனால் சலவை செய்யும்போது துணிகளுக்கும் பாதுகாப்பு, கைகளுக்கும் பாதுகாப்பு. நீரின் நீல நிறம் கொண்ட இந்த டிடெர்ஜெண்ட் தூள் நறுமணத்துடன் திகழ்கிறது. துவைத்துப் பல மணி நேரங்களுக்கு துணியில் கமழ்ந்து வரும் உயர்தர டிடெர்ஜெண்ட்.

வண்ணத் துணிகளை மேலும் பளபளப்பாக்குகிறது. வெள்ளைத் துணிகளை கூடுதல் வெண்மையுடன் திகழ வழிவகை செய்கிறது. ஏரியல் சூப்பர் சோக்கர், விலை 1 கிலோவிற்கு ரூ. 25 மட்டுமே!

✧

யு.டி.ஐ. சமுதாய மேம்பாட்டிற்காக பல சிறப்பான திட்டங்களை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. ராஜ்லக்ஷ்மி என்கிற பெண்களுக்கான திட்டம் 12 லட்சம் முதலீட்டாளர்களால் சுமார் ரூ. 500 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ளது. வயதானவர்களுக்கான சீனியர் சிடிஸன் திட்டம், மேல்படிப்பிற்கான சிறுவர்கள் காலேஜ் மற்றும் கரியர் பண்டு என்னும் திட்டங்களும் சிறப்பான முறையில் மக்களால் வரவேற்கப்படுகின்றன. தற்போது மகளிருக்கான மற்றுமொரு சிறப்புத் திட்டம் 'கிருஹ லக்ஷ்மி' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் முதலீடு செய்வதன் மூலம் வருடா வருடம் நிரந்தரமான வருவாய்க்கும் குறைந்த பட்சம் 3 ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பப் பெறும்போது அன்றைய நாளின் தொகையை நிர்ணயித்தும் பெறலாம். இத்திட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய் வரையிலான முதலீட்டிற்கு அன்பளிப்பு வரி ரத்து அளிக்கப்படுகிறது.

கையில் ஒரு கைத்தொழில் இருந்தால் அது உங்களுக்கு ஒரு தோட்டம் (எஸ்டேட்). ஆனால், அந்தத் தொழில் கைவசம் இருப்பதால் மட்டுமே வளம் பெற இயலாது. ஒரு தோட்டம் காடாகலாம் (அ) பணத் தோட்டமாகலாம். அது உங்கள் கைவசம்!

உழைக்க உங்களுக்கு இரு கரங்களையும், அவற்றை உபயோகிக்க அறிவையும் இறைவன் அளிக்கவில்லையா? வேண்டிய உபகரணங்களை உங்கள் மூதாதையர் உங்களுக்காக விட்டுச் சென்றிருக்கின்றனரே! இன்னும், வேறு காலமும் சந்தர்ப்பமும் வரும் என்று எவ்வளவு காலந்தான் காத்திருப்பீர்? ஒவ்வொரு நாள் காலதாமதமும் காலவிரையம் அல்லவா?

நீங்கள் ஊழியராக இருந்தால் உங்கள் மேலதிகாரிகள் சொற்படி உடனுக்குடன் நடப்பதில்லையா? அப்படி இருக்கும்போது நீங்களே ஏன் உங்கள் முதலாளியாக இருக்கும் காரியங்களை உடனே செய்யாமல் ஒத்திப் போடுகிறீர்கள்? நீங்கள் சும்மாயிருப்பதை உங்கள் மேலதிகாரிகள் பார்த்து விட்டால் வெட்கப்படும் நீங்கள் ஏன் உங்களையே மேற்பாத்துக் கொள்ளக் கூடாது?

'நான் ஒரு சாதாரண மனிதன். என்னால் என்ன செய்யமுடியும்?' என்று நினைக்க வேண்டாம். மழைத் துளிகளால் கல் தேய்வதில்லையா? ஒரு சின்ன உளியால் பெரிய மரங்கள் வீழ்வதில்லையா?

வாழ்க்கை வாழ்வதற்கே. ஓய்வு அவசியமில்லையா? உழைத்து உழைத்து உயிர் மாய வேண்டுமா? வேண்டாம். போதிய உழைப்பு இருந்தால் ஓய்வு வேண்டும்தான். ஒரு நிமிட வேலை ஒரு மணிநேர ஓய்வு என்றால் எடுப்பது ஓய்வல்ல. அது சோம்பித் திரிவதே ஆகும். ஓய்வு நேரத்தைக் கூட உபயோகமான முறையில் பயன்படுத்துவதே ஓர் அறிவாளியின் செய்கை.

வேலையற்றோரினாலேயே பல பிரச்னைகள் தோன்றுகின்றன. வேலையற்றோர் பிறரால் மதிக்கப் பெறுவதில்லை. உழைப்பில்லாது பெறப்படும் செல்வம் மதிக்கப்படாதது மட்டுமல்லாமல் நிலைப்பதும் இல்லை.

உங்கள் உழைப்பு: உங்கள் குடும்பம்: உங்கள் சொத்து: - அவற்றைப் பராமரிக்க நீங்கள் மட்டும் போதும். வேறு யாரையும் எதிர்பார்ப்பது கேவலம் மட்டுமல்ல: பயனற்றதுங்கூட. நின்ற இடத்தை விடாத மரம் தானே நிலத்திலிருந்தும், நீரிலிருந்தும் உணவு பெற்று தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் போது, நடமாடும் நாம் ஏன் யாரையும் எதிர்பார்க்க வேண்டும்?

கவனக் குறைவினால் நாம் இழப்பது, திருட்டினால் இழப்பதைவிட அதிகம். ஆணி விழுந்த லாடத்தில் ஒரு ஆணி போடாததால் லாடம் போயிற்று. லாடம் போனதால் குதிரை போயிற்று. குதிரை போனதால் குதிரை வீரன் மாண்டான். குதிரை வீரன் போனதால் போரில் தோல்வி ஏற்பட்டது என்பது கதை அல்ல! நமது அன்றாட வாழ்வில் நடக்கும் நிகழ்ச்சியே! உங்களை நீங்கள் நம்பினால் பிறரை நம்பி ஏமாற வேண்டுவதில்லை. வாழ்வில் வெற்றி பெற்ற எவரும் தன் முயற்சியாலேயே வெற்றி பெற்றிருக்கின்றனர்.

சிக்கனம் செல்வத்திற்கு வழிகாட்டும். சமையல் அறை வலுவாக இருந்தால் அவரது உயில் பலவீனமாக இருக்கும். பணத்தைச் சேகரிப்பதால் மட்டும் பணக்காரனாக முடியாது. சேர்த்த பணத்தை மீத்து வைத்தல் வேண்டும். இன்றைய தேவைகளுக்கு அவை போதவில்லை என்றால் எப்படி சேமிப்பது என்ற கேள்வி எழும். தேவைகளுக்கு ஒரு முடிவு உண்டா? அவற்றிற்கு அளவும் இல்லை. எல்லையும் இல்லை. பெரிய குடும்பம், சிறிய வருமானம், எப்படித்தான் சேமிப்பது என்பது வாடிக்கையான கேள்வி. கொஞ்சம் காப்பி, கொஞ்சம், பலகாரம், கொஞ்சம் நல்ல உடை, கொஞ்சம் நல்ல வீடு, கொஞ்சம் சினிமா டிராமா எல்லாம் கொஞ்சம் கொஞ்சம்தான். ஆனால், இந்தக் கொஞ்சம் கொஞ்சம் அதிகப்படுத்தப்பட்ட செலவுகள் தாம் வருமானத்தை மிஞ்சிவிடுகின்றன. ஒரு சிறு ஓட்டை ஒரு பெரிய கப்பலையே மூழ்கடித்துவிடும். சிறு துளி பெரு வெள்ளம் அல்லவா? செலவானாலும் சேமிப்பானாலும் இதுவே உண்மை.

வேண்டாத பொருள்களை மலிவு விலையில் கிடைத்தாலும் அதன் விலை அதிகமே. தேவைகள் வேறு: வசதிகள் வேறு. வசதிகளைத் தேவைகளாக நினைப்பது நம்மில் அநேகர் செய்யும் தவறு. வசதிகளுக்கு வரம்பில்லை. இன்று வசதியாக வாழ்வோர் வசதியாக வாழதிருந்து வளர்ந்தவர்களின் கடன் கேட்டு கையேந்தி நிற்பது பல நேரங்களில் நாம் காணும் நிகழ்ச்சி. பணத்தில் அருமை தெரிய வேண்டுமா? கடன் கேட்டுப் பாருங்கள் தெரியும். கையில் பணம் இருக்கும் போதே அதன் அருமை தெரிந்து வைத்துக் கொள்வதுதான் விவேகம். சேமிக்காதவர் ஒரு நாள் நிச்சயம் கடனாளிதான். இதை மறக்க வேண்டாம். கடனைத் திருப்புவதில் தவணை தவறினால் பொய், தலைகுனிவு, புரட்டு, அடிமைத்தனம் ஒன்றுக்குப் பின் ஒன்றான விளைவு.

சேமித்து விட்டீர்கள் என்று கொள்வோம். இன்னும் ஒன்று உண்டு. அதுதான் மனித நேயம். உங்களைவிட தாழ்ந்த நிலையல் உள்ளோர்க்கு உதவும் பண்பு. அதுதான் தன் மதிப்பு, கௌரவம்.

மேற்சொன்ன கருத்துகள் பெஞ்சமின் பிராங்கலின் அவர்களுடையது. இந்த கருத்துகளை படிக்காத மேதை ஜி.டி.நாயுடு அவர்கள் சுருக்கமான ஒரு செய்தியாக இவ்வாறு கூறினார், முதல் இருபத்தைந்து ஆண்டுகள் கற்று, அடுத்த இருபத்தைந்து ஆண்டுகள் வருமானம் தேடிப் பெற்று, எஞ்சியுள்ள நாள்களில் கற்றதையும் பெற்றதையும் மற்றவருடன் பங்கிட்டுக் கொள்வது கடமை. இது ஒரு நல்லதோர் இலட்சியமல்லவா?



இவ்விரு குழந்தைகளும் ஆதரவற்ற நிலையில் சிவானந்த குருகுலத்தில் சேர்க்கப்பட்டு அன்பும், அரவணைப்பும் கிடைக்கப் பெற்று அமைதியான சூழ்நிலையில் வளர்கின்றனர்.

செல்வி அம்லு என்று அழைக்கப்படும் குழந்தை திருவள்ளூர் இரயில் நிலையத்தில் மூன்று மாதங்கள் நிர்க்கதியாக விடப்பட்டு பின்பு சிவானந்த ஆசிரமத்தில் அடைக்கலம் புகுந்தது.

அஞ்சலி என்று நாங்கள் பெயரிட்டு அழைக்கப்படும் மற்றொரு குழந்தை கிழக்குத் தாம்பரம் பூங்காவில் ஆதரவற்ற நிலையில் எங்களிடம் வந்து சேர்ந்து வளர்ந்து வருகிறது.

வரும் தீபாவளித் திருநாளை வெகு விமரிசையாக கொண்டாட இப்பத்திரிகையினை படிக்கும் அன்பு உள்ளங்களுக்கு சிவானந்த ஆசிரமக் குழந்தைகளும், முதியோர்களும் தங்களின் வாழ்த்துகளை மனமுவந்து தெரிவிக்கிறார்கள். பண்டிகை நாட்களில் நிதி உள்ளவர்கள் தத்தம் நிலைமையினை அனுசரித்து விழாக்களை கொண்டாடுகிறார்கள். இந்தத் திருநாளில் பல்லாயிரக்கணக்கான இளம் நெஞ்சங்கள், முதியோர், பார்வையிழந்தோர், மனவளர் குன்றிய குழந்தைகள், சிறைக் கைதி ஆதரவற்றோர், வசதியில்லாதோர், உ ஊனமுற்றோர் பண்டிகையை பொருள் இல்லா கொண்டாட இயலாதவராக இருக்கிறார்க இப்படிப்பட்டவர்களுக்கு தாங்கள் மனமுவ பொருளாகவோ, துணியாகவோ, நிதியாகவே பட்டாசுகளாகவோ கொடுத்து உதவி செ ஆத்ம திருப்தி அடையலாம். எந்த ஒரு பண்டி யிலும் நம்முடைய பொருளில் சிறிதேனும் ருக்கு ஈந்தால் அந்த பண்டிகையின் மகிழ் யினையும், பிறருக்கு உதவினோம் என்ற ஆ திருப்தியும் கிடைக்கப் பெற்று பேரானந் அடையலாம். தாங்கள் அருகிலுள்ள சே ஸ்தாபனத்திற்குச் சென்று உங்கள் மகிழ்ச்சின பகிர்ந்து கொள்ளுங்கள்.

சிவானந்த ஆசிரமத்திலுள்ள சுமார் ஆதரவற்ற குழந்தைகளும், முதியோர்களும் இ தீபாவளித் திருநாளை மகிழ்ச்சியுடன் கொ டாட பொதுமக்கள் மனமுவந்து உதவும வேண்டுகிறோம். இதனைப் படிக்கும் தாங் தங்களுடைய காணிக்கையாக ஒவ்வொருவ குறைந்தபட்சம் தலா ஒரு ரூபாய் இவ்வ பணிக்கு அர்ப்பணம் செய்தால், இத்திருப்ப தங்கள் ஆசியுடன் பரிபூரணமாக நிறைவே என்பதல்லாமல் இந்த நாட்டில் உள்ள அனை ஆதரவற்றோரும் பயன்பெறுவர்.

பொதுமக்கள் அளிக்க விரும்பும் கொடை, பணம், பொருள், பண்டங்கள் எதுவ இருந்தாலும் அக் குழந்தைகளின் நலனை னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொதுமக் தங்களால் இயன்ற உதவியை பணமாக அல் பொருள்களாக,

நிர்வாகி,

"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரம

நெ. 20. கம்பர் தெரு

கிழக்குத் தாம்பரம்

சென்னை – 600 059

தொலைபேசி எண்: 401078, 402354

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும் கேட்டுக்கொள்கிறோம்.

அட்டையில் :


விநாயகர் சதுர்த்தி

இந்த வருடம் சென்னையில் ஆயிரம் விநாயகர் சிலைகளுடன் ம்மாண்ட ஊர்வலம் எந்த த அசம்பாவிதச் சம்பவங்களும் ல்லாமல் அமைதியாக நடை ற்றது.

ஊர்வலத்தில் லாரிகள், ரக்குகள், வேன்கள், மாட்டு ண்டிகள் என ஏறக்குறைய க்கும் மேற்பட்ட வாகனங் நடன் விநாயகர் சிலைகள் த்து வரப்பட்டன.

அட்டையில் பிரசுரிக்கப்பட் ள்ள பன்னிருகைகள் கொண்ட 32 டி உயர விநாயகர் சிலை தியாக ய நகரில் வைக்கப்பட்டிருந்தது. நனை 18 சக்கரங்கள் பொருத் டிரக்கில் ஊர்வலமாக த்துச் சென்றார்கள்.

விநாயகர் சிலைகள் கடற் ரைப் பகுதியை அடைந்ததும் அங்கு தயாராக வைத்திருந்த மலர்களைத் தூவி வரவேற்றனர்.



இவ்வாறு கொண்டு வந்த அனைத்து விநாயகர் சிலைகளும் கடலில் கரைக்கப்பட்டன. மிக உயரமான விநாயகர் சிலைகளைக் கடலில் கரைப்பதற்கு வசதியாக கடற்கரை சீரணி அரங்கத்திற்குப் பின்புறம் ராட்சத கிரேன் வைக்கப்பட்டு இருந்தது. அதன் மூலம் விநாயகர் சிலைகள் கடலில் கரைக்கப்பட்டன.

வண்ணப்படங்கள்,

தகவல் : 'யோகா'

புதுவையில் ஆன்மிகம்

எம். ஞானேஸ்வரி

நேதி நேதி என்று பேசும் வேதம் விளங்கும் பாண்டிச்சேரி புதுச்சேரி என்றும், புதுவை என்றும் அப்போதைக்கப்போது உள்ள மனிதர்களால் அழைக்கப் பட்டு வருகிறது. வேத விற்பன் னர்வேதாந்தகளும் கேசரிகளும் நிறைந்த ஞானபூமியே பாண்டிச்சேரி. இங்கு அகஸ்திய மகரிஷி பர்ணசாலை அமைத்து பலகாலம் தவம் செய்துள்ளார் என்று ஜோனியோ டியூபிரிவில் (JOUVEAU DUBREVIL) என்னும் பிரெஞ்சுப் பேராசிரியர் சொல்லு கிறார். இந்த மண்ணில் 32 ஆத்ம ஞானிகள் தவம் செய்து சாயுச்ய நிலை பெற்றுள்ளார்கள். கடுவெளி சித்தர், சிவஞான பாலய சுவாமிகள், பால சித்தர், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை, குள்ளச் சுவாமிகள், தேவராசு சுவாமிகள், மௌலா சாகிப், சிவப்பிரகாச சுவாமிகள், சிருங் கேரி சிவகெங்கா ஸ்ரீ சுப்ரமண்ய அபிநவ சச்சிதானந்த பாரதி சுவாமிகள் ஆகியோர் அவர் களுள் சிலராவர்.

இங்கு சுவாமி விவேகானந்தர், வடலூர் இராமலிங்க சுவாமிகள், ரெட்டியப்பட்டி சுவாமிகள், கடப்பை சச்சிதானந்த சுவாமி, மயிலாடு துறை பரப்பிரம்ம சற்குரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகள், மகாகவி சுப்ரமண்ய பாரதி யார், வேதாத்ரி மகரிஷி, பரஞ் ஜோதி முனிவர், கன்னங்காடு சுவாமி இராமதாஸ், ஆனந்தமயி ஆகியோர் வந்துள்ளனர். மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் பாண் டிச்சேரியில் இன்றும் இருப்பது இதன் ஆன்மீக சக்திக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.



திருஞான சம்பந்தர் இவ்வூர் வழியாக இரும்பைக்குச் சென் றுள்ளதாக, கர்ண பரம்பரைக் கதையொன்று சொல்லுகிறது. பழம்பெரும் கல்வெட்டுகள் நிறைந்த சிவாலயங்கள் இங்குள் ளன. பாகூர், மதகடிப்பட்டு, திருவாண்டார் கோயில் ஆகிய இடங்களில் சிவன் கோயில்கள் சிறப்புற்று விளங்குகின்றன. இங்கு ஏராளமான கல்வெட்டு கள் உள்ளன. திருபுவனையில் பழங் காலத்திய பெருமாள் கோயில் ஒன்று சிறப்புடன் விளங்குகிறது. இந்த நான்கு கோயில்களும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழே உள்ளன.

இங்குள்ள பல ஆன்மிக ஆசிர மங்களுள் ஸ்ரீ அரவிந்தர் ஆசிர மம் உலகப் பிரசித்தி பெற்றதா கும். ஸ்ரீ அரவிந்தரும் அன்னை யும் பூரணயோகம் என்ற ஒரு மார்க்கத்தை உலகிற்குப் பறை சாற்றியுள்ளனர். பூரண யோகத் தின் மூலம் மனிதன் எட்ட வேண்டிய மெய்ஞ்ஞானப் பெருவாழ்வைப் பெறலாம் என்பது இவர்களுடைய கருத்து. அரவிந்தர் ஆசிரமம் புதுவைக் கடற்கரைப் பகுதியிலுள்ளது. இந்த ஆசிரமத்தைப் பற்றி அறியாத மக்களே இல்லை.

வேதாந்த மடம் என்று ஒன்று உள்ளது. அங்கு வேதாந்த பாடம் நடத்துகொண்டிருந்தது. மணக்குள விநாயகர் கோயில் புதுவை மாநிலத்தில் தன்னிக ரற்று விளங்குகிறது. இங்கு வருகின்ற பக்தர்களுக்கு அருட் சக்தியை வழங்கி வாழ்வில் நிம்மதியைத் தருகிறது. வில்லிய னூரிலுள்ள திருக்காமேசுவரர் ஆலயம் பழம்பெரும் கோயில் களில் ஒன்று. இங்கு தேர்த்திரு விழா மிகவும் சிறப்பாக உள்ளது. வீராம்பட்டினத்திலுள்ள செங் கேணியம்மன் ஆலயத்தின் சிறப்பை இங்குள்ள ஒவ்வொரு ஜீவ ராசிகளும் உணரும். வில்லி யனூரில் உள்ள கிறிஸ்துவ ஆலயத்தில் அன்னைக்கு இந்துக் கள் முறைப்படி தேர்த் திருவிழா நடைபெறுகிறது.

ஆன்மிகத்தின் மையமாக அமைந்துள்ள புதுவையில், இது வரையில் இரண்டு அகில உலக யோகா விழா புதுவை அரசால் நடத்தப்பட்டது. இந்த யோகா விழா ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து ஜனவரி மாதத்தில் புதுவை அரசாங்கமே நடத்தும் என அறிவித்துள்ளனர்.

வேதபுரி என்று அழைக்கின்ற பாண்டிச்சேரியில் ஓங்கார ஆசிரமம் ஒன்று பரிசுத்தமான ஆன்மிக நெறியில் இயங்கி வருகிறது. ஓங்கார ஆசிரமத்தை கடந்த 1965-லிருந்து இன்றுவரை மிக அழகோடு தவத்திரு சுவாமி ஓங்கார நந்தா அவர்கள் நடத்தி வருகிறார்கள். இன்றைய சூழ்நிலையில் ஓங்கார ஆசிரமம் ஒன்றுதான் சற்குருவின் நேர் தொடர்போடு சாதனைகள் கொடுக்கப்பட்டு, சீடர்கள் சாதனையில் பயின்று இறை யருள், இறைதரிசனம், சாயுச்யம் பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

ஓங்கார ஆசிரமத்தின கொள்கை சத்யம், தர்மம், நியாயம், அன்பு. அடுத்து பரிசுத்தம், பரிபூரணம், பரசிவ ஐக்கியம் ஆகிய 3 படிகளைக் கொண்டது இவர் களின் சாதனை முறைகள். சந்தோஷம் என்பது இந்த ஆசிரமத்தின் தாரக மந்திரமாகும். ஓங்கார ஆசிரமத்தில் 'ஓம்' என்ற பிரணவத்தை மையமாகக் கொண்டு சாதனை தரப்படுகிறது. இறைவனைப் பற்றிப்பேசுகின்ற எந்த மார்க்கத்தையும் எந்த மதத்தையும் என்றுமே இது சாடியதில்லை. இறைவனை நோக்கிச் செல்லுகின்ற எல்லா ஆத்ம ஞானிகளையுமே இது வரவேற்கிறது: கௌரவிக்கிறது.

உலகம், உலகத்து உயிர்கள், பஞ்ச பூதங்கள், சித்சக்திகள், இறைவன் (அ) இயற்கை ஆகிய அனைத்தும் சச்சிதானந்த நிலையில் பெருவாழ்வு நடந்த வேண்டும் என்பதே இதன் குறிக்கோள். ஜெகமே சிவம் என்பது இதன் போதனை. ஜெகம் முழுவதும் சந்தோஷமயமாக்க வேண்டும், ஆக்க முடியும் என்பது இதன் ஆணித்தரமான கருத்தாகும். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ 1965லிருந்து இவ்வுலகிற்கு அகண்டாகார பிரம்மாண்ட ஆன்மிகப் பெரும்பணியை ஆற்றுகிறது. இது அருவ வழிபாட்டையும் ஏற்று, அதற்குரிய சாதனையை அனைவருக்கும் தருகிறது. உருவ வழிபாட்டில் செல்லுபவர்களுக்கும் அவர்களுக்குரிய சாதனையைத்தந்து இறைவனையடைய வழி வகுக்கிறது.

ஓங்கார ஆசிரமத்தின் மூல நிறுவனர் மயிலாடுதுறை பரப்பிரம்ம சற்குரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகளாவார். இவர் ஒரு சிறந்த மகா சித்தர். அர்த்த மௌனி. தான் இருந்த அடிச்சுவடே உலகிற்குத் தெரியக் கூடாது என்று நினைத்து வாழ்ந்தவர். இறைவனின் ஆற்றல் இவரின் ஆற்றலாகும். மகா சித்தர் சுவாமிகள் 1904-இல் பிறந்து 1964-இல் வெட்டவெளியில் கலந்தார். இவர் வெளிப்படுத்திய ஆற்றல் ஒன்றை இதுவரையில் எந்த ஆன்மிகப் பெரியாரும் வெளிப்படுத்தியதில்லை எனலாம். இவரே இறைவன். இறைவனே இவர். இறைவன் இவர் உருவில் இவ்வுலகை 60 ஆண்டுகள் சுற்றிப் பார்த்து அனைத்து உயிர்களிடத்தும் தோளோடு தோள் காட்டி உயிர்களுக்கு ஸ்பரிச தீட்சை, நயன தீட்சை, ஆத்மார்த்த தீட்சைகளைக் கொடுத்து உய்யச் செய்தார். சுவாமிகளின் பிரதான சீடர் தவத்திரு சுவாமி ஓங்காரநந்தாவாகும். இவர் உலகையே ஆனந்தமயமாக்க வேண்டும் என்ற தன் குருநாதரின் ஆக்ஞைப்படி ஆன்மிகத்தில் அரும்பணியாற்றி வருகிறார். தமது சீடர்களுக்கு நேரிடையாக ஆன்மிகப் பயிற்சியளித்து வருகிறார். மிகவும் நெறியானவர். பயிற்சியில் சிறிதுகூட தயவு காட்டமாட்டார். கடுமையான பயிற்சி, சோதனைகள், சீடர்களைத் தட்டிப்பார்த்து தேர்ந்தெடுக்கும் முறை, தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றும் முறை ஆகியவை தென்னகத்தில் இங்கு தான் செயல்படுத்தப்படுகிறது. அவரின் குருநாதர் தன் அருளாற்றலை சுவாமிகளுக்கு உண்மையாக அருளியுள்ளார். சிறந்த பொறுமைசாமி. நுண்ணிய மெய்யருளாளர்.

எப்பொழுதும் சிவானந்தப் பெருவெளியில் திளைத்திருப்பார். விதியை மாற்றும் வல்லமையாளர். எளிமையில் இவருக்கு நிகர் இவரே. வேதபுரியில் இயங்கிவரும் ஓங்கார ஆசிரமம் மார்ச் 87-இல் 108 யானைகளைக் கொண்டு உலகப் பேரமைதிக்காக கோவையில் 108 கஜ பூஜை நடத்தியது. இது உலகம் அறிந்ததே. இது முதல் உலக மகா பூஜை. இரண்டாவது உலக மகா பூஜை 1991 மே 11ஆம் தேதி அக்னி க்ஷேத்திரமாகிய திருவண்ணாமலையில் ஒரே இரவில் ஒரு கோடி சிவ பஞ்சாட்சர மகா ஜெப வேள்வி 7000 சிவனடியார்களைக் கொண்டு நடத்தப்பட்டது. 3ஆவது உலக மகா பூஜை 1993 ஆகஸ்டு 30,31 செப்டம்பர் 1 ஆகிய 3 நாள்களில் மிகச் சிறப்பாக பாண்டிச்சேரியில் நடைபெற்றது.

சுவாமிகள் இதுவரை 18 ஆன்மிக நூல்களை அருளியுள்ளார்கள். பாண்டிச்சேரியை நன்கு ஆய்வுநடத்தி அங்கு சமாதி கொண்டுள்ள 32 ஞானிகளின் சமாதியைக் கண்டு பிடித்து 'ஞான பூமி' என்ற நூலை 1978-இல் வெளியிட்டார். இந்நூல் புதுவையில் ஆன்மிகப் பெருமையைப் பறை சாற்றுகிறது. அடுத்து ஞானயாத்திரை, ஞான வாசல், ஞான மணிகள், என்றும் நீ, நீயே பிரம்மம், மௌனம், ஜெபம் ஆகிய சாதனை நூல்களையும் வெளியிட்டுள்ளார். ஆன்மிகத்தின் பரிபூரண நூலாக, ஆன்மிகத்தின் மகுடமாக விளங்கும் 'ஞான கீதை' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார். தியானத்தில் ஒரு புதிய எளிமையான முறையை மக்களுக்கு அறிமுகப் படுத்தியுள்ளார். அதுவே வெட்டவெளி தியானம் என்ற நூலாகும். 'வெட்டவெளி தியானம்' என்ற நூலை சமீபத்தில் வெளியிட்டுள்ளார். வெட்டவெளி தியானம் செய்வதினால் மக்கள் அடையும் பயன்களை வெளிப்படுத்தியுள்ளார்.

ஒவ்வோர் ஆண்டும் சித்ரா பௌர்ணமியன்று பாண்டிச்சேரி கடற்கரையில் அகண்ட ஓங்கார கூட்டு தியானத்தை நடத்தி வருகிறது. இதுவரை 23 சித்ரா பௌர்ணமி அகண்ட ஓங்கார கூட்டு தியானங்களை நடத்தியுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் பெற்றுள்ளனர். ஓங்கார ஆசிரமம் இதுவரை 118 மகா பூஜைகளையும், 3 உலக மகா பூஜைகளையும், 480 சத் சங்கங்களையும், 176 ஞான யாத்திரைகளையும் நடத்தியுள்ளது. 4ஆம் உலக மகா பூஜையை விரைவில் சென்னையில் நடத்த

...திரமான பணியை மேற் ...கொண்டுள்ளது. இதில் 1008 ...ங்கலி பிரார்த்தனை, ஒரே ...ளில் 5கோடி வெவ்வேறு ...தமான மகா ஜெபங்கள், ...துக்கள் சந்நியாசிகளுக்கு மகா ...கேசுவர பூஜை, ஒரு நாள் ...ன்மிக மாநாடு, சென்னை ...ற்கரையில் அகண்ட வெட்ட ...வளி தியானம், ஆகியவை ...லகப் பேரமைதிக்காக நடை ...பற உள்ளது.

...திருப்பதியில் ஒரே நாளில் ...0 கோடி அஷ்டாக்ஷர ...ஜபத்தை நடத்த ஓங்கார ...சிரமம் திட்ட மிட்டுள்ளது. ...ருச்செந்தூரில் ஒரே நாளில் ...சத்து எட்டு காவடி பூஜையும் ...த்தத் தீர்மானித்துள்ளது. ...லும் 27 நிஜ சிங்கங்களை ...வத்து ராஜ ராஜேஸ்வரி ...ஜையும் நடத்த இருக்கின்றது. ...கார ஆசிரமம் இவ்வுலகை ...க நுணுக்கமாகக் கவனித்து ...ருகிறது. வேத ஒலிகளும், ...களின் ஆனந்த சிரிப்பொலி ...ளும், தவ ஞானிகளின் தவ ...லிகளும் நாள் பூராவும் ...லித்துக்கொண்டிருக்கும் நாடு ...ரதமாகும். இந்த சக்தியினால் ...லகம் வாழ்ந்து கொண்டிருந் ...து. இப்போது அது குறைந்து ...ட்டது. ஓல ஒலிகள் எங்கும் ...கேட்கின்றன. அமங்கல ஒலிகள் ...பெருகுகின்றன. இதைத் தடுத்து ...ந்த வன்முறைகளை நீக்க, ...லகில் அப்போதைக்கப்போது ...ழும் துன்பங்களை நீக்க, ...ண்ட வெளியில் பெரும் மாற் ...றத்தை ஏற்படுத்தவே ஓங்கார ...சிரமம் தன் அதி தீவிர ...ருட்பணியை ஆற்றுகிறது. ...ம் ஆற்றும் இப்பணியினால் ...ண்டவெளியில் பெரும் ...மாற்றத்தைத் தோற்றுவித்து ...ன்பங்களை நீக்க முடியும் ...பதை தத்துவானு பவ பூர்வ ...க இன்று உலகிற்கு நிரூபித்து ...ருகிறது.

...ஆனந்தா ஆசிரமம் ஒன்று ...பணி சுவாமிகள் மடாலயத்தில் ...க்டர் சுவாமி கீதானந்தா அவர்கள் தலைமையில் நடந்து வருகிறது. இவர் யோகாசனத்தில் சிறந்த வல்லமையாளர். தற்போது இவரின் மறைவுக்குப் பிறகு ஸ்ரீ மீனாட்சி தேவி பவானி ஆசிரமத்தை நடத்தி வருகிறார். ஓங்கார ஆசிரமத் திற்கு மிகவும் நெருங்கியவர்கள்.

சண்முக அடிகளார் என்ற சாதனை சித்தர் ஆன்மிகப் பாடங்களை வகுப்புகளாக, புதுவையில் நடத்தி வருகிறார். இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இவை மட்டுமின்றி சன்மார்க்க சங்கம், ஸ்ரீ சத்ய சாயி பாபா சமிதி, மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மன்றம், வேதாத்ரி மகரிஷி இயக்கம், ஸ்ரீ மாதவானந்தா சேவாஸ்ரமம், பரஞ்ஜோதி மகான் இயக்கம், ராஜயோக இயக்கம் ஆகிய ஆன்மிக இயக்கங்களும் உள்ளன.

பாரதம் ஓர் ஆன்மிக பூமி. இங்கு ஆன்மிக சக்தி விளைந்து கொண்டிருக்கிறது. புதுவை எல்லைக்குள் இருந்தாலே இறைவனை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற நினைவு ஜீவர்களுக்கு வரும். இங்கு விளைகிற ஆன்மிக அருட்சக்தி மனித தேகத்தின் மேல் படபட அவர்தம் தேகம் புனிதமாகும். ஞானத்தில் பற்று உண்டாகும். ஆகவே புதுவை அக்காலத்திலிருந்து இக்காலம் வரை வேதம் ஒலிக்கும் வேத பூமியாக, ஓங்காரம் ஒலிக்கும் ஓங்கார பூமியாக, ஞானம் விளங்கும் ஞான பூமியாக, ஆன்மிகம் வளரும் ஆன்மிக பூமியாக, உலகிற்கே அமைதி தரும் அமைதி பூமியாக விளங்குகிறது. பாரதமே உலகிற்கு ஞான சற்குரு என்ற ஸ்ரீ அரவிந்தரின் அருள்வாக்கு புதுவையில்தான் முதன் முதலில் எழுப்பப்பட்டது.

உலகத்து உயிர்கள் அனைத்தும் என்றும் இன்புற்று வாழ ஜெகன்மாதா ஓம் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியை ஆழ்ந்து சிந்தித்து ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகளின் அருளாசியை புதுவைக்குப் பெருமையூட்ட வந்திருக்கும் 'அமுதசுரபி'யின் சிறப்பிதழ் வாசகர்களுக்கு ஓம்கார ஆசிரமம் வழங்குகிறது. சந்தோஷம்.

இதற்குத்தானா?



வெ. இறையன்பு

சிறுவயதில் நொறுக்குத் தீனி – நான்
கேட்டபோதெல்லாம் வாங்கித் தந்தாய்

ஐஸ்கிரீமும், பாப்கார்னும்
எனக்குப் பிடிக்கும் என
உயர்ந்த ரகமாய்க் கொடுத்து
என்னை மகிழ்ச்சியிலே திக்குமுக்காட வைப்பாய்.

நம் தெருவில் இருப்பவர்கள்
முனிசிபல் பள்ளியில் சேர்கையிலே
என்னை 'ஷூ' மாட்டி 'டை' கட்டி
ஆங்கிலப் பள்ளியில் படிக்க வைத்தாய்.

நான் கல்லூரி வந்ததும்
கேட்டவுடன்
பைக் வாங்கித் தந்தாய்.
இத்தனையும் நீ இத்தனை நாள்
வாங்கித் தந்ததெல்லாம்
வரதட்சணை என்ற பேரால்

அப்படியே இன்று என்னை
ஒட்டுமொத்தமாக
விற்கத்தானா?

வீராம்பட்டினம்

கூ. நாராயணசாமி

புதுவை யூனியன் பிரதேசத்தில் புகழ்பெற்ற கடற்கரை கிராமம் வீராம்பட்டினம். புதுவை நகரிலிருந்து தெற்கில் ஒன்பது கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள இக்கிராமத்தில் வாழும் மக்களில் பெரும்பாலோர் மீனவர்கள். புயலிலும், வாடைக்காற்றிலும் கடலுக்குச் செல்ல அவர்கள் தயங்குவதில்லை. இரவிலும், விடியற்காலையிலும் கட்டுமரங்களிலும், விசைப்படகுகளிலும் தங்களது வாழ்க்கையை ஓட்டுவதற்கான வருமானத்திற்காக கடலில் செல்கின்றனர். அவர்கள் சிறிய மீன்கள் முதல் பெரிய மீன்கள் வரை பிடித்துக் கரை சேர்கின்றனர்.

மீனவச் சிறுவர்கள் கடலில் மீன் குஞ்சுகளைப் போல நீந்தி விளையாடுவது ஓர் அற்புதக் காட்சி. கடற்கரையில் வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும் கட்டுமரக்கட்டைகள், கடலில் மிதந்து கொண்டிருக்கும் விசைப்படகுகள்- ஓர் அழகுக்காட்சி. கடலை நோக்கி நிற்கும் உயர்ந்த கோபுரம். அங்குதான் அன்னை செங்கழுநீரம்மன் குடியிருக்கின்றாள். அந்த ஊரைச்சுற்றி பனை, தென்னை, மா, வேம்பு, ஒதியன், நாவல், சவுக்கு முதலிய மரங்கள் அடர்ந்து நிழலையும் பசுமையையும் தருகின்றன.

இந்த கிராமம் வரலாற்றிலும் புகழ்பெற்றது. இக்கிராமத்தின் அருகில்தான்- வரலாற்றாசிரியர் தாலமியாலும், வரலாற்று நூல் "எரித்திரிய கடலில் பெரிபுளூஸ்" என்ற நூலாலும் - சோழமண்டலக் கரையிலிருந்ததாகக் குறிப்பிடப்படும் 'பொதுக்கே' என்ற துறைமுக நகரம் அமைந்திருந்தது என்பதையும் அந்நகரம் வீராம்பட்டினத்தையும் தன்னுள் கொண்டிருநதது என்பதையும் அறிகிறோம்.

'பொதுக்கே' நகரம் செழிப்புற்றிருந்த காலத்தில் (கி.மு.250 லிருந்து கி.பி.200) சீனா, ரோம், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து பலர் இங்குவந்து வாணிபம் செய்தனர். வீராம்பட்டினம் கிராமத்திலிருந்து வடக்கில் அரை கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஓர் ஆறு, முன்பு மிக ஆழமுள்ளதாகவும் கடலிலிருந்து பாய்மரக்கலங்கள் ஆற்றினுள் சென்று வரக்கூடியதாகவும் அமைந்திருந்தது. அவ்வாற்றின் கரையில் அமைந்திருந்தது 'பொதுக்கே' நகரம் அந்நகரம் வெள்ளம், காற்று, மழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் அழிந்துவிட்டது இன்று இப்பகுதி 'அரிக்கமேடு என்றழைக்கப்படுகிறது. இப்பகுதி பிரெஞ்சுக்காரர்களின் கவனத்தைக் கவர்ந்தபின், டாக்டர் அய்யப்பன், சுர்லே, காசல், மார்ட்டிமர் வீலர் முதலியவர்களால் ஆராயப்பட்டது. இங்கு விமலா பெக்லி என்பவர் தமது அகழ்வாய்வுப் பணியைத் தொ ந்து ஆற்றிவருகிறார். அரிக்கமேட்டுப் பகுதியை,

பிரெஞ்சு நூல்கள் வீராம்ப
னம் என்றே குறிப்பிடுகின்

வீராம்பட்டினம்
பெயர் வந்ததைக்குப் பல
கருத்துகள் கூறப்படுகின்
வெளிநாட்டினரின் பொ
களைப் பாதுகாப்பதற்
வீரர்கள குழு ஒன்றிருந்தத
அக்குழுவினர் தங்கியிரு
பகுதியே வீரர்பட்டினம்
அழைக்கப்பட்டு பின்னர் ம
வீராம்பட்டினம் என்று அ
கப்பட்டு வருவதாகவும்
கூறுவர். வீரராகவன் எ
தலைவனால் இவ்வூர் ஆ
பட்டதால் வீரராகவன் ப
னம் என்றழைக்கப்பட்டு பின்
நாளடைவில் மருவி வீராம்ப
னம் என்று வழங்கப்படுவத
கருதுவோரும் உண்டு.

அகநானூறு, புறநானு
முதலிய சங்க நூல்களில் வீர
பட்டினத்தைச் சேர்ந்த வீ
வெளியனாரும், வீரை வெளி
தித்தனாரும் செய்யுட்க
இயற்றியுள்ளனர்.

'முன்றின் மஞ்ஞையொடு
முசுண்டை பம்
பந்தர் வேண்டாப் பலா
தூங்கு நீ
கைம்மான் வேட்டுவன்
கனைதுயின் மடிந்தெல
எனத் தொடங்கும் புறநானூ
றுப் பாடலை இயற்றியவர் வீ
வெளியனார்.

"பெருங்கடல் முகந்த இ
கிளைக்கொண்
இருண்டுயர் விசும்பின்
வலனேர் புவனை
போர்ப்புறு முரசின் இர
முறைபுரிந்

எனத் தொடங்கும் அக
னூற்றுப்பாடலை இயற்றிய
வீரை வெளியன் தித்தன
இச்சங்கப்புலவர்களின் பெய
சேர்ந்துள்ள 'வீரை' என்
வீராம்பட்டினத்தைக் குறிக்

திருப்பாதிரிப்புலியூர் ப
லீஸ்வரர் கோயிலில் உள்ள மு
குலோத்துங்க சோழன் கா
திய இரண்டு சாசனங்

ஒருமைப்பாடு

தீர்க்க முடியாப்
பிரச்னைகள் பலஇருக்கத்
தீர்க்க முடிந்தும்
முடியாமல் இருக்கும்
முடிவுறாக் கணங்கள்.

பசிக்கும் போது
பசியாற்ற முடியாத
எட்டிப் பழங்கள்

முதிரும் முன்னே
கருகிப் போகும்
முல்லைப் பூக்கள்

விரியும் முன்னே
பறிக்கப் படும்
வெண்தாமரைகள்

கண்ணன் ஒருநாளில்
கல்கி அவதாரமெடுத்து
ஜாதிமத இனவெறி பிடித்து
மானுடத்தை அழிக்கும்
பொழுதாவது
அரியபெரிய மனிதர்கள்
ஆசைப்படுகின்ற
ஒருமைப்பாடு தோன்றுமோ?

ஜெயந்தி ஜானகிராமன்

ராம்பட்டினத்தில் வாழ்ந்த விரைத்தலைவன் பரசமய காளரி மாமுனி" என்ற புல ரைப்பற்றிக் கூறுகின்றன. ப்புலவர் அஷ்டாத தசப் ராணம், சன்னிவனப்புராணம், ம்புலியூர் நாடகம் முதலிய ால்களை இயற்றியவர்.

வரலாற்றுப் புகழ்பெற்ற வ்வூரில் அமைந்துள்ள செங் ழுநீரம்மன் கோயில் எந்த ண்டில் கட்டப்பட்டது என்ப ற்கான சான்றுகள் கிடைக்க வில்லை. ஆயினும் சுமார் ானூறு ஆண்டுகட்கு முன்பு க்கோயில் அமைக்கப்பட்டது ன்று மட்டும் தெரிகிறது.

செங்கழுநீரம்மன் ஆலயம்

விராம்பட்டினத்தில் சுமார் ானூறு ஆண்டுகட்கு முன்பு ரராகவச் செட்டியார் என்ப ர் வாழ்ந்துவந்தார். அளவற்ற தெய்வ பக்தி கொண்டவர். வரது தொழில் மீன் பிடிப்பது.

ஒருநாள் காலை தோளில் லை தாங்கி ஊருக்கு மேற் சயுள்ள செங்கழுநீர் ஓடைக்குச் சென்று வலை வீசினார். றுதியில் வலையை இழுத்த பாது அது கனத்தது. பெரிய ன் சிக்கிவிட்டதென்று மகிழ்ந்து லையைக் கரைக்கு இழுத்த பாது வலையில் கனத்தது னல்ல உருண்டு திரண்ட ரு மரக்கட்டை என்பது தெரிந் து. அக்கட்டையை வீட்டிற்குக் கொண்டுவந்து கொல்லைப் றத்தில் போட்டார்.

ஒருநாள் அடுப்பிற்கு விறகு ல்லாமல் போகவே, வீரராகவ செட்டியாரின் மனைவி கொல் லைப்புறத்தில் கிடந்த மரத் ண்டை உடைத்து உபயோகிக்க ண்ணி, கோடாரி கொண்டு ளக்க முற்பட்டார். கோடாரி ரத்துண்டில் பாய்ச்சப்பட்ட ும், கோடாரி பட்ட இடத்திலி ந்து செங்குருதி தோன்றிப் ரிட்டுப்பெருக, வீரராகவன் னைவி அச்சம் கொண்டார். ச்செய்தி ஊரெல்லாம் பரவ அக்கிராமமே திரண்டது. செய்தி யறிந்து வீரராகவன் அம்மரக் கட்டையை வீட்டினுள் கொணர்ந்து பூவும் நீருமிட்டு அர்ச்சித்து மகிழ்வு கொண்டார்.

ஒருநாள் அவர் கனவில் அன்னை தோன்றி "நான் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்பு தெய்விகம் பெற்ற ரேணுகை. நான் அன்னை பராசக்தியின் அருங்கூற்றில் ஒரு பகுதி. நான் இவ்வூரில் கோயில் கொண்டு அருள்வழங்க வந்துள் ளேன். உன்னிடம் இருக்கும் மரத்துண்டைப் பீடமாக ஸ்தா பித்து அதன்மேல் திருஉருவத்தை விக்கிரகத்தால் பிரதிஷ்டை செய்து பூசித்து வழிபட்டு வா. என் திருமேனியை எழுந்தருளச் செய்ய நான் குறிக்குமிடத்தில் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்து மறைந்த பேரருளாளர் ஒருவரின் சமாதி உண்டு. அதுவே எனக்கேற்ற இடம். என்னை செங்கழுநீரம்மன் என்று அழையுங்கள்" என்று கூறி மறைந்தாள்.

மறுநாள் செட்டியார் கனவு நிகழ்ச்சியை அனைவரிடமும் கூறினார். அன்னை குறிப்பிட்ட இடத்தினைத் தேடினார். இறுதி யில் புதர்கள் அடர்ந்த பாம்பின் புற்று வள்ர்ந்தோங்கியுள்ள இடமொன்றைக் கண்டனர். அன்னை குறிப்பிட்டருளிய இடம் இதுவே என எண்ணியபோது திடீரெனப் பேரோசையோடு புற்றிலிருந்து மிகப்பெரிய நாக மொன்று வெளிப்பட்டுப் படம் விரித்து நின்று ஆடிற்று. சிறிது நேரம் கழிந்ததும் படத்தால் சீற்றத்தோடு பேரொலி எழுப்பி மும்முறை பூமியை அடித்து இடம் காட்டிவிட்டு புற்றுக்குள் சென்று மறைந்தது.

அன்னை திருவுருவம் அமைக்க ஏற்ற இடம் இதுவே என்றெண்ணி நாகம் குறிப்பிட்ட இடத்தில் பூமியைத் தோண்ட, சிறிது நேரத்தில் மிகப்பழைமை யான சமாதி ஒன்றின் மேற்பகுதி புலப்பட்டது.

அவ்விடத்தைச் செப்பனிட்டு, வலையில் கிடைத்த மரத்துண் டைப் பீடமாக அமைத்து அன்னையின் அருள்பூத்த முகத்தினை அம்மரத்துண்டின் மேல் எழுந்தருளச் செய்தனர். அக்கட்டை செங்கழுநீர் ஓடையில் கிடைத்தமையால், அன்னைக்கு செங்கழுநீரம்மன் என்று திருநாம மிட்டு, செங்கழுநீரம்மனைத் தங்கள் குல தெய்வமாக எண்ணி மகிழ்ந்தனர். இடம் காட்டிய நாகம் அன்னையின் திருக்கோயி லுக்கும் புற்றுக்குமிடையே நட மாடிக்கொண்டிருந்தது. சில நேரங்களில் அன்னையின் திருமேனியின் மேலேறி அணிகலன் போல் சுற்றிக்கொண்டு நின்ற தைக் கண்டவர்கள் பலரும் உண்டு.

இவ்வன்னையின் திருவிழா ஆடித்திங்கள் முதல் வெள்ளிக் கிழமை தொடங்குகிறது. ஐந்தாம் வெள்ளிக்கிழமை தேர்த்திரு விழா. இத்தேர்த்திருவிழாவை பிரெஞ்சுக்காரர்கள் காலத்திலி ருந்து கவர்னரே (ஆளுநர்) வடத் தைப் பிடித்திழுத்துத் தொடங்கி வைப்பது வழக்கம்.

இவ்விழாவிற்குப் புதுவை மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக் கான மக்கள் வருகிறார்கள். ❀

ஆயுள்

மனித வாழ்வில் எது நடக்கவும் இரண்டு உத்தரவுகள் வேண்டும். 1. ஜீவாத்மாவின் சம்மதம் 2. பரமாத்மாவின் அனுமதி. இவை இரண்டுமில்லாமல் மனிதனுடைய வாழ்வில் எதுவும் நடக்காது. இவையிரண்டும் சேர்ந்தே ஆயுளை நிர்ணயிக்கின்றன. "நான் இறந்து போவேன், தற்கொலை செய்து கொள்வேன்" என்று மனிதன் சொல்வதோ, "நீண்ட நாள் உயிரோடிருக்க வேண்டும்" என விரும்புவதோ மனிதனுடைய மேல் மனம் சொல்வதாகும். மேல் மனம் சொல்லும் எதுவும் ஜீவாத்மாவைக் கட்டுப்படுத்தாது.

"எனக்கு வாழ்வே வெறுத்து விட்டது; வாழவே பிரியமில்லை; எவர் மீதும் அன்பில்லை; சீக்கிரம் போனால் போதும்" என்பவர், நெடுநாள் வாழ்வதும், நீண்டநாள் வாழ ஆழ்ந்த ஆசையுள்ளவர் அகால மரணமடைவதையும் நாம் காண்கிறோம். இதெல்லாம் அவன் வகுத்தது, நாம் பேசுவதில் அர்த்தமில்லை, நம் எண்ணப்படி நடக்கக் கூடியவை அல்ல இவை என நினைத்தது நடக்காதபோது 'விவேகமாக' நாம் பேசுவதோடு இவை முடிவதையும் நாம் காண்கிறோம்.

அன்னைக்கும் நம் ஆயுளுக்கும் என்ன தொடர்பு? இதுவரை சாதகர்கள், பக்தர்கள், அன்பர்கள் அனுபவமென்ன? அன்னை, ஆயுளைப் பற்றி என்ன சொல்கிறார்? அவர் தத்துவம் என்ன?

- யோகத்தை ஏற்ற சாதகர்கள் நீண்ட நாள் வாழ்வது பொதுவான அனுபவம்.

- ஜாதகப்படி ஆயுள் முடிந்த பக்தர்கள், அதன்பின் வாழ்வது பலமுறை நடந்தது.

- ஆயுள் வளர்வதுடன், ஆரோக்கியமும் வளர்வதை நாம் சாதகர்கள், அன்பர்கள் வாழ்வில் காண்கிறோம்.

- உடலைத் திருவுரு மாற்றம் செய்து, மரணத்தை அழிக்க முயல்வது பூரண யோகம் என்பதால், பூரண யோக சக்தி, மரணத்தைத் தள்ளிப் போடுவது இயற்கை.

–'85 ஆம் வயதில் சைக்கிள் விடுவது, 70ஆம் வயதில் 26 மைல் ஓடுவது, 87ஆம் வயதில் தினமும் உடற் பயிற்சி செய்வது சாதகர்கள் வாழ்வில் அதிகமாகக் காண்பதாகும்.

- உடலுள் உள்ள ஜோதி எழும் யோகமாதலால், உடலுக்கு வலிமை மிகுந்து ஆயுள் வளரும்.

- அசைவும், அழிவும் அற்ற ஆன்மா பூரண யோகத்தில் வளர்வதால், அதன் முடிவையும் பூரண யோக சாதகனும், அன்னையை ஏற்றுக் கொண்ட பக்கதனும் நிர்ணயிக்க முடியும்.

- 50 ஆம் வயதில் ஆயுள் முடிந்த ஆசிரம மானேஜரை அன்னை 75ஆம் வயதுவரை உயிரோடு வைத்திருந்தார்.

- 34ஆம் வயதில் ஜாதகப்படி தனக்கு ஆயுள் முடிகிறது என்று அன்னையிடம் சொல்லி அந்த நாள் வந்த பொழுது, மறைந்துவிட்ட சாதகரை அன்னை புன்னகையால் அலங்காரம் செய்தார். அவர் 75 வயது வரை வாழ்ந்திருந்தார்.

- 30,40,50 வயதில் கண்டங்களிருந்தவர் அன்னையை ஏற்றுக்கொண்டு மூன்று கண்டங்களையும் தாண்டிய பிறகும் சில வருடங்கள் உயிரோடிருந்தார்.

- ஜாதகப்படி தாயார், தகப்பனாரை நெடுநாளைக்கு முன் இழந்திருக்க வேண்டிய



'கர்மயோகி'

வரின் ஜாதகத்தைப் பார்த்த ஜோஸ்யரிடம், பெற்றோர் உயிரோடிருக்கிறார்கள் என்று ஜாதகம் பார்க்கவந்த அந்த நபர் சொன்னதைக் கேட்டவுடன், மேற்கொண்டு அந்த ஜாதகத்தை, தாம் பார்ப்பதில் அர்த்தமில்லை எனத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

சமையல் வேலை செய்த ஒரு பிரம்மச்சாரி, அன்பர் வீட்டில் ஒருநாள் வேலை செய்தார். சிவபக்தி மிக்கவர். தனக்கு நிலை இழந்தபின், தன் இரு நண்பர்களிடம் "எப்படியாவது என்னைப் பாண்டிச்சேரிக்கு அழைத்துப் போனால் தேவலை" என்று வேண்டிக் கொண்ட தன்பேரில், நடக்க முடியாதவரை இருவரும் சிரமத்தோடு பஸ்ஸில் ஏற்றி, பாண்டிச்சேரியில் அன்பர் வீட்டிற்குக் கொண்டுவந்து விட்டு விட்டுப் போய்விட்டனர். ஒருநாள் வேலை கொடுத்த அன்பர், லேசாக அறிமுகமான அக்ஷயலிங்கத்தை, இந்நிலையில் என்ன செய்வது என்றறியாமல் திகைத்து நின்றார். அக்ஷயலிங்கத்தால் உட்கார முடியவில்லை; நிற்க முடியவில்லை. வயதானவர். இவருக்கு யார் பணிவிடை செய்வது? அன்பர் வாடகை வீட்டில் குடியிருந்தார். வீட்டுச் சொந்தக்காரர் மாடியில் இருந்தார்.

இவருடைய நிலையைக் கண்டு, வீட்டுச் சொந்தக்காரர் வருத்தப்பட்டு, அன்பரிடம், "அக்ஷயலிங்கம் அதிகநாள் தள்ளமாட்டார், இவர் பிரம்மச்சாரி. பிரம்மச்சாரி என் வீட்டில் இறப்பது எனக்குச் சம்மதமில்லை; இவரை உடனே அப்புறப்படுத்தவும்" என நிர்ப்பந்தம் செய்தார். அன்பர் போகும் வழி எதுவும் தெரியவில்லை. அக்ஷயலிங்கத்தின் நிலை மோசமாகி விடவே, அன்றிரவு வரை தாங் காது என்றாகிவிட்டது. வீட்டுக்காரர் நிர்ப்பந்தம் ஒரு பக்கம், சம்பந்தமில்லாத யாரோ ஒருவர் தன் வீட்டில் வந்து இறந்தால், அதற்குரிய கடமைகள், பொறுப்புகள் அடுத்த பக்கம், அன்பர் விழிபிதுங்கினார். "எதுவானாலும் சரி, இவரால் எனக்கு எந்த இடையூறும் வரக் கூடாது என்று முடிவு செய்து, அன்னையிடம் பிரார்த்தனை செய்" என்பதை அன்பர் ஏற்றுக் கொண்டு தைரியமாக வீட்டுக்குப் போனார். அக்ஷயலிங்கம் நிலைமை தவறி கடைசிக் கட்டத்தை அடைந்து தூங்கிவிட்டார். அன்பர், அன்னை விட்ட வழி என உறங்கினார்.

மறுநாள் காலையில் நிலைமை எப்படி யிருக்கிறது என்று பார்க்க அன்பர் சென்ற பொழுது அக்ஷயலிங்கம் தெளிவடைந்திருந் தார். "அரவிந்த கோஷ் என்ன சொல்கிறார்" என்றும் அன்பரைக் கேட்டார். கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவடைந்து விட்டார். "நான் என் ஊருக்குப் போகிறேன்" என்றார். அவர் நண்பர்கள் வந்து அவரை அழைத்துப் போய் விட்டனர். வீட்டுக்குச் சொந்தக்காரர் "எனக்கு இப்பொழுதுதான் நிம்மதி. அன்றிரவு எப் படியோ எமனை ஏமாற்றிவிட்டார் அய்யர்" என்று ஆச்சரியமாகச் சொன்னார்.

நான் கடலூரில் ஆசிரியராக இருந்தவரை சக ஆசிரியர்களிடமோ, மாணவர்களிடமோ ஆசிரமத்தைப் பற்றிப் பேசுவதேயில்லை. அபிப்பிராயம் சரியில்லாதவர்களிடம் அன்னை யைப் பற்றி எப்படிப் பேசுவது? தொழிலை விட்ட இரண்டாம் வருஷம் என் பழைய மாணவன் ஒருவன் அப்பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து கொண்டிருந்தவன் என்னைத் தேடி வந்து, "தகப்பனாருக்கு வயது எழுபதைத் தாண்டிவிட்டது. நிற்காமல் வயிற்றுப்போக்கு. தேறாது எனத் தெரிகிறது. யாரும் தைரியம் சொல்லவில்லை. எனக்கு ஒரு தங்கை. இரண்டு வருஷம் தகப்பனார் உயிருடனிருந் தால், தங்கை திருமணம், மற்ற குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றி விடுவார். ஏதாவது செய்ய முடியுமா?" எனக் கேட்ட பொழுது எனக்கு ஆச்சரியமும், சந்தோஷமும் எழுந்தன. இது எனக்கு அங்கு புது அனுபவம். அன்று ஆசிரமம் வந்தபொழுது blessing packet வாங்கி பையனிடம் கொடுத்தேன். தகப்பனார் கண்டத்தைத் தாண்டிவிட்டார்.

81ஆம் வயதில் நினைவிழந்தவர் (Stroke) சமாதிபுஷ்பம் கேட்டார். சமாதிபுஷ்பம் அவரை நர்சிங்ஹோமிலிருந்து ஒருவாரத்தில் நல்லபடி யாக அழைத்து வந்தது. இப்பொழுது அவருக்கு 94 வயது.

70 வயதைக் கடந்து மூச்சுவிட முடியாமல் ஆஸ்பத்திரிக்குப் போனவரை "அடுத்தமுறை இது வந்தால் தாங்காது" என்றனர். மேலும் இருமுறை ஆஸ்பத்திரிக்குப் போனார். அவரை உயிர்ப்பிக்க முடியும் என்பதை அவர் மகன் நம்பவில்லை. மகனும், பக்தரும் ஆஸ்பத் திரிக்குப் போய் அவருடன் பேசிவிட்டு வரும் பொழுது பக்தர், "உங்கள் தகப்பனார் ஒரு வாரத்தில் குணமடைவார்" என உறுதியளித்துக் கொண்டிருக்கும் பொழுது, தகப்பனார் எழுந்து வீட்டிற்குப் போய்விட்டார் என்ற செய்தி வந்தது. மேலும் 20 ஆண்டு உயிரோடிருந்தார். இந்த நிகழ்ச்சியை சுமார் 100 பேரிடமாவது காரி ஜேக்கப் சொல்லியிருப்பார்.

கான்சர் வந்தும், மகள் பிரார்த்தனையில் பிழைத்துக் கொண்ட தகப்பனார் ஒருவர், 'தீண்டிய திருவடி' என்று சுமார் 10 ஆண்டுகட்கு முன் 'அமுதசுரபி'யில் எழுதிய கட்டுரையில் 'சாதகர் அன்னையின் திருவடியால் நெஞ்சம்

புனிதப்பட வேண்டும் எனக் கடைசி நேரத்தில் சைகையால் காட்டிப் பெற்று, பிறகு நெடுநாள் வாழ்ந்தார்' எனக் குறிப்பிட்டிருந்தேன்.

குடலின் நிலையைக் கண்ட டாக்டர் "24 மணி நேரத்துக்குள் ஆபரேஷன் செய்ய வேண்டும், செய்தாலும் பிழைக்கும் என உத்திரவாதம் தரமுடியாது" என்றதைக் கேட்ட கர்ப்பிணி அன்னை பிரசாதம் பெற்று 20 நாள்களுக்குப் பின் மறுநாள் எழுந்து நடந்து, உயிர்பிழைத்து சுகப்பிரசவமாகி, 20 ஆண்டு கழித்து வேறு கோளாறால் நிலையிழந்த பின் ஆஸ்பத்திரியில் சேர்ந்து, எந்த டாக்டருக்கும் பிடிபடாத நேரத்தில், குடும்பத்தினர் பிரார்த்தனையால், உடலைவிட்டுப் பிரிந்து வெளியே வந்த உயிர், மீண்டும் 4ஆம் நாள் உடலில் புகுந்தபின் டாக்டர், "இனி பிழைத்துக் கொள்வார்" என்றார். உயிர் பிரியும் தருணம். எனவே போய்ப் பார்க்க வேண்டும் என்று 80 வயதைத் தாண்டியவரை ஆஸ்பத்திரியில் இவர் போய்ப் பார்த்து அவரும் பிழைத்துக் கொண்டார். அதுவும் இருமுறை நடந்தது.

ஒரு கான்சர் வியாதியஸ்தருக்காக அவர் பெண்கள் இருவர் தீவிரப் பிரார்த்தனை செய்தனர். ஒரு வாரம் தெளிந்து பிறகு இறந்து விட்டார். பெண்களால் அதைத் தாங்க முடியாமல் "ஏன் அன்னை எங்கள் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்ளவில்லை?" என்று கேட்டனர்.

வயதான தாயாருக்காக ஆழ்ந்த பிரார்த்தனையை மேற்கொண்ட வக்கீல், "எனது தாயார் பிழைக்க வேண்டும்" எனப் பிரார்த்தனை செய்தார். "என் பிரார்த்தனை பலிக்கவில்லை' என்று எழுதியிருந்தார்.

தன் 82 வயது தாயார் படுத்த படுக்கையாக இருப்பதாகவும் நோய் எதுவும் இல்லை, வயதால் ஏற்பட்ட தளர்ச்சிதான் என்று பிரசாதம் எழுதிக் கேட்ட பேராசிரியர், "ஆசிரமப் பிரசாதம் வந்த அன்று என் தாயார் காலமானார்" என்று எழுதினார்.

பக்தி, ஆசாரம் மேலீட்டால் உற்றார், உறவினருக்கு குரு போன்றவர் ஆசிரமம் வந்தார். முகம் பிரகாசமாக இருந்தது. உடலில் தெம்பு வந்து தெளிவாக ஆசிரமத்தில் நடக்க முடிந்தது. பெரும் நிம்மதியுடன் ஊர் திரும்பினார். இரண்டாம் மாதம் காலமானார்.

→

ஓர் இன்ஜினியர் தன் மாமியாரை சமாதிக்கு அழைத்து வந்தார். அவர் ஊருக்குப் போய் "நான் எவருக்கும் தொந்தரவு கொடுக்காமல், படுக்காமல், திடீரென காலமாக வேண்டும் என்று சமாதியில் பிரார்த்தனை செய்தேன்" என எழுதியிருந்தார். மறுநாள் காலமானார்.

65 வயதான ஒரு பெண் தன் 92 வயதான தாயார் சிரமமின்றி சிவபதமடைய வேண்டும் என்ற பிரார்த்தனையை எழுதி அனுப்பினார்.

கான்சர் பிரார்த்தனையால் குணமாகும். ஆனால் ஏதோ காரணத்திற்காக தன் வாழ்வு முடிய வேண்டும் என ஆழ்ந்து நினைத்தபின், அதுவே பலிக்கும். ஆழ்ந்து மனதில் படுவது ஆன்மாவின் முடிவின் பிரதிபலிப்பு. பெண்கள் பிரார்த்தனை அதைத் தடுக்காது. மரணத்தை எதிர்நோக்குபவர் தான் பிழைக்க விரும்புவதாகப் பிள்ளைகளிடம் சொல்வது வேறு, அவர்கள் மனதிலிருப்பது வேறு. வேறு தயக்கமில்லாமல் வியாதியஸ்தரே அன்னைக்குப் பிரார்த்தனை செய்தால், அந்தப் பிரார்த்தனை பலிக்கத் தவறுவதில்லை.

- மனம் போக நினைத்து, வாய் பிறருக்காக பிழைக்க வேண்டுமென்பது;

- ஆழ்ந்த மனம் முடிவை விரும்பி, மனத்தால் (மேல்) போக பிரியப்படாதது, போன்ற நிலையில் பிறர் செய்யும் பிரார்த்தனை பலிக்காது.

வயதான காலத்தில், பற்று குடும்பத்திலும், மனம் இறைவனிடமும் பிரிந்து நின்று போராடும். அந்நிலையில் அன்னை பிரசாதம், இறைவனை நாடும் மனத்தின் அபிலாஷையை உடனே பூர்த்தி செய்யும். அதனால்தான் பிரசாதம் வந்த அன்று உயிர் பிரிகிறது.

மனிதர்கள் பல வகை. அதில் ஒரு வகையினர், தாம் இறந்தாலும் பரவாயில்லை, மற்றவர் அதனால் சோகமடைவார்கள் என்றால், அதற்காக இறக்கப் பிரியப்படுபவருண்டு. அதைச் சொல்வதும் உண்டு. "என் அருமை உங்களுக்கெல்லாம் தெரியாது. நான் போனபின் நீங்கள் அவதிப்படுவீர்கள். அதற்காகவே நான் சீக்கிரம் போக வேண்டும்" என்பதுண்டு.

மரணப்படுக்கையில் டாக்டர் சொல்லைப் பொய்க்கச் செய்து, எமனை ஏமாற்றி, ஜோஸ்யம் பொய்க்குமாறு பிழைத்தவர்கள் பலருண்டு. இதற்கு மாறாக "ஏன் என் மனைவி பிழைக்கவில்லை?" என்று கேட்டவர்கள் பலர். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இணைந்து முடிவெடுத்தால், அதை மாற்றுவது எப்படி என்பதும் கேள்வி. ஸ்ரீ அரவிந்தரின் பரிபூரண யோகம் ஜீவாத்மாவை விழிக்கச் செய்து, அதன் இயல்பான தன்மையை - அசைவு, அழிவு இல்லாது - மாற்றி, பரமாத்மாவுக்குச்சரணடையச் செய்வது. ஜீவாத்மா என்பது மனிதனுடைய ஆத்மா. பொதுவாக மனிதன் ஆத்மாவுக்கு உட்பட்டவன். அன்னையை ஆன்ம விழிப்புடன் ஏற்றுக் கொண்டவர்கட்கு ஆத்மாவுட்பட்டது. எனவே முடிவு ஆத்மாவினுடையதன்று; அவர்களுடையது. அவர்கள் விருப்பப்பட்டால் போகலாம்; விருப்பப்படாவிட்டால் போக முடியாது.

பெரிய வருமானம், உத்தியோகமுள்ள கணவன், மனைவி இருவரில் கணவனின் போக்கு மனைவிக்கு ஒத்து வரவில்லை. அவர் பெரிய வருமானம் அவர் வீண் செலவுக்குத்தான் சரியாக இருக்கிறது. குடும்பத்திற்கு அவரால் பலன் இல்லை. மனத்தால் "சனியன் ஒழியாதா? தொலைந்தால் தேவலை, இருந்து என்ன பலன்?" என்று நினைத்தது சிலசமயம் வாயால் வெளிவந்துவிடும். அவரும் போய் விட்டார். போனபின், அவரிருக்கும் பொழுது தாம் நினைத்தது, சொன்னதையெல்லாம் மறந்து, "அன்னை ஏன் இந்நிலைக்கு ஆளாக்கினார்?" என்றார். இந்நிலையை உருவாக்கியது அன்னையல்லர்; அவரேயாவார்.

வயதானவர் படுத்துவிட்டால், அன்பாக கவனிப்பவர் பலர். "யார் வேலை செய்வது? சீக்கிரம் போய்த் தொலையக் கூடாதா?" என்று பேசி தன் மனதை வெட்கமில்லாமல் வெளிப்படுத்துபவரும் உண்டு. "ஒரு டிக்கட் குறையும், இது ஏன் இழுத்துக் கொண்டிருக்கிறது?" என்றவர், அவர் இறந்தபின் "அன்னைக்குச் செய்த பிரார்த்தனை ஏன் பலிக்கவில்லை?" என்று கேட்பதுண்டு.

மரணப் படுக்கையிலுள்ளவர், தாம் பிழைக்க வேண்டும் என உண்மையாக விரும்பினாலும், அவரைச் சேர்ந்தவர் உண்மையில் அன்பு நிறைந்த பிரார்த்தனை செய்தாலும், அன்புக்கும், உணர்வுக்கும், ஆர்வத்திற்கும், பிரார்த்தனை தவறாது பலிக்கும்.

ஜீவாத்மாவின் முடிவு மாற்றத்திற்குரியதல்ல.

ஆனால் அன்னை பக்தர்களுக்கு ஜீவன் விரும்பினால், சட்டத்தை மீறி மாறும். அன்னை உலகையும், பரிணாமத்தையும் மாற்ற வந்தவர். அவரிடம் பலன் பெறத் தேவையானவை இரண்டு :

1. மனத்தில் உண்மை. 2. உண்மையான நம்பிக்கை.

சிரித்துக் கொண்டே...

காலையிலேயிருந்து தண்ணீருக்குக் காத்திருந்து ஒரே பக்கெட் தண்ணீரில் குளித்ததாக எண்ணிக் கொண்டு தலையைத் துடைத்துக் கொண்டு ஜன்னலடியில் விஸ்வேஷ் வந்து நின்ற பொழுது ஜில்லென்ற ஐஸ் தண்ணீரில் குளித்தது போல மலர்ந்து போனான். தலையைத் துவட்டிக் கொள்ள மனமில்லை. துவட்டிக் கொள்ளும் நேரத்தில் துண்டு மறைத்துவிட்டால்?

எதிர்வீட்டு ஜன்னலில் வந்து நின்ற டீன் ஏஜ் தேவதைதான் அவன் மனதினுள் மத்தாப்பாகச் சுடர்விட்டாள். சுரிதாரிலோ, மிடியிலோ இல்லை அவள். தழையத் தழையப் புடைவை கட்டி நீண்ட பின்னலில் பூச்சூடி....

அத்தை மகள் ரம்யா ஏனோ அந்தக் கணத்தில் நினைவுக்கு வந்தாள். கொஞ்சம் குட்டைதான். தலையை ஒட்ட வெட்டிக் கொண்டு, உதட்டுப் பூச்சுடன் தக்குத் தக்கென்று நடக்கும் பொழுது ஆணுக்குப் பெண் வேடம் போட்ட மாதிரி இருக்கும். பிறந்தது முதலே இவனுக்குத்தான் அவள் என்று கல்வெட்டுச் சாசனம் போலப் பேச்சு.

அம்மா காப்பியைக் கொண்டு வைத்தாள்.

"என்னடா, பார்க்கறே? எதிர் வீட்ல குடிவந்துட்டாங்க!"

துணுக்கென்று அவன் பார்க்க அவனுடைய தேவதை மறைந்து விட்டிருந்தாள். அசட்டுச் சிரிப்புடன் காப்பியை எடுத்து உறிஞ்சினான்.

தலை சீவும் பொழுதும், உடை உடுத்தும் பொழுதும், சாப்பிடும் பொழுதும் மனசு எதிர்வீட்டுக்கே ஓடியது."எங்கடா ஞாபகம்?" என்று அம்மா அதட்டினாள்.

"எல்லாம் ஆபீஸ் நினைவுதான்!" சமாளித்துக் கொண்டான்.

அலுவலகத்தில்கூட அவன் நினைவில் அவள் வந்து போகிறாள். பெயர் என்னவாக இருக்கும்?

'கோமதியின் காதலன்' படத்தில் சீர்காழி பாடுவாரே! "வான மீதில் நீந்தியோடும் - வெண்ணிலாவே, நீதான் வந்ததேனோ ஜன்னலுக்குள் - வெண்ணிலாவே" என்று ஒரு பாடல்.

அது - இவளுக்குப் பொருத்தமான வரிகளோ? இவளுக்குப் பெயர் வெண்ணிலா என்று வைத்தால் என்ன?

"டேய் விஷு! காண்டீனுக்கு வர்றியா?" என்று ரவி கேட்க, தன்னை மறந்து "வெண்ணிலா" என்று விஸ்வேஷ் பதில் சொல்ல... அகப்பட்டுக் கொண்டான்.

"யார்டா வெண்ணிலா?"

"ஒண்ணுமில்லேடா!"

"சொல்லலேன்னா உதைப்பேன், பயலே!"

சொன்னான், சின்னதாக! 'வனிதையே உன்னைப் பற்றி வர்ணிக்க வார்த்தைகள் இல்லையே?'

மாலை வீட்டிற்குப் போகும் பொழுது வாசலிலேயே அழைத்தது பாட்டு. யார் பாடுவது? மெதுவாகச் செருப்பை உதறிவிட்டு ஹாலுக்குள் நுழைந்தான். எதிர்வீட்டுப் பேரழகிதான் பாடிக் கொண்டிருந்தாள். இவனைக் கண்டதும் நாணத்தால் தலை கவிழ்ந்தாள்.

"நானும் உனைப் பார்த்துவிட்டால் வெண்ணிலாவே - முகம் நாணியே மறைவ தேனோ வெண்ணிலாவே!"

பாட்டு நின்றது.

அம்மா இவனைப் பார்த்து "வாடா விஷு! இவள்தான் எதிர் வீட்டுப் பெண். பெயர் பாரதி. இவள் அப்பா ஏதோ கம்பெனியில இருக்கார். இவ குழந்தைகளுக்கெல்லாம் பாட்டு சொல்லித் தராளாம்!" அம்மா விவரித்தாள்.

அவன் சின்னப் புன்னகையை வீசினான். மனதிற்குள் பாரதி என்ற பெயரே உலா வந்தது. 'என் தேவதையே! எனக்குள் நீ எப்போதும் பாடிக் கொண்டிருப்பது உனக்குத் தெரியுமா?'

அவன் நல்ல பிள்ளையாக கௌரவமாக உள்ளே போய் விட்டான்.

"வரேம்மா!" என்ற பாரதியின் வீணையொத்த குரல் காதில் மோதியது.

முகத்தில் தண்ணீரை வாரி ஊற்றிக் கொள்ளும் பொழுது. 'இதென்ன உணர்வு?' என்று அரற்ற, 'இதுதான் காதலா?' என்று மனசு சந்தேகிக்க... ஒரு நாளில் காதல் வருமா? என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்ள...

ஒரு மாதம் ஓடியது. ஜன்னலில் பார்த்து, சின்னப் புன்னகை புரிந்து, கண்களால் பேச முயன்று...

சரியாக ஆறு மணிக்கெல்லாம் தவறாமல் வீடு வந்து விடும் மகனைக் கண்டு அம்மா அதிசயித்துப் போனாள்.

"என்னடா அதிசயமா இருக்கு?"

"ஒண்ணுமில்லம்மா... வந்து... பரீட்சைக்குப் படிக்கலாமேன்னு தான். பிரமோஷன் வேணுமே? எத்தனை நாள்தான் இந்த சூப்பிரண்ட் உத்யோகத்திலேயே இருக்கிறது?"

அம்மா நம்பினாள். மகன் நல்ல இடத்தில் பெண் எடுத்து, வீடு வாசல் என்று சொத்து சேர்த்து, பேரன், பேத்திகளைப் பாட்டி கையில் கொடுத்து... கனவுகள் எல்லையே இல்லாத விரிவுகளாயின.

அன்று எதிர்பாராத விதமாக பாரதியை விஸ்வேஷ் கடைத்தெருவில் பார்த்து விட்டான். பெயரைச் சொல்லிக் கூப்பிடக் கூச்சம். ஓட்டினாற்போலப் பின்னால் ஓடி... "பாட்டு ட்யூஷன் எடுக்கப் போறீங்களா?" என்று கேட்டு...

லட்சுமி ராஜரத்தினம்

அவள் திரும்பிப் பார்த்தாள். ...கம் சூரிய காந்திப்பூ... சட் ...டன்று கண்கள் பூமியை நாக்கின.

"என்னங்க,பேசமாட்டீங்களா?"

இதழ்கள் ஆயிரம் கோணல் ...களுடன் ஒரு சிரிப்பை உதிர்க்க ...யூஷன் முடிஞ்சு போறீங்களா?" ...ன்றுகேட்டாள்.

"ஆமாங்க!"

"நான் ட்யூஷன் சொல்லிக் ...காடுக்கப் போறேன்!" என்றவள், ...ான் போகும் இடத்தைக் குறிப் ...ட்டுச் சொன்னாள்.

"அது ரொம்பத் தனிமையான ...டமாச்சே" கவலைப்பட்டு அவன் ...சாரித்தான்.

"ஆமாங்க. பணக்காரங்க ...ருக்கிற இடம். நிறையப் பணம் ...ராங்க. ஒரு ட்யூஷனுக்கே மூந் ...று ரூபாய் வரும்".

"உங்க குரலுக்கு இதைவிட ...திகம் தரலாம்!"

வெட்கப்பட்டுக் கொண்டாள்.

இந்த நட்பு தொடர்ந்தது.

அத்தையிடமிருந்து கடிதம் ...ந்தது. இந்த வருடம் ரம்யா ...க்குக் கண்டிப்பாக கல்யாணம் ...சய்ய உத்தேசித்திருப்பதாக ...ழுதி இருந்தாள். அம்மா அவ ...ிடம் கடிதத்தைக் காட்டினாள்.

"என்னடா எழுதட்டும், ...த்தைக்கு?"

"என் அலுவலகத் தேர்வுகள் ...டியட்டும், அம்மா! இன் ...னாண்ணும் உங்கிட்ட கேட் ...ணும். ரம்யாவோட நாகரிகம் ...னக்குச் சரிப்பட்டு வருமா?"

அம்மா அவனையே பார்க்கி ...ாள். அவளின் அனுபவம், தாய் ...ன்ற தெய்வீகம் மகனின் ...னதைப் புரிந்து கொண்டது.

"குழந்தையிலே இருந்து உனக் ...ன்னு பேசப்பட்ட உறவு. இப்ப ...ல்லேன்னு சொன்னா, அத்தை ...டிஞ்சு போயிடுவா! நீ நல்லா ...ாசனை பண்ணிச் சொல்லு! ...ன் மனசுல ஏதோ இருக்குது!" ...ன்ற அம்மா, மகனைச் சங்கடப் ...டுத்தாமல் உள்ளே போனாள்.

அம்மா புரிந்து கொண்டு ...ிட்டாளோ என்ற தவிப்பு... புரிந்து கொண்டால் நல்லதுதானே என்ற ஆசை, உந்தல் என்று குழம்பினான். அலுவலகத்திலும் வேலை ஓடாமல் வெறும் எண்ண ஓட்டங்கள்...

'சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ!' அலைபாயும் சுழல்களை அடக்க முடியவில்லை.

"என்ன விஷு! உன் நினைவுகள் இங்கே இல்ல,போல இருக்குதே?" ரவிதான் அவனை இழுத்து நிறுத்தினான்.

"அப்படி எல்லாம் ஒண்ணு மில்ல!"

"உன் கனவுகளை உன் முகமே சொல்லுதுப்பா!"

முகத்தில் அசடு வழியத் தலையைக் குனிந்து கொண்டான்.

வழக்கத்திற்கு விரோதமாக சீக்கிரமாகவே சென்று பாரதி வரும் வழியில் நின்றான்.

"பாரதி...!"

அவள் இவனை எதிர்பார்க் கவே இல்லை.

"சீக்கிரமா வந்துட்டீங்களா?"

மரங்கள் அடர்ந்த அந்தச் சாலையில் தனிமை இனிமை கூட்டியது.

"உன்னைத் தனியாப் பார்க் கணும்னுதான் வந்தேன்".

"என்ன விஷயம் விஷு?"

பெருமூச்சு நெஞ்சை அடைக்க அவளையே பார்த்தான்.

"சொல்லட்டுமா?"

"சொல்லுங்க!"

"சொல்லிடுவேன்!"

"பயப்படுத்தாதீங்க. சும்மா... சொல்லுங்க!"

"ஐ லவ் யு, ஸோ மச்!" என்றவன், அவளது வலக்கரத்தைப் பற்றித் தனக்குள் சிறை வைத் தான்.

அவளால் பேச முடியவில்லை.

"உன் பதிலை எதிர்பார்க் கிறேன், பாரதி! உனக்காக என் அத்தை மகளைக்கூட வேண் டாம்னு சொல்லிட்டேன், பாரதி".

கையை விடுவித்துக் கொண் டாள் பாரதி.

"என்னைப் பிடிக்கல்லையா, பாரதி?"

"பிடிச்சிருக்கு, விஷு! ஆனா எங்க வீட்டிலே அப்பா என்ன சொல்றாரோ... அதேதான் முடிவு. அப்பாகிட்ட வந்து பேசுங்க!"

ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்காத குணம் உண்டு என்பார்கள். அதனால் பாரதி பாட்டு வகுப்பு எடுத்துவிட்டு வருவதற்குள் நேராக பாரதியின் வீட்டுக்குத்தான் போனான், விஸ்வேஷ்.

"வாங்க, தம்பி! உட்காருங்க!"

உட்கார்ந்ததும் எதிர்வீட்டுப் பையன் என்ற அறிமுகம் இயல் பாகப் பேச வைத்தது. காப்பி வந்தது. சினிமா, அரசியல் என்ற உலக நடப்புக் கட்டத்தைத் தாண்டி அவன் தன் காதலைத் தொட்டுக் காட்ட...

சிவகாசி பட்டாசுத் தொழிற் சாலையில் ஏற்பட்ட தீ விபத்தாக வெடித்தார் அவர்.

"எங்க சாதி, எங்க சனம், உறவு முறை என்று எதுவுமே இல்லை. எப்படி பெண் கேட்டே? காதலா? என் பெண்ணுக்கு என் னால் கல்யாணம் செய்து வைக்க முடியும். ஐ ஸே கெட் அவுட்!" என்று அவர் வாசலைச் சுட்டிக் காட்ட...

புயலாகச் சீறிய கோபக்காற் றில் வீசி எறியப்பட்ட சருகாகத் தன் வீட்டில் வந்து விழுந்தான்.


பத்து நாள்கள்...

வெளியுலக நடப்புகளை எல் லாம் வெறுத்து ஒதுக்கும் குமைச் சல்... தொட்டுப் பார்த்துவிட்டு அவனுக்கு உடம்பு சரியில்லையோ என்று எண்ணிய அம்மா, கசக்கக் கசக்கக் கஷாயம் வைத்துத் தந் தாள்.

"என்னப்பா! உடம்பு சரி யில்லையா?"

அம்மாவிடம் என்னவென்று சொல்வது? எதிர்வீட்டு மனிதர் தன்னை எச்சிலையாக எண்ணி வீசி எறிந்து விட்டார் என்று சொன்னால் அம்மா தாங்கிக் கொள்வாளா?

அவன் மௌனத்தைக் கண்டு விட்டு "ஒய்வே இல்லாத அலைச்



சல்... பேசாம படுத்துக்கிட!" என்றாள் அம்மா.

கேபிள் டி.வி.யும், வி.சி.ஆருமே உலகமாக ஆகியது. ரவி வந்து பார்த்துவிட்டு, கட்டாயப்படுத்தி அலுவலகத்துக்கு அழைத்துப் போனான். வேலைகள் அவனைச் சூழ்ந்து கொள்ளவே அலுவலகத்தை விட்டுக் கிளம்ப இரவு ஏழு, எட்டு என்று ஆயிற்று.

அம்மாவைச் சிரமப்படுத்தக் கூடாது என்று எண்ணி ஏதாவது ஓர் உணவகத்தில் உணவை முடித்துக் கொண்டு வந்துவிடுவான்.

அன்று அலுவலகத்தை விட்டுக் கிளம்பும் பொழுது மணி ஒன்பதாகி விட்டது. உணவை முடித்துக் கொண்டு வீட்டிற்குப் போய் என்ன செய்யப் போகிறோம் என்ற விரக்தியுடன் பாதையில் நடந்து வந்தான். அந்தத் தனிமையான சாலையில் வரும்

பொழுது பாரதியின் நினைவு காற்றில் கலந்து வரும் மலரின் மணமாக நெஞ்சில் எழுந்தது.

ஒ... அவளின் மனவாசலின் நுழைவு அவனுக்குத் திறக்க வில்லையோ? எதற்காக நினைவு மட்டும் இப்படி தன்னை அவலப் படுத்த வேண்டும்? பாரதி என்ற நந்தவனத்தில் அவன் ஏன் சருகாகப் புரட்டி அலைக்கழிக்கப் படுகிறான்?

அவன் மெல்ல நடந்து வந்த பொழுதுதான் அந்த முனகல் கேட்டது. சற்று நின்று பார்த்தான்.

யார் முனகுகிறார்கள்...? மெல்லிய முனகல் என்பதனால் அது பெண் குரல் என்று புரிந்து கொண்டு கைப்பையிலிருந்து டார்ச்சை அடித்துப் பார்த்தான்.

அடர்ந்த அந்த மரத்தடியில் கிடப்பது யார்?

டார்ச் ஒளி முகத்தில் பாய... அவள் கண்களைத் திறக்க...

"பாரதி" என்று அதிர்கிறான்.

"விஷ்", நீங்களா? யாரோ ஒரு முரடன் என்னைத் துரத்திக் கொண்டு வந்து... ஐயோ... என் வாழ்க்கையே பாழாயிடுச்சு, விஷ்!" கதறினாள், அவள்.

மயக்கமும், அரை நினைவுமாக விஸ்வேஷ் பாரதியைக் கொண்டு வந்து அவளது வீட்டில் போட்ட பொழுது பாரதியின் அப்பா துடித்துப் போனார்.

"என்ன ஆச்சுப்பா?"

"பாரதியே சொல்லுவா, கேட்டுக்குங்க!" அங்கே அவர் முன்பு நிற்கப் பிடிக்காமல் வெளியேறினான், விஸ்வேஷ்.

ஒரு மாதம் போல ஒடியது. அன்று ஞாயிற்றுக்கிழமை. டெக்கில் ஏதோ ஒரு படத்தைப் போட்டுவிட்டு உட்கார்ந்திருந்தான், விஸ்வேஷ்.

"விஷ்! எதிர் வீட்டுப் பெண்ணும், அவ அப்பாவும் வந்திருக்காங்க!" அம்மா அறிவித்தாள். எழுந்து சென்று, வரவேற்றான்.

"வாங்க, உட்காருங்க!"

பாரதியின் அப்பா சோபாவின் விளிம்பில் பட்டும் படாமலும் உட்கார்ந்தார். "பாரதி நடந்ததை எல்லாம் சொன்னா...! என் மகளை பத்திரமா கொண்டு வந்து சேர்த்துட்டிங்க!"

"வர்ற வழியில கிடந்தவளைத் தான் கொண்டு வந்து சேர்த்தேன். ஆனா, நடந்ததைத் தடுக்க என்னால முடியல்ல. கொஞ்சம் முன்னாலே வந்திருந்தா நடந்த விபரீதத்தைத் தடுத்திருப்பேன்!" என்றான், விஷ்.

"அவ மனசையும், உடம்பையும் தேத்த ஒரு மாசம் ஆச்சு. பெண் ஆச்சேன்னு போலீஸ் கம்ப்ளெய்ண்ட் தரல்ல. பாதிக்கப்பட்ட உடம்பை டாக்டர் எப்படியோ தேத்திட்டாங்க. அவ மனசைத் தேத்த யாராலும் முடியல்ல!"

"கவலைப்படாதீங்க. காலம் தேத்திடும்!"

"உங்களுக்கு நன்றி சொல்லத் தான் வந்தோம்!"

எழுந்து நின்றார் அவர். பாரதி உத்திரத்தையே வெறித்துக் கொண்டு நின்றாள்.

"நான் கல்யாணம் செய்துக்க உத்தேசித்திருக்கேன்" என்றான் விஷ்.

"ரொம்ப சந்தோஷம். வாழ்த்துகள்!"

"பத்திரிகை அச்சிடக் கொடுக்கணும். எழுதி வச்சிருக்கேன். பெரியவர் நீங்க... சரியா இருக்கான்னு பார்த்தா எனக்கு மகிழ்ச்சியா இருக்கும்".

"படி ஏறி வந்து பெண் கேட்ட உன்னை வெளியே கெட் அவுட்னு சொன்ன நானா பெரியவன்? அன்னிக்கு நான் சம்மதிச்சிருந்தா இன்னிக்கு இப்படி ஒரு நிலை என் பெண்ணுக்கு வந்திருக்குமா?" பொல பொலவென்று கண்ணீர் சொரிகிறார், அவர்.

"பத்திரிகை அச்சிடக் கொடுக்கும் பொழுது கண்ணீர் விடக் கூடாது. சிரிச்சுகிட்டே வாங்கிக்குங்க!"


கண்களைத் துடைத்துக் கொண்டு அவன் எழுதியிருந்த பத்திரிகை வாசகங்களைப் பார்த்தார். கண்கள் ஓடஓட... முகத்தில் சூர்யகாந்திப் பூ மலர்ந்தது.

"இது... இது... என்ன? மணப் பெண் பெயர் என்ற இடத்தில் பாரதியின் பெயர்...!" தழுதழுத்தார்.


"நடந்தது ஒரு விபத்து, ஸார்! இதற்கு பாரதி உடந்தை இல்லை. பாரதி எப்படி குற்றவாளியாக ஆக முடியும்? அவளுக்கு இனிமே திருமணம் செய்ய முடியாது என்ற தீர்ப்பைக் கொடுக்க முடியாதே? பாரதிதான் என் மனைவி. அவளை மனப்பூர்வமாக நான் மணக்கச் சம்மதிக்கிறேன். இப்பவும் சாதி, சனம்னு நீங்க பார்க்க விரும்பினால்..." என்றவனைத் தடுத்தார் அவர்.

"உங்கிட்ட சொன்னா, என்ன தம்பி? அவளுக்கு ஒரு வரனைப் பார்த்து வச்சேன். ஆனா இப்படி நடந்தது தெரிஞ்சதும் அவங்க இவளை ஏத்துக்க மறுத்துட்டாங்க. இங்க வந்ததும் நன்றி சொல்லத் தானே தவிர இவளை நீங்க ஏத்துப்பீங்கன்னு எதிர்பார்க்கல்லே. என்னை சிரிச்சுகிட்டே அடிச்சுட்டீங்க, தம்பி!" என்றவர், அவன் கையைப் பற்றிக் கொண்டார்.

தாகமானால் மேகமாவேன்



"சொல் காதலீ...!
தாகமானால் சொல் –
நான் மேகமாகிறேன்
காயமானால் சொல் –
நான் களிம்பாகிறேன்.
வியர்வையானால் சொல் –
நான் தென்றலாகிறேன்.
சோகமானால் சொல் –
நான் சுமை தாங்குகிறேன்.
காதலீ...
ஒரே ஒரு வார்த்தை சொல் –
இந்த மயானத்திலிருந்து
நான் உயிர்த்தெழுகிறேன்!"



நேசன்

பூமொட்டுக் காயங்கள்

மதுரா

"என்னய்யா மாலையைக் கயில வைச்சுகிட்டு என்னையே றைச்சுப் பாக்கறே? பட்டிக் ட்டான் கருப்பட்டி மிட்டாயைப் ர்த்த மாதிரி!"

"என்னைக்கும் நீ எனக்கு ருப்பட்டி மிட்டாய்தான், புள்ள!"

"ஏன்யா... கல்யாணத்துக்கு ன்னால ஜோசப் நாடார் கடை டு மாதிரி உன் கண்ணுக்குத் ரிஞ்சவ. இப்ப கருப்பட்டி டாய் மாதிரி தெரியிறனா?" — ாய்க் கோபம் காட்டினாள், பாத்தா.

"கோபிச்சுக்கிறியே...! மஞ்சள் ாட்டு அவிச்ச பனங்கிழங்கு திரி எப்பவுமே நீ அழகுதான். ன்தான் மழையில நனைஞ்ச ன மாதிரி உனக்குப் பொருத்த ல்லாம நிக்கிறேன்!" — என்றான், திரன் கண் சிமிட்டலுடன்.

"கறுத்த மச்சானா இருந்தாலும் ன் மனசுக்குப் பிடிச்ச மச்சான், ான்! இல்லைன்னா ஊரை ட்டு உன் பின்னால ஓடி வந் ருப்பேனா... ம்... சொல் யா...! எதுக்கு மாலையைக் கயில வைச்சுகிட்டு என்னை வச்ச கண் வாங்காம பார்த்தே?"

"பூவாத்தா...! ஊர் உலகத்தில ல்யாணம் சாமி முன்னால ளம் அடிச்சு மாலை போட்டு, லி கட்டி நடக்கும். நம்ம ல்யாணம் எப்படி நடந்திச்சு... து சுவத்துக்குள்ள நாலு கயெழுத்தோட முடிஞ்சு ாச்சு... அதனால உன் கழுத் மாலை போட்டுப் பாக்க னு ஆசை வந்திச்சு. அது டும் இல்லை, பூவாத்தா...! ளைக்கு வியாபாரம் நல்ல இலாபமா இருக்கும். உண்டி யல்ல இருக்கிறதையும் சேர்த்து உனக்கு அரைப் பவுன்ல தாலி வாங்கணும்னு முடிவு செய்திட் டேன். ம்... மாலையைப் போடட் டுமா...!"

புது மணப்பெண் போல வெட் கத்தில் தலை குனிந்தாள், பூவாத்தா.

அவள் கழுத்தை நோக்கி மாலையை நீட்டினான், சந்திரன்.

குறுக்கே வந்தது ஒரு முரட்டுக் கரம்.

மாலையை அவசரமாய் அப கரித்தது.

கோபமாகத் திரும்பினான்.

சிரிப்புடன் நின்று கொண் டிருந்தான், பெட்டிக்கடை சுப்பையா.

"என்னப்பா...! மாலையை வைச்சுகிட்டு பொண்டாட்டியும் புருஷனும் விளையாடறீங்களா...? நம்ம எம்.எல்.ஏ. அடுத்த சந்துக்கு வந்திருக்காரு.. ஒரு மாலையைப் போட்டுட்டு வந்திர்றேன். இதை வைச்சுக்க!" — ஐம்பது ரூபாய்த் தாள் ஒன்றைச் சந்திரன் கையில் திணித்துவிட்டு, பதிலை எதிர் பார்க்காமல் கையில் மாலையுடன் வேக நடை நடந்தார். இருவரும் திகைத்துப் போய் நின்றனர்.

சந்திரனும் பூவாத்தாவும் திரு நெல்வேலியைச் சேர்ந்தவர்கள். அவன் அத்தை மகன். அவள் மாமன் மகள். இருவர் குடும்பத் துக்கும் தீராப் பகை! அதைத் தெரிந்துகொண்ட காமன் இவர்கள் மீது அம்புகளை வீச காதலர்கள் ஆனார்கள். பெற்றோர் எதிர்க்க ஓர் அமாவாசை இரவில் ஊரை விட்டு ஓடி சென்னை வந்து சேர்ந் தார்கள். தூரத்து உறவான பூக்காரப் பாட்டி அடைக்கலம் கொடுத்தாள். சந்திரன் சென்னை முழுவதும் வேலை தேடினான். ஏமாற்றமே பதிலாய்க் கிடைத்தது. அதற்குள் பூமாலை, பூச்சரம் தொடுக்கக் கற்றிருந்தாள், பூவாத்தா.

பூக்காரப் பாட்டி கடையைப் புதுமணத் தம்பதியிடம் கொடுத்து விட்டுக் கண்ணை மூட, இவர்கள் பூக்காரத் தம்பதியாயினர். அன்று முதல் இன்றுவரை மூன்று வேளைச் சோற்றுடன் காதல் வாழ்க்கை.

"என்ன, பூவாத்தா...! பழைய நினைப்பா?" — பணத்தை எண்ணியபடியே கேட்டான், சந்திரன். புன்னகையைப் பதி லாக்கினாள், அவள்.

விளக்குகளை அணைத்து, கதவைப் பூட்டிவிட்டு, காலியான பூக்கூடையுடன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். தார் ரோட்டில் வாகனங்கள் அங்கும் இங்கும் விரைந்து கொண் டிருந்தன.

"இன்னிக்கு எவ்வளவு வியா பாரம் ஆச்சு...?"

"முந்நூற்றி எழுபது ரூபா. உண்டியல்ல இருநூறு ரூபா தேறும். பெட்டியில இரண் டாயிரம் இருக்குது. நாளைக்கு இருக்கிற மொத்த பணத்துக்கும் பூ வாங்கிட வேண்டியதுதான்"

"வித்துப் போகுமா, மச்சான்..?" — சந்தேகத்துடன் கேட்டாள் பூவாத்தா.



"நாளைக்கு ராத்திரி கிறிஸ்மஸ் ப்ரேயர். எல்லா சர்ச்சிலேயும் நடக்கும். சர்ச்சை அலங்காரிக்கிற துக்கே கூடை கூடையா மல்லிகைச் சரம் வாங்கிட்டுப் போவாங்களாம். நாளைக்கு மெட்ராசில இருக்கிற கிறிஸ்தவப் பெண்கள் வைக்கிறதுக்கே ஒரு லாரி பூ தேவைப்படும். நீ பயப்படாதே..! ஒரு பூகூட மிஞ்சாது!"

"நான் பயப்படல, மச்சான்! வீட்டை எதிர்த்து கல்யாணம் செய்துகிட்டோம். உண்மைதான். இப்ப நம்ம வாழ்க்கை பூ மொட்டுப் பருவம். இனிதான் மலர்ந்து மணம் வீசணும். நாலு பேர் முன்னால தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்டணும். இருக்கிற பணத்தை எல்லாம் போட்டு பூ வாங்கிட்டு..."

"பயப்படலேன்னு சொல்லிட்டே பயப்படறியே? பக்கத்துக் கடை பாலாமணி நாளைக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு பூ வாங்கப் போறானாம். பேசாம வா. எல்லாம் நல்லபடியா வித்துப் போயிடும். நாளைக்கு மறக்காம பாயசம் வைச்சுடு!"

"என்ன, திடீர்னு பாயசம் மேல ஆசை வந்திடிச்சா?"

"நாளைக்கு நூறாவது நாள்!" என்றான், சந்திரன். இருட்டில் பற்கள் வெண்மை காட்டின.

"நமக்குக் கல்யாணம் ஆகி நூறு நாள் ஆயிடிச்சா..? நேத்துதான் ஊரைவிட்டு ஓடிவந்த மாதிரி இருக்குது!" என்றாள், குரலில் ஆச்சர்யம் தொனிக்க.

"நூறு நாளுக்கு முன்னால மஞ்சள் தாலி கட்டினேன். நாளைக்கு என் பூவு கழுத்தில தங்கத் தாலி கட்டப் போறேன்!"

அவன் வலக்கையைப் பிடித்துத் தன் உதடுகளால் தொட்டாள். பூ முத்தங்கள் மனதுக்குள் மணம் வீசிற்று. தூரத்து இருட்டில் அவர்கள் குடிசை தெரிந்தது.

"ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரு
பூத்த...
இரண்டு குடம் தண்ணி ஊத்தி
இரண்டு பூ பூத்தது".

நொண்டியடித்துக் கொண்... பாடுகிறாள், பூவாத்தா.

அவளைச் சுற்றி நிறைய த... ணிப் பெண்கள் நடனம் ஆ... றார்கள்.

அவர்களுக்குத் தலை இல்... தலை இருக்கும் இடத்தில் பெ... பெரிய பூ, மல்லிகை, ரோ... கனகாம்பரம், சூரிய கா... என்று!

ஒவ்வொரு பூத்தலை தாவ... பெண்ணும் தங்கள் பூத் தலை... அசைத்து அசைத்து நட... ஆடுகின்றனர். பூவாத்தா பா... பாடலைத் திரும்பப் பாடுகி... றனர். பூவாத்தாவுக்குத் தா... முடியாத சந்தோஷமாய் இ... கிறது. திடீரென்று அந்த சந்... ஷத்தை நொறுக்குவது பே...

எங்கிருந்தோ வண்டுக் கூட்டம் ஒன்று பறந்து வருகிறது. அந்த பூத் தலைத் தாவணிப் பெண்களை விரட்டி விரட்டிக் கடிக்கிறது. ஓவென்று அலறுகிறார்கள். பூத் தலைகளில் இருந்து ரத்தம் வழிகிறது.

"த்தம்... தம்...தம்".

விழித்துக் கொண்டாள், பூவாத்தா! 'இது என்ன விசித்திரக் கனவு?' எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

வாசலில் பூக் கூடைகளுடன் சந்திரன் நின்று கொண்டிருந் தான்.

"மணி மூணாச்சு, பூவு! முகத் தைக் கழுவிட்டுப் புறப்படு!"

"பூ விலை எப்படி...?"

"கிலோவுக்கு மூணு ரூபா அதிகம். இன்னும் எழுபத்தெட்டு ரூபா கமிஷன் கடைக்காரனுக்குக் கொடுக்க வேண்டியதிருக்கு. எட்டு கூடையை முனியன் சைக்கிள் ரிக்ஷாவில் போட்டு விட்டிருக்கான். இரண்டைக் கையில எடுத்துகிட்டு வந்துட்டேன்" கையிலிருந்த கூடை களைக் குடிசைக்குள் வைத்தான்.

பூவாத்தா பல் துலக்கி, முகம் கழுவிப் புறப்பட -

ஆளுக்கொரு பூக்கூடையுடன் பூக்கடையை நோக்கி நடந்தார்கள்.

மூன்று கூடை பூக்களைக் காலி செய்து விட்டு இருவரும் நிமிரும் போது கிழக்கே வானம் நிறம் மாறத் தொடங்கிவிட்டது.

பூவாத்தாவுக்கு முதுகெலும்பு வலித்தது.

கடைவாசலில் மாருதி கார் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து வெள்ளை அங்கி யில் பாதிரியார் ஒருவர் இறங் கினார்.

"தம்பி! எங்க சர்ச்சுக்கு முன் னூறு முழம் மல்லிகை மொட்டு வேணும். பணத்தோட ஒரு பையனை அனுப்புகிறேன். குடுத்து விட்டுடுவீங்களா..?"

"சரிங்க, பாதர்!" - பூவாத்தா வுக்கும் சந்திரனுக்கும் உற்சாக மாய் இருந்தது.

மாருதி கார் செல்வதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதே நேரம் -

யாரோ 'தபதப'வென்று ஓடி வரும் சத்தம் கேட்டது.

அவசரமாய்த் திரும்பிப் பார்த் தார்கள்.

"தலைவர், போயிட்டாரு!" என்று அலறிக் கொண்டு ஒருவன் ரோட்டில் ஓடி வந்தான்.

லுங்கியை மடித்துக் கட்டி யிருந்தான். முகத்தில் யார் மீதோ கோபம். 'இறந்தது யாரா யிருக்கும்?' யாரிடமாவது விசாரிக்க வேண்டும் போலிருந்தது, சந்திர னுக்கு. பூவாத்தா முகம் சோகத் துக்கு வந்திருந்தது.

ரோட்டில் வேகமாய்ச் சென்ற லாரியின் முன் பக்கக் கண்ணாடி இரண்டும் உடைந்து போயிருந் தது.

சற்று நேரத்தில் அந்த ரோடெங்கும் ஒருவிதமான பதற்றம் தெரிந்தது. பூட்டிக் கிடந்த எதிர்க்கடை முதலாளி வேகமாய் மோட்டார் சைக்கிளில் வந்தார். அவர் மோட்டார் சைக் கிளில், சின்னதாய், இறந்துபோன கட்சித் தலைவரின் கட்சிக் கொடி பறந்தது. 'கட்சி மாறி விட்டாரா ராத்திரியோடு ராத்திரியாய்! கோியரிலிருந்து பெரிய வால் போஸ்டர் ஒன்றை எடுத்தார்.

பூட்டிக் கிடந்த கதவில் பசை தடவி ஒட்டினார்.

இறந்துபோன தலைவர் சிரித்துக் கொண்டிருந்தார்.

படத்துக்கு நேர் கீழே இலை ஒன்றை விரித்தார். ஒரு 'சீப்பு' வாழைப் பழத்தை வைத்தார். நான்கைந்து பத்திகளை எரிய விட்டு வாழைப்பழத்தின் வயிற்றில் குத்தினார்.

'இறந்து போனவரை அவசர மாய் கடவுள் ஆக்கி விட்டாரே, ஏன்?' சந்திரனுக்கு வியப்பாய் இருந்தது.

அதே நேரம் -

'தடதட'வென்று ஒரு கும்பல் ரோட்டுக்குள் நுழைந்தது.

அத்தனை பேரும் லுங்கியை, தாறுமாறாய் மடித்துக் கட்டி யிருந்தனர்.

கண்கள் சிவந்து போயிருந்தன. அவர்கள் கையில் சைக்கிள் செயின்கள், குண்டாந்தடிகள்.

அவர்களில் உயரமாய் தடியாய் இருந்தவன் முன்னால் வந்து கோபமாய் கத்தினான்.

"த, பாரு...! எங்க தலைவரே பூட்டாருடா...! இன்னிக்கு அல்லாரும் அழுவணும்... இல்லை அழ வைப்போம்!"

அவன் கத்திக் கொண்டிருக் கும்போதே எதிரில் எழுபது வயது முதியவர் ஒருவர் சைக்கிளில் வந்தார். சைக்கிளின் வேகத்தில் தள்ளாமை தெரிந்தது. சைக்கிளின் கேரியரில் அடுக்காய் முட்டைக் கூடுகள். அதன் வரிசை தவ றாமல் கோழி முட்டைகள்.

— முதியவரின் சைக்கிளைக் கைநீட்டி நிறுத்த முயன்றான், ஒரு முரடன். அதற்குள் ஒருவன் தன் கையிலிருந்த கம்பை, சைக்கிளின் ஓடிக் கொண்டிருந்த சக்கரத் துக்குள் நீட்ட, சைக்கிள் அவசர மாய்ச் சரிந்தது.

முதியவர் முகம் குப்புற ரோட் டில் விழுந்தார். நெற்றியில் இடி பட்டு ரத்தம் கொப்பளித்தது முட்டைகள் ரோடெங்கும் சிதறி உடைந்தன.

எதிரே வேகமாய் வேன் ஒன்று வந்தது.

வேனின் முன்பக்க இரண்டு கண்ணாடிகளில் ஒன்றில் இறந்து போன தலைவர் சிரித்துக் கொண் டிருந்தார்.

வன்முறைக் கும்பல் ரோட்டின் குறுக்கே போய் நின்றது.

வேன் சடன் ப்ரேக்கிட்டுக் குலுங்கி நின்றது.

"முனியா! தலைவரை அடிச் சிறாதடா!" வேன் டிரைவருக்கு முன்னால் வெறுமையாய் இருந்த கண்ணாடியை சைக்கிள் செயி னால் குறிவைத்து அடித்தான், ஒரு முரடன். கண்ணாடி உடைந்து சிதறியது.

உடைந்த கண்ணாடித் துண்டு கண்ணில் பாய -

"ஆ!" அலறினான், வேன் டிரைவர்.

கண்ணிலிருந்து இரத்தம் வழிந்து கன்னத்தை நனைத்தது.

கண்ணைப் பொத்திக் கொண்டு துடித்தான், வலியில்.

வேன் கண்ணாடியில் இருந்த தலைவர் சிரித்துக் கொண்டிருந்தார்.

"டேய்... டேய்... கடையை அடைங்கடா பேமானிங்களா..."

ஒருவன் கத்த, அடுத்த இமை மூடுபொழுது மடித்த லுங்கிக்குள் இருந்து கருங்கற்கள் எடுத்து நாலாபக்கமும் வீசப்பட்டன.

"அம்மா...!" என்று அலறினான், சந்திரன்.

"ஐயோ...?" என்றாள், பூவாத்தா.

அதற்குள் நான்கைந்து பேர் பூக்கடைக்குள் நுழைந்தனர். குப்பென்று வீசியது, சாராய வாடை.

தொங்கிக் கொண்டிருந்த மாலைகளை அறுத்து ரோட்டில் எறிந்தனர்.

சந்திரனும், பூவாத்தாவும் கெஞ்சக் கெஞ்ச பூக்கூடைகளைத் தூக்கி அலட்சியமாய் எறிந்தனர். ரோடெங்கும் பூக்கள் சிதறின.

தடுத்த சந்திரனைத் தரையில் தள்ளி மிதித்தான், முரடன் ஒருவன்.

குறுக்கே விழுந்தாள், பூவாத்தா கண்ணீருடன்.

ரோட்டோரக் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன.

பூட்டியிருந்த கடைகளும் உடைத்துச் சூறையாடப்பட்டன.

கடைக்குள் இருந்த பொருள்களை அள்ளி ரோட்டில் வீசியது வன்முறைக் கும்பல்.

மிரண்ட மக்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினர்.

ஓடுவோரின் கால்களில் சிக்கிக் காயம்பட்டன மஞ்சளும், சிவப்புமாய், ஊதாவும், வெள்ளையுமாய் சிதறிக் கிடந்த பூ மொட்டுகள்.

கண்களில் கண்ணீர் வழியப் பார்த்துக் கொண்டிருந்தனர், சந்திரனும், பூவாத்தாவும்!

எதிர்க்கடைக் கதவில் ஒட்டியிருந்த போஸ்டரில் - தலைவர் இன்னும் சிரித்துக் கொண்டிருந்தார்.

"பூவு! உன் கழுத்திலே தங்கத் தாலி ஏற இன்னும் நல்ல நேரம் வரலை" என்று கூறி அந்த நிலையிலும் சிரித்தான் சந்திரன். ❀

'அமுதசுரபி தீபாவளி மலர்' ஓர் ஆய்வு



1978 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து வருட 'அமுதசுரபி' தீபாவளி மலர்களை, டாக்டர் பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'பொது நிலை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார் திருமதி. ஜெ.யமுனா தேவி.

நந்தனம். அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றும் இவர், தேர்வு நிலைத் தமிழ் ஆசிரியராகவும் விளங்குகிறார். அரசு பள்ளியில் பணியாற்றும் ஒருவர் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெறுவது இதுவே முதல் முறை' என்கிறார்.

"1987 ஆம் ஆண்டு அழவள்ளியப்பாவின் 'பூஞ்சோலை இதழ்களின் இரண்டரை வருடப் பிரதிகளை ஆய்வு செய்து எம்.ஃபில் பட்டம் பெற்ற பிறகு டாக்டர் பட்டமும் பெற வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது.

"இளமையிலேயே எனக்கு இலக்கிய ஆர்வம் அதிகம். பள்ளியில் தொகுக்கப்படும் மலர்களில் கதை, கட்டுரைகள் எழுதுவேன். ஓவியங்கள் வரைந்து பிரபல பத்திரிகைகளில் வெளியாயின.

பத்திரிகை படிக்கிற பழக்கம் அதிகமாயிற்று. அமுதசுரபி, கலைமகள், கல்கி, விகடன் போன்ற பத்திரிகைகளைப் படிப்பதை வழக்கப்படுத்திக் கொண்டேன். மற்ற பத்திரிகைகளோடு ஒப்பிடும்போது 'அமுதசுரபி' என் கவனத்தை அதிகமாக ஈர்த்தது. எனவே ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன் அவர்களை முதலில் சந்தித்து 'அமுதசுரபி தீபாவளி மலர்களை' ஆய்வு செய்யப் போகிறேன், என்று சொன்னதும், அவர் தந்த உற்சாகம் என்னை அதில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வைத்து விட்டது' என்கிறார்.

"இராணிமேரி கல்லூரியில், தமிழ்த்துறை தேர்வு நிலை விரிவுரையாளர் டாக்டர் திருமதி. சு. சுனந்தாதேவி, 'அமுதசுரபி தீபாவளி மலர்கள்' பொதுநிலை ஆய்வுக்கு மேற்பார்வையாளராக இருந்து வழிகாட்டியதை மறக்க முடியாது" என்று நன்றி கூறுகிறார் திருமதி ஜெ. யமுனா தேவி.

2000த்திற்கும் மேற்பட்ட பக்கங்களில் 127 கட்டுரைகள், 117 சிறுகதைகள், 90 கவிதைகளை அமுதசுரபி ஐந்து வருட தீபாவளி மலர்களில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்ற பிறகும், இன்னும் 13 தலைப்புகளில் அமுதசுரபி தீபாவளி மலர்களை ஆராய முடியும் என்று பட்டியலிடுகிறார்.

அவற்றில் குறிப்பிடத்தக்கவை சிறுகதைகளில் சமுதாய உணர்வு, மொழி, நடை, கவிதைப் படைப்புகள், கலைச் சிறப்புகள், இலக்கியச் சிந்தனைகள், ஆசிரியரின் இலக்கியப் படைப்புகள்.

"புலமைமிக்க பெரியவர்களின் படைப்புகள் கொண்ட தீபாவளி மலர், கலைக் களஞ்சியம், அடுத்த தலைமுறைக்கும் உபயோகப்படக் கூடிய பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம்" என்று கூறும் திருமதி. ஜெ. யமுனாதேவி டாக்டர் பட்டத்திற்காக ஆய்வு செய்த காலம் ஆறு ஆண்டுகள்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவர் சோ.நா. கந்தசாமி நேர்முகத் தேர்வு (வாய்மொழித் தேர்வு) நடத்தியவர்.

'எதிர்காலத்தில் பேராசிரியராகப் பணியாற்றி - தமிழ்ப் பணி செய்ய விரும்பும்' திருமதி ஜெ. யமுனாதேவி கடந்த இருபது வருஷங்களாக ஆசிரியர் தொழிலில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டுள்ளார்.

—நாகு



அஸ்வமேதம்

அதிகாலை நாலரை மணி. இவ்வளவு விடியற்காலையில் யார் கதவைத் தட்டுவது என்று எரிச்சலோடு கதவைத் திறந்தபோது...

மணி, நாராயணன், கோவிந்தன், ராமசாமிப் படையாச்சி, கருப்பன் என்று ஒரு பட்டாளமே காத்துக் கொண்டிருந்தது.

அவர்கள் சொன்ன செய்தி :

"சுப்பண்ணா செத்துப் போய் விட்டார்!"

"எப்படா?" என்று நாராயணனைக் கேட்டேன்.

"இப்பதான் சுமார் மூனு மணியிருக்கும்!"

"பின்னே எனக்குச் சொல்ல ஏண்டா இத்தனை நேரம்?" கோபம் தலைக்கு ஏறியது.

"என்ன பண்றது? எங்களுக்கே இப்பத்தான் தெரியும். அவர் பிள்ளை நடேசன், 'அப்பா நெஞ்சு வலிக்கிறதுன்னு சொன்னார். என்ன செய்யறதுன்னு தெரியல லே'ன்னு வந்து அழுதான். உடனே சைக்கிள்ளே நானும் கருப்பனுமாய்ப் போய் கிருஷ்ணமூர்த்தி டாக்டரைக் கூட்டிண்டு வரதுக்குள்ளே எல்லாம் முடிஞ்சு போயிடுத்து. "செத்துப் போயி ஒரு மணிநேரம் ஆயிடுத்து"ன்னு டாக்டர் சொன்னார். உடனேதான் உங்களுக்குச் சொல்ல வந்தேன். நமக்கு முன்னால தெரிஞ்சிருந்தா மட்டும் நம்பளால என்ன செய்திருக்க முடியும்? சுப்பண்ணா சொல்லுவாரே அதுபோல பிராக்டிகலா யோசனை செய்தா செத்துப்போறது அவசியம்னு 'அவன்' முடிவு செய்ததுக்கப்புறம் அதைத் தடுத்து நிறுத்த யாராலயும் முடியாது!'

"அடப்பாவி! நேத்திக்கி ராத்திரி பத்து மணி வரைக்கும் பேசிண்டு இருந்தாரே! ஓர் ஈ எறும்புக்குக் கூட கெடுதல் நெனைக்காத மனுஷன் இப்பிடி பொசுக்குனு செத்துப் போவார்னு கனவுலகூட நெனைக்கலையேடா?"

"அதுக்கு என்ன செய்யறது? நல்ல மனுஷன். அதுதான் கெடக்கல்லே; இருக்கல்லே! 'நெஞ்சு வலிக்கற மாதிரி இருக்கு கொஞ்சம் தண்ணி கொண்டா'ன்னு தூங்கிண்டு இருந்த பார்வதி மாமியை எழுப்பியிருக்கார். மாமி தண்ணியை எடுத்துண்டு நடேசனை எழுப்பி எனக்குச் சொல்லச் சொல்லிப்பிட்டு சுப்பண்ணா கிட்டே தண்ணியைக் குடுத்திருக்கா. ரெண்டு வாய் தண்ணியைக் குடிச்சிருப்பார். மூணாவது மடக்கு குடிக்கறதுக்குள்ளே தண்ணி வழிஞ்சுடுத்தாம்! மாமிக்கு ஒண்ணும் புரியல்லே! எழுப்பி எழுப்பிப் பாத்திருக்கா! டாக்டர் கிருஷ்ணமூர்த்தி தான் வந்து பாத்துப்புட்டு மாஸிவ் ஹார்ட் அட்டாக்னு, சொல்லிப்புட்டு செத்துப்போய் ஒரு மணி நேரம் ஆயிடுத்துன்னு கன்ஃபார்ம் பண்ணினார்."

"இந்த பாழாப்போன ஊர்ல ஓர் ஒழுங்கான ஆஸ்பத்திரி வசதி கிடையாது. ஒன்னொண்ணுக்கும் டவுனுக்குப் போகணும். சுப்பண்ணா உயிரோட இருந்த வரைக்கும் எவ்வளவோ செய்து பார்த்தார். இந்த ஊருக்கு ஒழுங்கா ஓர் ஆஸ்பத்திரி வசதி செய்ய யாருக்கும் அக்கறை இல்லை. ஓர் ஆஸ்பத்திரி, டாக்டர், உடனே பாத்திருந்தா சுப்பண்ணாவைப் பொழைக்க வச்சிருக்கலாம். நமக்குக் குடுத்து வெச்சது அவ்வளவுதான்!"

எல்லாருமாகக் கூட்டமாக சுப்பண்ணா வீட்டுக்குப் போனார்கள்.

"சாஸ்திரிகளுக்கு சொல்லியனுப்பியாச்சா?"

"ஊருக்கெல்லாம் தந்தி குடுத்தாச்சா?"

இப்படியாக ஆளுக்கு ஒன்றாகச் சொல்லிக்கொண்டு வேலையைக் கவனிக்கப் போனார்கள்.

பூங்குன்றம், சின்ன கிராமம். எண்ணி நூறு வீடுகள் இருக்கலாம். அதற்குப் பெயர் அக்கிரஹாரம். பின்னால் நெசவுக்காரத் தெரு, கம்மாளத்தெரு, சேரி இப்படி சுற்று வட்டாரங்களைச் சேர்த்தால் ஓர் ஐநூறு வீடுகள் தேறும்.

சுப்பண்ணாவின் முயற்சியாலும், அயராத உழைப்பாலும் தான் அந்த ஊருக்குத் தார் ரோடு, குடிநீர்க் குழாய் ஆகியவை வந்தன. எல்லாருக்குமே, அவர் 'அண்ணா'தான்!

பெரியவர்கள் முதல் சின்னப் பையன்கள் வரை அத்தனை பேரும் அவரை சுப்பண்ணா என்றுதான் கூப்பிடுவார்கள். எந்த வேலையாக இருந்தாலும் சுப்பண்ணா இல்லாமல் நடக்காது.

பொது வேலைகள்; சிலரது சொந்த வேலைகள்; குடும்பச் சண்டைகள்; புருஷன் மனைவி சண்டை எல்லாவற்றிலும் சுப்பண்ணாதான் முதலில். சுப்பண்ணாவின் தீர்ப்பு சுப்ரீம் கோர்ட்டில்கூட கிடைக்காது. அவ்வளவு கச்சிதமாக இருக்கும்.

ஜெயா வெங்கட்ராமன்

சுப்பண்ணாவின் முயற்சியால் தான் பூங்குன்றத்திற்குக் கோயில் நந்தவனத்தை ஒட்டிய சின்னக் கட்டடத்துக்கு ஒரு சிறிய அரசு டிஸ்பென்ஸரி வந்தது. அதன் டாக்டர், வசதிக்காக டவுனில் குடியிருந்து கொண்டு தினமும் பூங்குன்றம் வருவார்.

சுப்பண்ணா ரொம்பவும் கேட்டுக் கொண்டதால் மார்கழி முடிந்து தை பிறந்தவுடன் பூங்குன்றத்திற்கே வந்து விடுவதாக முன்பே கிருஷ்ணமூர்த்தி டாக்டர் ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால்... ஆனால்... அவர் வருவதற்குள் அவரிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் அவசர, அவசரமாக சுப்பண்ணா புறப்பட்டுப் போய் விட்டாரே!

சுப்பண்ணா செய்திருக்கும் சேவைகளுக்கு, பூங்குன்றம் அவருக்கு என்றென்றும் கடமைப் பட்டிருக்கும். சுடுகாட்டுக்குப் போகும் பாதைக்கு சரியான பாதை இல்லை என்பதால் ஊரில் உள்ள சிறுவர்கள் அத்தனை பேரையும் வைத்துக் கொண்டு ஒருவரிடமும் ஒரு பைசாக்கூட வாங்காமல் ரோடு போட்டு முடித்தார். பக்கத்தில் கல் உடைக்கும் குவாரியிலிருந்து காண்ட்ராக்டர்களிடமிருந்து இலவசமாகவே கல், மண் முதலியவற்றை வாங்கி ரோடு போட்டார். கார்ப்பரேஷனுக்கு நடையாக நடந்து பத்து விளக்குகள் என்று சாங்ஷன் வாங்கி விட்டார்.

சுடுகாடு, சாவு என்பதில் அவருக்கு ஏன்தான் அவ்வளவு பிரியமோ தெரியவில்லை.

எப்படியும் வருடத்தில் பத்து இருபது சாவுகளாவது இருக்கும். டிஸ்பென்ஸரியின் திண்ணையில் இரவு நேரங்கள் பாடி, பரதேசிகள் என்று யாராவது படுத்திருப்பார்கள். அங்கு சில நேரங்களில் பெயர் தெரியாத, விலாசம் தெரியாதவர்களின் சாவுகள் நேரும். அப்போது முழுப் பொறுப்பையும் சுப்பண்ணாதான் எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரி, போலீஸ் என்று அலைந்து கடைசியில் கொண்டு போய்க் கொளுத்தி விட்டு வருவதுவரை அவருடைய பொறுப்புதான்.

சரீர உழைப்பு என்றால் அசர மாட்டார். அவருக்கு உதவ ஓர் இளைஞர்கள் படை எப்போதும் அவரோடு இருக்கும். நேற்று இரவுகூட கோயில் வாசலில் உட்கார்ந்து கொண்டு குடிதண்ணீர் குளத்தில் 'தூர்' எடுப்பதைப் பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருந்தார். இன்று காலையில் மண் வெட்டி கடப்பாறையுடன் எத்தனை பேர் வரவேண்டும் என்று ஆணையிட்டுக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு தடவையும் முனிசிபல் எலக்ஷன் வரும்போதெல்லாம் சுப்பண்ணாவின் பெயர்தான் அடிபடும். மனுஷன் அசைந்து கொடுக்க மாட்டாரே! எல்லாக் கட்சிக்காரர்களும் அவருக்கு வலை வீசுவார்கள். அவர்கள் வலையில் சிக்கமாட்டாரே! இளைஞர்கள் பட்டாளம் அவரை சுயேச்சையாகக் கூட நிற்கச் சொல்லிப் பார்த்தார்கள். ஊஹூம். அசைய மாட்டாரே!

"அடே! எலக்ஷனுக்கு எதுக்கு நிக்கணும்? நான் உங்களுக்கு உதவி செய்யட்டுமான்னு உண்மையாப் பாடுபடறவன், யாராவது கேப்பானா? நான் இந்த ஊருக்கு இன்னது பண்ணணும்னு யாராவது எங்கிட்டே கேட்டிருப்பானா? அனுமார் படை மாதிரி நீங்கள்ளாம் இருக்கறபோது எதுக்குடா எலெக்ஷன் அது இதெல்லாம்? அரசியல் எல்லாம் நமக்கு சரிப்பட்டு வராதுடா! நம்மைச் சுத்தி நடக்கற அக்கிரமங்களைப் பாத்துண்டு என்னால சும்மா இருக்க முடியாது. நான் ஏதாவது பேச அவா பேச வீண் வம்புதான் மிஞ்சும்!

இப்ப நான் தனிப்பட்ட மனுஷன். என்னை யாரும் தட்டிக் கேக்க முடியாது. எனக்கு சரின்னு பட்டதை தைரியமா செய்வேன். நான் யாருக்கும் கட்டுப்பட்டவன் இல்லே!"

"அதெல்லாம் இல்ல, சுப்பண்ணா! நீங்க ஒரு பதவிலே இருந்தா இன்னும் நிறைய நல்லது செய்யலாம் இல்லையா! நீங்க எங்களோட பிரதிநிதியா இருந்தா எவ்வளவு நல்லது?"

"இப்ப சொல்லுவீங்கடா! நாளைக்கி நான் எலக்ட் ஆயிட்டா வேண்டாத தொல்லைகள் எல்லாம் வரும். நான் எவ்வளவுதான் நேர்மையா நடந்தாலும் கடைசியிலே எந்த ஒரு பக்கத்துலேருந்தாவது பிரஷர் வரும். என்னோட நேர்மையைப் பத்தி யாராவது தப்பாப் பேசுவாங்க. அதையெல்லாம் தாங்கிக்கிற அளவுக்கு எனக்கு தோல் கெட்டியில்லே! அதெல்லாம் நமக்கு வேணாம்" என்று சொல்லி ஒதுங்கி விடுவார்.

அவர் வாழ்நாளில் எத்தனை பிணம் சுமந்திருப்பார்? ஜாதி, மதம், யார் என்ன என்பது கூடத் தெரியாது. அது முடியும் வரை பச்சைத் தண்ணீர் பல்லில் படாது. எல்லாம் முடித்து விட்டுக் குளித்து விட்டுப் பூணூல் மாற்றிக்கொண்டு சாப்பிட உட்காரும்போது சில நேரம் இரவு பத்து மணி கூட ஆகிவிடும். பிணம் சுமந்தே தழும்பேறிய தோள்கள்.

கணேச வாத்தியார் சொல்வார்:

'அந்தக் காலத்துல மஹாராஜாக்கள் எல்லாம் அஸ்வமேத யாகம்னு ஒரு பெரிய யாகம் செய்வா. அது அத்தனை சிலாக்கியம். ஒரு பொணம் தூக்கறதும் சரி, ஓர் அஸ்வமேத யாகமும் சரி. அப்படிப் பாத்தா சுப்பண்ணா எவ்வளவு அஸ்வமேத யாகம் செய்திருக்கார்!"

அப்படிப்பட்ட சுப்பண்ணாவுக்குக்கூட ஒரு தடவை கண்ணில் நீர் வடிந்தது.

சுப்பண்ணாவின் அண்ணா, மிகப் பெரிய அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். நிறைய பணத்தோடும், வசதியோடும் இருந்தவர். யாரோடும் ஒட்டாமலேயே வாழ்ந்தவர்.

ஒருத்தர் வீட்டுத் திருமணத்திற்குக்கூடப் போக மாட்டார் என்றால் சாவுக்கு எங்கே போயிருக்கப் போகிறார்? சொந்தத் தம்பிக்கும் உதவி செய்தது கிடையாது. அவர் பெண்ணின் திருமணத்திற்குக்கூட இரவு பகலாகப் பாடுபட்டு விட்டு சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்து விடுவார். அண்ணாவின் எதிரில் நின்று கொண்டேதான் பேசுவார். அவர் அண்ணா முன்பு உட்கார்ந்து பார்த்தது கிடையாது.

"அண்ணா படித்தார்; நல்ல நிலையில் இருக்கிறார். நான் படிக்கல்லே; அதனால இப்படி இருக்கேன். அவரைப் பார்த்து வயிற்றெரிச்சல் பட்டா ஆகுமா?" என்பார்.

ஒருநாள் ஒருபொழுது அண்ணாவிடம் எந்த உதவிக்கும் போனதில்லை.

அந்த அண்ணா செத்துப் போனபோது –

தூக்க ஆள் இல்லை. சுப்பண்ணா ஒரு பக்கம், அவர்கள் நெருங்கின உறவினர் ஒரு பக்கம். மற்ற இரண்டு பக்கத்திற்கும் கூலிக்கு ஆள் பிடித்துத் தூக்கியதை சுப்பண்ணா இன்றும் மறக்கவில்லை. அதை நினைத்து எத்தனையோ தடவை அழுதிருக்கிறார்.

அந்த சுப்பண்ணா – பரோபகாரி – இப்போது செத்துப் போய் விட்டார் –

வாசலில் நெருப்புப் போட்டாகி விட்டது.

சட்டி, பானைகள், மூங்கில் கயிறு சகிதமாக எல்லாம் ரெடியாகி விட்டது.

கணேச வாத்தியார் உரத்த குரலில் நிறுத்தி நிதானமாக மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்.



ஊரிலிருந்து வரவேண்டியவர்கள் எல்லாம் வந்து விட்டார்கள். பன்னிரண்டரை மணி ரயிலில் ஊரிலிருந்து சுப்பண்ணாவின் இரண்டாவது பிள்ளை வந்து விடுவான்.

ஒருத்தர் கேட்டார் : "எப்போது பாடியை எடுக்கப் போறா?"

"ஒரு மணியாகும்!"

இருக்கும் வரைதான் சுப்பண்ணா! செத்த பின்பு பிணம். சுப்பண்ணா என்ற பெயர் எவ்வளவு சீக்கிரம் மறந்து விடுகிறது?

சுப்பண்ணாவின் இரண்டாவது பிள்ளையும் வந்து விட்டான். ஊரே அழுதது. குளிப்பாட்டி, பட்டை பட்டையாக விபூதி இட்டு இருந்த கோலத்தில் சுப்பண்ணா தூங்குவதைப் போலத்தான் இருந்தார். சுப்பண்ணா செத்துப் போய்விட்டார் என்று யார் சொன்னது...? ஆனாலும் சுப்பண்ணா கடைசி யாத்திரைக்குத் தயாராகி விட்டார். வீடு கொள்ளாத பூவும், மாலைகளுமாக எத்தனை மரியாதை?

கருப்பனும், ராமசாமிப் படையாச்சியும்தான் முதலில் வந்தார்கள்.

"சாமியை நாங்கதான் முதல்லே தூக்குவோம்!"

கணேசய்யர் ஆடிப்போய் விட்டார்.

"என்னடா பேசறீங்க! நீங்களாவது சுப்பண்ணாவைத் தொட்டுத் தூக்கறதாவது?"

"ஏன்? எங்களுக்கு, எங்க சனங்களுக்கு சுப்பண்ணா எவ்வளவு செஞ்சிருக்காரு? அவரைத் தூக்க எங்களுக்கு உரிமையில்லையா?" என்றார் ராமசாமிப் படையாச்சி.

"நாங்க சேரிக்காரங்கதான்! ஆனா ஒரு நாளைக்காவது சேரிக்குள்ள நுழையாம அவர் இருந்திருப்பாரா? சாதி வித்தியாசம் பாக்காம இங்க இருக்கற அய்யர் வூட்டுப் புள்ளைங்கள்ளேயிருந்து எங்க சேரிப் பசங்க அத்தனை பேரையும் வச்சுக்கிட்டுத்தானே சேரிக்கு, இந்த ஊருக்கு ஏன் சுடுகாட்டுக்குக்கூட ரோடு போட்டாரு? இப்பக்கூட நாங்க அய்யரு, மத்தவுங்கன்னு பாக்காம சுப்பண்ணான்னுதானே கூப்பிடறோம்? அப்படிப்பட்டவரைத் தூக்க எங்களுக்கு உரிமையில்லையா?" என்றான், கருப்பன். "அதெல்லாம் சரிதாம்பா! அவரு வித்தியாசம் பாக்கல்லே! ஆனா அவரு ஆசார

மான அய்யரு. அவருக்கு நீங்க செய்யற மரியாதை இதுதானா?" என்றான், நாராயணன்.

அவர்களுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. ஆனால் சுப்பண்ணா உயிரோடு இருந்திருந்தால் என்ன பதில் சொல்லியிருப்பார், தீர்ப்பு சொல்லியிருப்பார் என்று யாருக்குமே தோன்றவில்லை. சுப்பண்ணாவினால் காலி செய்யப்பட்ட வெற்றிடத்தை யாராலுமே நிரப்பிவிட முடியும் என்று யாருக்கும் தோன்றவில்லை.

விவாதம் மட்டும் நீண்டு கொண்டே போனது. ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. மற்றவர்கள் சொல்வதிலும் நியாயம் இருந்தது. ஆனால் சடங்கு, சம்பிரதாயம் என்ற வட்டத்தை விட்டு வெளிவர யாராலும் முடியவில்லை.

நடேசன்தான் முடிவெடுக்க வேண்டும். அவன் குழந்தைபோல அழுது கொண்டிருந்தான். சின்னவனுக்கும் ஒரு முடிவும் எடுக்கத் தோன்றவில்லை.

"அது போகட்டும், சாமி! முதல்லே வேணாம். கிட்டத்தட்ட மூணு கிலோ மீட்டர் போகணும். அதுபோற வரைக்கும் எங்களுக்கும் தூக்க வாய்ப்புக் குடுங்க அதுபோதும். எங்க சாமிக்கி நாங்க இதுகூட செய்யல்லேன்னா எப்பிடி? ஆஸ்பத்திரி வாசல்லே செத்துப்போனவுங்களை எல்லாம் எடுத்து அடக்கம் பண்ணினப்போ என்ன சாதி, என்ன சனம்னா எங்க சாமி பாத்தாரு? இப்ப அவருக்கு மட்டும் தனியா என்ன சாதி குறுக்கே வந்தது?"

என்னாலும் ஒரு முடிவுக்கு வரமுடியாது விழித்துக் கொண்டிருக்கும்போது –

பார்வதி மாமி கூப்பிடுவதாகச் சொன்னார்கள்.


பார்வதி மாமியைப் பார்க்கவே சகிக்கவில்லை. அழுதழுது முகம் வீங்கிப் போயிருந்தது.

துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு என்ன விஷயம் என்று கேட்டபோது பிரச்னை பார்வதி மாமிக்குத் தெரிவிக்கப்பட்டது.

கணேச வாத்தியார்தான் விவரமாகச் சொன்னார்.

பவளமணி

பட்டம் தந்த உறவு!



தம்பியுடன் சென்றேன்
அண்ணன் என்றார்கள்.
அண்ணனுடன் சென்றேன்
தம்பி என்றார்கள்
தந்தையுடன் சென்றேன்
மகன் என்றார்கள்.
படித்துப் பெற்ற
பட்டத்துடன் சென்றேன்
'தண்டச்சோறு' என்றார்கள்!

♣

மாமியின் தீர்மானத்திற்கு விட்டு விடுவதுதான் சரி என்று எல்லாரும் ஏக மனதாக ஒப்புக் கொண்டனர்.

"மாமா உயிரோடு இருந்த வரைக்கும் யாருக்குன்னு தனியா சொந்தம் கொண்டாட முடியாத படி இருந்தார். அவர் எல்லாருக்கும் பொதுவானவர். அதனால எல்லாரோட இஷ்டப்படி யார் வேணும்னாலும் தூக்கட்டும். அவரைப் பொறுத்தவரை எல்லாரும் அவருக்குப் புள்ளைகள் மாதிரி!"

"மாமி! சாஸ்திரம் அதுக்கெல்லாம் இடம் கொடுக்கறது இல்லே! தவிரவும் மாமா இருந்த வரை ஆச்சாரமா இருந்தார். இப்படிப்பட்டவருக்கு எப்படி? தவிரவும் அவரோட ஆத்மா சாந்தியடைய வேண்டாமா?" என்றார், கணேச சாஸ்திரிகள்.

"ஆத்மாவுக்கு சாந்தியா? எங்கேயோ, யாரோ பெரியவா சொல்லிக் கேட்டிருக்கேன். உடம்புல இருக்கறவரைக்கும்தான் ஆத்மாவுக்கு கட்டுப்பாடு. செத்ததும் ஆத்மா சாந்தியோட வெளியிலே போயிடறது. ஆத்மாங்கறது மழைத் தண்ணி மாதிரி. பூமிக்கு வரவரைக்கும் அதுக்குன்னு ஒரு ருசி, குணம் இல்லே. மண்ணுல விழுந்ததுக்கப்பறம்தான் மண்ணோட தன்மைக்கு ஏத்த மாதிரிதான், உப்பு, கரிப்பு, இனிமை இதெல்லாம் ஏற்படறது. அது மாதிரிதான் ஆத்மாவும்! மனுஷ உடம்புல இருக்கறவரைக்கும்தான் ஆசாபாசம், பந்தபாசம் இதெல்லாம். உடம்பைவிட்டு ஆத்மா, போயிட்டா அது நிச்சயமா சாந்தியோடதான் போறது. அதனால ஆத்மா சாந்தியடையட்டுங்கறதுல அர்த்தமே இல்லே!

அதுவும் இல்லாம, அப்படி ஒரு சாந்தின்னு இருந்தா, அவரால நேசிக்கப்பட்ட அவரோட ஜனங்கள் ஜாதி வித்தியாசம் பாக்காம ஒண்ணா அவரைத் தூக்கறதுலதான் கிடைக்கும். அப்படிச் செய்யாம அவரால, அவரை நேசிக்கற ஜனங்கள் மனசைப் புண்படுத்திப்பிட்டு அவர் உடம்பை எடுத்தா நிச்சயம் அவர் ஆத்மா சாந்தி அடையாது!" என்று நிறுத்தினார், பார்வதி மாமி. இத்தனை நாள் வாய் திறக்காமல் இருந்த பார்வதி மாமிக்கு இவ்வளவு பேசத் தெரியுமா?

"ஸ்ரீ இராமபிரான் அஸ்வமேத யாகம் நடத்தினபோது அவருக்கு எங்கேயுமே எதிர்ப்பு இருக்கல்லே! ஆனா கடைசியிலே அவரோட குழந்தைகளே குதிரையைப் பிடிச்சு யாகத்துக்குத் தடங்கல் ஏற்படுத்தினா! அதனால இராமர் கொறஞ்சு போயிடல்லே! அவரோட வீரத்துக்கு ஒரு சவாலாத்தான் இருந்தது. தனக்கு மிஞ்சினவன் யாருமில்லேங்கற அகம்பாவத்தை அடக்க லவகுசா தேவைப்பட்டா.

அது மாதிரி! இன்னிக்கி இவரோட கடைசி யாத்திரைக்கு இப்படி ஒரு தேவையில்லாத் விவாதம் தேவைப்பட்டது. அவர் எல்லாருக்கும் அப்பாற்பட்டவர்!" என்று நிறுத்தினாள்.

அதை மீறிப் பேச யாருக்கும் எதுவும் தோன்றவில்லை. நாலு பக்கமும் நாலு ஜாதிக்காரர்களும் தூக்க சுப்பண்ணாவின் கடைசி யாத்திரை அமைதியாகத் தொடங்கியது.

உன் இறந்த காலமும் என் எதிர்காலமும்

–ஜானகி ராஜன்

கதைக்கு முன்...

சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருக்கிறாள் நித்யா. முகம் எந்த வித உணர்ச்சிகளுமின்றி இறுகிக் கிடந்தது. நிலைகுத்தின பார்வை. முடிவோடு மனசு!

"நீ அவனை வச்சிருக்கியாடி?" என்ற கணவனின் எல்லைமீறிப் போன கேள்விக்கு நிமிர்ந்தாள். எதிரே ஆக்ரோசமாய் ஒரு மிருகம் உறுமிக்கொண்டு நின்றது. வெறி பிடித்த மிருகம்... எந்த நேரமும் பாயலாம். இவளின் மௌனமும், அழுத்தமான பார்வையும், மேலும் அந்த மிருகத்தை வெறி கொள்ளச் செய்தது.

"என்னடி... பதில் பேசாது முறைக்கிறே?" என்று அருகே வந்து, தலைமுடி பற்றித் தூக்கி நிறுத்தினான். வலித்தது. "வலியை இவனிடம் காட்டக் கூடாது... உடலிலும், மனத்திலும் எனக்கும் வலுவிருக்கிறது என்று காட்டவேண்டும்".

தன்வசம் முகம் திருப்பி, "வச்சிருக்கேதாண்டி?" மறுபடி கேட்டான்.

மனசுக்குள் வலித்தது. எதற்கு இந்தப் பொறுமை?

பொறுமையாய் இருந்திருந்து எதைச் சாதித்துவிட்டேன்? இன்னும் எத்தனை நாளைக்கு இந்த வெறிக்குப் பலியாவது? நான் படித்த படிப்பு இப்படி கோழையாக இருப்பதற்காகத்தானா?

யோசித்தாள்.

மாடி வீட்டுக்காரர் – செந்தில் சொன்னது நினைவில் வந்தது.

"தப்பே செய்யாதபோது எதுக்குங்க தண்டனை அனுபவிக்கணும்...? எந்த விதத்துல நீங்க குறைப்பட்டுப் போயிட்டிங்க? நீங்கள் மனுஷிதானே...?"

மனசுக்குள் உறுதி வந்தது.

வெகு அருகில் நின்ற கணவனின் முகம் பார்த்துச் சொன்னாள்.

"ஆமா!"

முடி பற்றியிருந்த அவனின் விரல்கள் தளர்ந்தன. முகம் நிறமிழந்தது. கணவனின் தடுமாற்றத்தை ரசித்தாள். "ஆமாம் என்றாலும் தனியாய் வாழமுடியும்". நான் படித்த படிப்பு என் வாழ்க்கைக்கு வழிகாட்டும்" – தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

நித்யா சொன்ன வார்த்தைகளைவிட, அதைத் துணிவோடு அவள் சொன்ன விதம்தான் சண்முகத்தைப் பாதித்தது. இன்றுவரையில் கொடிகட்டிப்பறக்கும் தன் ஆதிக்கம், இனி இவளின் எதிர்ப்பால் பலவீனப்பட்டுப் போகுமோ என்கிற பயம் வந்தது. அவளின் துணிவான விழிகளைச் சந்திக்கத் தயங்கினான். "இதை இப்படியே வளர விடக்கூடாது" என மனத்துக்குள் தீர்மானித்தவன், மறுபடி அவளின் முடி பற்றினான். முதல் அடி விழுந்தது. கல்லூரி நாள்களில் தான் கற்றுக்கொண்ட தற்காப்புக் கலை நினைவில் வந்தது நித்யாவுக்கு. இரண்டாவது அடிக்கு... அவன் பிடியிலிருந்து திமிர்ந்து விலகி... அடிக்க வந்த கையை எதிர்த்துப் பற்றினாள்.

"நானும் மனுஷிதான்" – என்றாள். ஸ்தம்பித்து நின்றான் சண்முகம்.

இனி கதைக்கு...

விலாசத்தைச் சரி பார்த்தேன். இதைப் படிக்கும்போது வித்யாவுக்கு (என் மனைவி) முகம் எப்படி சந்தோஷப்படும் என்று கற்பனை பண்ணிப் பார்த்தேன். நிறைமாதக்காரி. என் ஞாபகத்திலேயே இருப்பாள். இன்றைக்கு விடுமுறை நாள்தான். போயிருந்தால் பார்த்துவிட்டு வந்திருக்கலாம். இரண்டு நாளாகத் தொடர்ந்து "ஓவர்டைம்" வேலை செய்ததால் அலுப்பாக இருந்தது. போகவில்லை.

கடிதத்தைப் பெட்டியில் போட்டுவிட்டுத் திரும்பினேன். கடையில் சிகரெட் வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டு ரோட்டுக்கு வந்தேன். என்னை உரசினமாதிரி வந்து நின்றது பைக். ரமேஷ். என் தங்கை சுதாவின் கணவன் – எனக்கு நல்ல சிநேகிதனும்தான். போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கிறான்.

— மார்னிங் செந்தில்.

— குட்மார்னிங்... எங்கே இந்தப் பக்கம்?

— உங்களைப் பார்க்கத்தான் வந்திட்டேயிருக்கேன்!

— "என்ன விசேஷம்?"

— ஒரு கேஸ் விஷயமா மதுரை வரை போகவேண்டியிருக்கு... திரும்ப மூணு நாளாகும்... சுதாவை அழைச்சுட்டு வந்து அங்கே விட்டுட்டுப் போகலாம்னு நினைச்சேன்.

— "தாராளமா... நானும் உங்கக்கா, ஊருக்குப் போனப்புறம் போரடிச்சுக் கிடக்கறேன்".

— "அப்ப... இப்படியே வீட்டுக்குப் போயிட்டு... சுதாவும், நீங்களுமா திரும்பிடுங்க..."

எனக்கும் ஒரு வேலை மிச்சம்.

அவனுடன் பைக்கில் ஏறிக் கொண்டான்.

— "இல்லேண்ணா, என்னால் அந்தக் கதையோட முடிவை ஒத்துக்க முடியலை".

— "அதான் சரி... நடைமுறை வாழ்க்கையில் நீயா இருந்தாக்கூட அந்த முடிவைத்தான் எடுப்பே சுதா".

— "ம்ஹும்... நிச்சயமா இல்லே... கடைசிவரைக்கும் அவளைப் போராட்டக் குண முள்ளவளா சித்திரிச்சு... கடைசி யில் சமுதாய சம்பிரதாயங் களுக்குப் பணியவச்சது அபத் தம்... எனக்குப் பிடிக்கலை.

— "சரி... நீ வேணுமின்னால் வித்தியாசமாய் எழுதேன்!"

— "எழுதத்தான் போறேன்!"

நானும், சுதாவும் பேசிக் கொண்டே தெருமுனை திரும்பி னோம். அந்தக் காட்சி கண்ணில் பட்டது. என் வீட்டருகே கும்பலாய் ஆண்களும், பெண்களும், கூடிக் கூடி ஏதோ பேசிக் கொண்டிருந் தார்கள்.

— "என்னண்ணா கூட்டம்?"

— "தெரியலேம்மா" - நடையில் வேகம் கூட்டினேன்.

எதிர்வீட்டு ராமநாதன் கும் பலில் நின்று விவாதித்துக் கொண் டிருந்தார்.

— "என்னாச்சுங்க ராமநாதன்?"

— "அந்த நித்யாப் பொண்ணு மாடியிலேர்ந்து தவறி விழுந் துட்டா".

எனக்குள் மிகப் பெரிய அதிர்ச்சி.

— "அடி பலமோ?"

— "அப்படி இருந்தாத்தான் பரவாயில்லையே... ஆளே போயி டுச்சு".

என்னால் நம்பவே முடிய வில்லை... நித்யா இறந்துவிட் டாளா? காலையில் கதறிக் கொண்டு அவள் படிஏறி வந்த காட்சி மனசுக்குள் வந்தது. இரண்டு மணி நேரத்திற்கு முன்பு என்னோடு பேசிக்கொண்டிருந் தவள், இப்போது இல்லை என்கிற நிஜம் மனசை அறுத்தது.

"ப்ளீஸ்.. ஹெல்ப்" என்று கெஞ்சினதும்... அந்தப் பரிதாப முகமும்...

அவள் தவறி விழுந்திருப் பாளா? இருக்கவே இருக்காது. அவளை விழ வைத்திருக்க வேண் டும். என்னோடு பேசிவிட்டுப் போகிறபோது அவளின் முகத்தில் தெளிவிருந்தது.

— "யார்ண்ணா... சிவப்பா... கொண்டை போட்டிருக்குமே... அந்தப் பொண்ணா?"

— "ம்".

எனக்கொன்னும் நித்யா, உறவோ, வெகுநாளைய நட்போ கிடையாது. அவளின் நட்பு(?) கிடைத்து இரண்டே மணி நேரங்கள்தான் ஆகிறது. படிஏறி ப்ளீஸ் ஹெல்ப்" என்று கதறி ஓடிவந்து, உள்ளே நுழைந்து கதவு தாழிட்டு, "என்னை மன்னிச் சிடுங்க" என்று அழுதாளே... அப்போதுதான் அவளோடு முதல் பரிச்சயம்.

நித்யா... இந்த வீட்டுச் சொந்தக்காரரின் மருமகள். கல் யாணமாகி எட்டு மாதங்கள் இருக்கும். நான் இந்த வீட்டின் மேல் பகுதிக்குக் குடிவந்து மூன்றே மாதங்கள்தான் ஆகிறது. சிலமுறை அவளை - வாசல் தெளிக்கிறபோதோ, கோயிலிலோ, பஸ் நிறுத்தத்தில் கணவனோடோ - பார்த்திருக்கிறேன். பேசினது இன்றைக்குத்தான்.

— "என்னண்ணா ரொம்ப ஃபீல் பண்றியா?"

— "ஆமா சுதா... அந்தப் பொண்ணைப் பத்தி இன்னிக்குத் தான் முழுசும் தெரிஞ்சது. நரக வாழ்க்கை... இன்னிக்குக் காலை யில் அடிவாங்கிட்டு நம்ம வீட்டுக் குள்ளே வந்துட்டா..."

— "வீட்டுக்குள்ளே போய்ப் பேசுவோம்ண்ணா... நம்ம பேச றதைக் கவனிக்கிறாங்க".

படி ஏறினோம். வீட்டிற்குள் போக மனசில்லை. படிகளி லேயே நின்றோம்.

நினைத்தாலே நெஞ்சுக்குள் சிலிர்த்தது.

காம்பௌண்டிற்குள் ஒடுங்கின வீடு என்பதால் இங்கே நடப்பது வெளி மனிதர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. என்வீடு மேல்வீடு என்பதால் தெளிவாகக் கேட்கும்... ஏதோ புருசன், மனைவி சண்டை என்றுதான் நினைத்தேனே தவிர... இத்தனை கொடூரம் என்று இன்றுதான் தெரிந்தது.

கீழே நித்யாவின் கணவன் அழுதுகொண்டிருக்க... அந்த போலிக் கண்ணீரையும் நிஜ மென்று நம்பி..சிலர் அவனுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந் தனர். எதேச்சையாய் நிமிர்ந்த அவனின் பார்வையில் நான் விழுந் தேன். முகத்தில் ஆத்திரம்... எல் லோரையும் விலக்கிக் கொண்டு, படிஏறி ஓடி வந்தான். ஆக்ரோச மாய் என் சட்டையைக் கொத்தாகப் பிடித்தான். பட்டன் ஒன்று தெறித்து ஓடினது.

— "என்னாயிற்று இவனுக்கு?" என்னால் நிதானிக்க முடிய வில்லை.

என்னருகே நின்ற சுதா, திடீர்த் தாக்குதலால், பயந்து விலகி நின்றாள். அவளின் முகத்தில் குழப்பம்.

"— எல்லாம் உன்னால தாண்டா... உன்னாலதான் என்னோட நித்யா செத்துட்டா...

உன்னை நான் சும்மா விட மாட்டேன்.

கத்தினான்.

எனக்குப் பெருத்த அவமான மாக இருந்தது. கலைந்து நின்ற வர்கள் கும்பலாகச் சேர்ந்தார்கள். சிலர் படி ஏறி ஓடிவந்தனர். ராமநாதன்தான் எங்களை விலக்கி னார். பாதங்களுக்குக் கீழே பூமி நழுவுகிற மாதிரி பிரமை. நினைவு தெரிந்த நாள்முதல் எவனோடும் சண்டையிட்டதில்லை. எவனும் என் சட்டை பிடித்து... முதல் அவ மானம்.

— "என்ன சண்முகம்... .அவர் என்ன பண்ணினார்... அவர்கூட தகராறு பண்ணிட்டு...?"

"விடுப்பா" - விலக்கினோம்.

— "என்னாச்சு?" அர்வமாய் விசாரித்தார்கள். வெறிபிடித்த மிருகம் ஒன்றை வெகு அருகில் பார்த்தேன். "அந்தாளு மனுசனே கிடையாது" - நித்யா காலையில் சொன்னது ஞாபகம் வந்தது. விலகி நின்ற சுதா அருகே வந்தாள்.

— "அண்ணா உள்ள வா" - என் கைபிடித்து வீட்டிற்குள் அழைத்தாள்.

— "இவனாலதாங்க என் நித்யா போயிட்டா" - அழுதான். மறுபடி ஓடிவந்து சட்டையைப் பிடித்தான்.

— "யோவ்... விடுய்யா சட்டையை" என்ற சுதாவின் குரலுக்கு... முறைத்தான்.

கும்பல் மொத்தமும் என்னையே கவனித்தது.

— "என்னிக்கு இவனை குடிவச்சேனோ... அன்னிக்கே என் நிம்மதி போச்சு... என்ன பண்ணினானோ... என் நித்யாவை மயக்கிக் கைக்குள்ளே போட்டுட்டான். அவ... என்னை விட்டுட்டு இவன்கூடப் போறா... த்தூ" - காறி உமிழ்ந்தான். என் தோளில் எச்சில்பட்டு வழிந்தது. எனக்குள் கோபம் துளிர்த்தது.

— "கையை எடு!" என்றேன் கோபமாக.

அழுத்தமாய்ச் சட்டையைப் பிடித்தான்.

— "எனக்கும் கோபம் வரும்... வந்தா உன்னைவிட மோசமா நடந்துப்பேன்... மரியாதையா கை எடுத்துடு".

எடுத்துக் கொண்டான்.

— "எனக்குச் சந்தேகமாவே இருந்திச்சு... இன்னிக்கு ரெண்டு பேரையும் கையோட பிடிச்சிட்டேன். என் கண்ணு முன்னேயே வீட்டுக்குள்ளே கதவைச் சாத்திட்டாங்க... அப்பவே நாலு பேரைக் கூப்பிட்டு இவனை நாறடிச்சிருப்பேன். ஆனா அதிலே என்னோட குடும்ப மானமும் இருக்கே... ஏதோ ஆத்திரத்துல ரெண்டு அடி அடிச்சதென்னவோ உண்மை. அதுக்காக இப்படி பண்ணிக்குவாள்னு நினைக்கலியே" - தன் முகத்தில் அறைந்து கொண்டு அழுதான். எனக்கே இவன் நிஜமாய் அழுகிறானோ என்கிற சந்தேகம் வந்தது. அவனின் தேர்ந்த நடிப்பு கண்டு பிரமித்துப் போனேன்.

தான் தாலிகட்டின மனைவியின் ஒழுக்கத்திற்கு, மனதறிந்து களங்கம் சொல்கிறானே... இவன் மனிதன்தானா?



— "உன்னைச் சும்மா விடமாட்டேண்டா" - கத்திக்கொண்டு படியிறங்கிப் போனான்.

அத்தனை பேருக்கும் குற்றவாளியாய் நின்றேன்.

எல்லோரும் என்னையே கவனித்தனர். இவளின் சாவுக்கு நீதான் காரணம் என்று குற்றம் சாட்டின பார்வை.

நானா? நான் காரணமா?

— "அண்ணா முதல்லே வீட்டுக்குள்ளே வா".

போனேன். எதிர் சோபாவில் சுதா உட்கார்ந்தாள். காலையில் நித்யாவும் அதே இடத்தில்தான் உட்கார்ந்தாள். காற்றில்லாத புழுக்கம். ஃபேன் சுவிட்சைப் போட்டாள்.

— "என்னண்ணா நடந்தது... உன்மேல அவனுக்கென்ன கோபம்?"

பதில் சொல்ல வேண்டிய கேள்வி. காலைச் சம்பவம் மனசுக்குள் முழுதாய் வந்தது. சொன்னேன்.

"ப்ளீஸ் ஹெல்ப்" என்று நித்யா ஓடிவந்தாள். முகம் முழுதும் பதற்றம். எங்கே போவது என்று புரியாமல் கண்கள் அலைந்தன. அப்போது நான் கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன் வித்யாவுக்கு. என்னை நோக்கி ஓடிவந்தாள். உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டாள். கதவைச் சாத்துகிற கடைசி விநாடிகளில், படிகளில் ஏறி, மேலே வந்துவிட்ட அவளின் கணவனைப் பார்த்தேன். கையில் விறகுக்கட்டை. எத்தனை ஆக்ரோசம் அவன் முகத்தில்?

அதற்குள் கதவை மூடிவிட்டாள். கதவு சாய்ந்து திரும்பி நின்றாள். மூச்சு வாங்கியது. நிறைய

அடி வாங்கியிருப்பாள் போலிருக்கிறது. தலைமுடி கலைந்து... நெற்றியில் காயம். கன்னம், கைகள் முழுதும் ரத்தக் கீறல்கள். கிழிக்கப்பட்ட சேலை.

— "மன்னிச்சிடுங்க" என்றாள். கண்மூடி ஏதோ யோசித்தாள். பாவம் எத்தனை வேதனையோ?

— "யேய்... வெளியே வாடி" வெளியே கணவனின் குரல்.

இவள் பதில் பேசவில்லை.

— "வரமாட்டியாடி...?"

— "................" மௌனம்.

— "ஏதாவது பதில் சொல்லுங்க!" என்றேன். தவிக்கிற நிலையில் நான், இவளைத் தொடர்ந்து உள்ளேயே நிற்க வைத்தால் - வெளியே நின்று கத்துகிற கணவனின் குரலுக்கு யாராவது நான்கு பேர் வந்துவிட்டால் - கதவு திறந்து இந்தக் கோலத்தில் இவள் வெளியே போனால் - பார்ப்பதையே நிஜம் என நம்பும் இந்த ஊரில் என் நிலைமை...?

யோசித்தேன்.

அதே சமயம், இத்தனை மோசமாக அடிவாங்கி நிற்கிறவளை வெளியே அனுப்பிவிட கஷ்டமாக இருந்தது. வெளியே இப்போது போனால்... அவன் இருக்கிற வெறியில் ஏதாவது செய்துவிட்டால்...?

யோசித்தேன்.

நடப்பது நடக்கட்டும்.

— "வெளியே வந்துதாண்டி ஆகணும்... எத்தனை நேரம் உள்ளேயே நிப்பே?"

— "................"

— "ஓ... புரிஞ்சிடுச்சு... இவன்தானா, அவன்?"

"அவன்" என்று எனக்குப் புரியவில்லை. என் முகம் பார்த்து "சாரி" என்றாள்.

— "வீட்டுக்கு வாடி... உன்னைக் கவனிச்சுக்கிறேன்" - கையிலிருந்த விறகுக் கட்டையை வீசியடித்திருப்பான் போலிருக்கிறது... கதவில் மோதிக் கீழே விழும் சப்தம் கேட்டது.

அப்படியே கண்மூடி நின்றிருந்தாள். தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன். கொஞ்சம் நிதானம் வந்தது அவளிடம்.

விஷவாயு வழக்குகள்

நள்ளிரவில் உறங்கிக் கொண்டிருந்த அப்பாவி மக்களின் உயிர்களைப் பறித்துச் சென்ற போபால் விஷ வாயு விபத்தை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. இவ்வாண்டு மார்ச் 31ஆம் தேதி நிலவரப்படி, போபால் விஷ வாயு விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு நீதிமன்றங்களில் நஷ்ட ஈடு கேட்டுத் தொடுத்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை 5,17,189. பைசல் செய்யப்பட்ட வழக்குகள் 46,783. ரூ. 155.91 கோடி நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள வழக்குகளைப் பரிசீலிக்க உச்சநீதி மன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி திரு. என்.எம். கஸ்லிலால் தலைமையில் உயர்நிலை ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

நன்றி : தூவானம்

— "இப்படி உட்காருங்க".

உடல் முழுதும் காயங்கள் பீரோ திறந்து டிஞ்சர் அயோடினும், பஞ்சும் எடுத்துக் கொடுத்தேன். நிதானமாய்க் காயங்களைத் துடைத்து மருந்திட்டாள். அவளிடம் எதையும் நானாகக் கேட்க விருப்பமில்லை.

— "ரொம்ப தேங்ஸ்... வெளியே அனுப்பியிருந்தீங்கன்னா செத்திருப்பேன்".

சில நிமிடம் மௌனம். கதவு தாழிட்டேயிருப்பது எனக்கு உறுத்தியது. எழுந்து போய்த் திறந்து வைத்தேன். என் முகம் பார்த்தாள். ஏதோ சொல்லத் தவிப்பது புரிந்தது.

— "உங்க மேல நம்பிக்கை வர்றது... யார்கிட்டேயாவது என் துக்கங்களைச் சொல்லணும்னு தோணறது... கேட்பீங்களா?"

— "சொல்லுங்க!"

- முகம் இறுகியது. அதில்தான் எத்தனை வேதனை?

— "எனக்கு அழுகைதான் வருது".

— "அழுதிடுங்க".

எதை நினைத்தாளோ, திடீரென அவளிடம் அழுகை பொங்கியது. கொஞ்சம் அழுது... தேறினாள்.

— "நான் பி.காம்... பர்ஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ணினவள். என் நிலைமையைப் பார்த்தீங்களா?" அவளாகப் பேசட்டும் என்று நான் தொடர்ந்து, மௌனமாக இருந்தேன். யோசித்து யோசித்து... திடீர் திடீரென உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாள்!

— "அழகாகப் பொறக்கவே கூடாது... வேதனை... எம்மேல சந்தேகம்... தீராத சந்தேகம்... எனக்கு எவன்கூடவோ தொடர்பு இருக்கோன்னு சந்தேகம்".

— "அவன்" என்று நித்யாவின் கணவன் சொன்னதிற்கு அர்த்தம் புரிந்தது.

- "நானா?"

— "எப்படி என்னை நிரூபிக்கறதுன்னு தெரியலை... நடக்கிறதெல்லாம் அனுபவிக்கிறபோது... எவன்கூடயாவது போனாக்கூடத் தப்பில்லையோன்னு தோணறது... அந்தாளு மனுசனே இல்லே... மிருகம்... வெறிபிடிச்ச மிருகம். படிச்ச மிருகம்".

— "....................."

— "ஏமாந்துட்டேன்... நல்லா ஏமாந்துட்டேன். எங்களது "லவ் மேரேஜ்" வேறே."

எனக்குள் ஆச்சரியம்.

— "வேஷம் போட்டு ஏமாத்திட்டான். எல்லார்க்கும் ரெண்டு முகம்... இந்தாளுக்கு மூணு முகம். உள்ளுக்குள்ளே மிருகம் இருக்கிறது தெரியாம போயிடுச்சு".

எப்படி அவளுக்கு ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை. கல்யாண நாளிலிருந்து தன் துக்கங்கள் பூராவும் சொல்லி அழுதாள். இத்தனைக் கொடுமைகளையும் சகித்துக் கொண்டா வாழ்ந்தாள் இத்தனை நாளும்? எனக்குள் கோபம்.

— "இவ்வளவும் சகிச்சிட்டு அவர்கூட வாழத்தான் வேணுமா?"

— "இந்தமாதிரி நானும் நிறைய தடவை யோசிச்சிட்டேன்... ஊர் உலகம் பேசும்னு பயமாயிருக்கு!".

— "ஊருக்கு எதுக்குப் பயப் படறீங்க?! நல்லதுக்கும் பேசும்... கெட்டதுக்கும் பேசும். நம்ம வசதிக்காகத்தான் சமூகக் கட்டுப் பாடுகள், நியதிகள் எல்லாமே. அந்தக் கட்டுப்பாடுகளும், நியதி களும் நமக்குத் துன்பம் தர்றபோது அதை மீறுவது தவறில்லே... தனியா வாழத் தைரியம் இல்லையா...? படிச்ச படிப்பு அப்புறமெதற்காக? மனுசனுக்குத் தைரியம் தர்றதே கல்வி தானே?"

யோசித்தாள்.

படித்தவளிடம் இத்தனை கோழைத்தனமா? இதற்கு நம் மரபுகளும் ஒருவேளை கார ணமோ? கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன் என்பது இன்றைக்குச் சரியா?

— "தப்பே செய்யாதபோது எதுக்குங்க தண்டனை அனுபவிக் கணும்? எந்த விதத்துல குறைப் பட்டுப் போயிட்டீங்க? நீங்களும் மனுஷிதானே?"

வெகு நேரம் மௌனமாகச் சிந்தனையில் இருந்தாள்.

பின் எழுந்தாள். எழுந்தபோது அவள் முகத்தில் "தெளிவு".

— "ரொம்ப தேங்க்ஸ்... நான் வர்றேங்க" - படியிறங்கிப் போனாள்..

சுதா மௌனமாக இருந்தாள். நான் சொன்னவற்றை நம்பினாளா என்பதை அவளின் முகத்தில் இருந்து அறிய முடியவில்லை... அவளின் மௌனம் மேலும் எனக்கு வேதனை தந்தது.

மின்சாரம் தடைபட... ஃபேனின் சுழற்சி நின்றது. அறையில் மறுபடி புழுக்கம். எழுந்துபோய் ஜன்னல் கதவு திறந்தாள். கதவின் இடுக்கில் சிக்கியிருந்த அந்தக் காகிதம் கசங்கலாய்க் கீழே விழுந்தது. சோப்பு உறையின் உள்ளே யிருக்கிற வெள்ளைக் காகிதம். குனிந்து எடுத்துப் பிரித்தாள்.

— "என்னது?"

அருகே வந்தமர்ந்து என்னிடம் கொடுத்தாள். பென்சில் எழுத்து கள், அவசரக் கிறுக்கலாக!

நண்பர் செந்திலுக்கு...

சுமைதாங்கியாய் நின்று என் துக்கங்களை வாங்கிக்கொண்ட தற்கு நன்றி. உங்கள் கேள்விகள் எனக்குள் தெளிவு வரச்செய்தன. நானும் இந்த உலகத்தில் வாழத் தான் போகிறேன். என் கல்வி எனக்கு உதவும்... இந்த நரகம் விட்டு வெளியேறுவது என முடி வெடுத்து விட்டேன். இங்கு என் னென்னவோ நிகழ்கின்றன. இந்த நரகம் விட்டு நான் வெளியே வருவதற்குள் எனக்கு ஏதேனும் நிகழ்ந்துவிட்டால் அது என் துர திர்ஷ்டம்... அப்படி ஏதேனும் ஆனால் என் விஷயங்களை யாரிட மும் வெளியே சொல்ல வேண் டாம். என் மனவேதனைகள், ரகசி யங்கள் உங்களுக்கு மட்டுமே தெரியும்... என்னதான் நான் வேதனைப்பட்டிருந்தாலும்... இது என் குடும்பம்... என் குடும்பத்தின் பெயருக்குக் கேவலம் வர எனக்கு விருப்பமில்லை...

நம்பிக்கையுடன்

நித்யா.

— "என்னண்ணா பண்ணப் போறே?"

— "அதான் தெளிவா எழுதி யிருக்காளே! அவ வார்த்தைக்கு மதிப்பு தரவேணாமா?"

— "உம்மேலயும்... அவமேலே யும் பழியிருக்கு... அவ புருசன் இந்த சேத்தை உங்கமேல் வீசாம இருந்திருந்தா... நீ சொல்றமாதிரி அவ வார்த்தைக்கு மதிப்பு தர லாம்... இப்ப குடுத்தா அது முட்டாள்தனம்!"

— "என் நிஜம் எனக்குத் தெரியும்".

— "உனக்குத் தெரிஞ்சா போதாது... ஊருக்குத் தெரி யணும்".

— "ஊரைப் பத்தி எனக்குக் கவலையில்லை..."

— "அண்ணி நம்புவாங்கன்னு நினைக்கிறியா?"

— "வித்யாவா... அவளுக்கு என்னைப் பத்தித் தெரியும்... வரட்டும்... இந்தக் கடிதம் காட்டி உண்மையைச் சொல்லிடறேன்".

— "செத்துப்போனவளோட வார்த்தையைப் பெரிசா எடுத்துப் பேசறியே... அவ எத்தனை ஜாக் கிரதையா தன் குடும்பத்துக்குக் கேவலம் வரக்கூடாதுன்னு யோசிச் சிருக்கா பாத்தியா? நீ...? எனக்கே சந்தேகமா வர்றது இப்போது... ஒருவேளை நிஜமாவே உனக்கும் அவளுக்கும் தொடர்பு இருந் ததோ?"

— "சுதா", - பதறிப்போனேன்.


— "ஏண்ணா... பதர்றே... உனக்கே இத்தனை பதற்றம் இருந்தா... நாளைக்கு வந்து இதைக் கேள்விப்படற அண்ணி மனசு எப்படித் துடிக்கும்? புரு சனை அடுத்தவ தப்பாப் பேசினா மனசு என்ன பாடுபடும்னு பொம் பளைக்குத்தான் புரியும்... இன் னிக்கு நீ சொல்றதை அண்ணி நம்பலாம். நாளைக்கு நாலுபேர் நாலுவிதமாப் பேசறபோது... அண்ணி மனசுல சந்தேகம் வரலாம். "நாம பிரசவத்துக்குப் போனப்பத்தானே இது நடந்தது... ஏன் ஒரு சமயம் உண்மையா இருக்கக் கூடாதுன்னு? சந்தேகம் வந்தா மனசுல இடைவெளி வரும்... குடும்ப நிம்மதியே அவ் வளவுதான்... அதுக்கும் மேலே ஒண்ணு சொல்றேன்... இந்த சமூகத்துல ஆணோட ஒழுக்கத்தை விட பெண்ணோட ஒழுக்கம்தான் பெரிசுன்னு பழகிட்டோம். அந்த நித்யாவை சுத்தமானவன்னு நீ நம்பினா... உனக்காக இல்லேன் னாலும் அவளுக்காக, அவமேல இருக்கிற களங்கத்தைப் போக் கறதுக்காகவாவது நடந்ததையும் இந்த லெட்டரையும் ஊருக்குச் சொல்லணும்... சும்மா யோசிச்சுக் குழம்பாதே... இன்னமும் அவர் மதுரைக்குக் கிளம்பியிருக்க மாட் டார். ஃபோன் பண்ணி வரச் சொல்றேன்.

— "என் பதிலை எதிர்பாராது ரிசீவரை எடுத்துச் சுற்றினாள்.

— ஹலோ... பி.2 போலீஸ் ஸ்டேசனா... ரமேஷ் இருக்காரா?"

"..........."

"அவரைப் பேசச் சொல் லுங்க..."



புதுச்சேரியும் தமிழும் சில தனித்தன்மைகள்

முனைவர். இரா. திருமுருகன்

'மங்கை ஒருத்தி தரும் சுகமும் - எங்கள் மாத்தமிழ்க் கீடில்லை என்று சொல்வேன்' என்றும்,

'நீ நைந்தாய் எனில் நைந்து போகும் என் வாழ்வு' என்றும்,

'தமிழை என் உயிர் என்பேன்' என்றும் தன்னை மறந்த நிலையில் தமிழைப் பாடிய ஒரே பாவலன் பாவேந்தனைத் தந்த புதுச்சேரி மண்ணுக்கென்று தனியானதொரு தமிழ் மணம் உண்டு. பல்வேறு ஆட்சித்தலைமைகளுக்கு ஆட்பட்ட போதிலும், தமிழ் உணர்வு என்ற வகையில் புதுவை தன் தனித்தன் மையைப் போற்றிக் காத்துவந் துள்ளது.

வரலாற்றுப் புகழ் பெற்ற தமிழ் நாட்குறிப்புகள்:

17ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இங்கு வாழ்ந்த ஆனந்த ரங்கர் தமிழில் எழுதிய நாட்குறிப் பும், இறுதிப்பகுதியில் வாழ்ந்த இரண்டாம் வீரா நாயக்கர் எழுதிய தமிழ் நாட்குறிப்பும் தமிழ் வரலாற் றில் தனியிடம் பெறுகின்றன. இங்கு வாழ்ந்த முசே, துய்ப்புய் (Mousset, Dupuis) என்னும் பிரஞ்சு அறிஞர்கள் தமிழ்-பிரஞ்சு, பிரஞ்சு-தமிழ் ஆகிய இரு பேரகர வரிசைகளை இவ்விரு மொழிகளுக்கும் அழியாக் கருவூலமாய் ஆக்கியளித்திருக் கிறார்கள்.

விலட்சணகவி ஏ.வெ.இராமாநுச நாவலர், அருணாசல குருக்கள், புலவர் பொன்னையா, சுப்பராய முதலியார், நாகலிங்க அடிகள், பொன்னு உபாத்தியாயர், பு.அ.பெரியசாமி (யமகம் திரிபுகள் பாடுவதில் வல்ல பெரும்புலவர்), பங்காரு, (பாவேந்தரின் ஆசிரியர்), வேலாயுத உபாத்தியாயர், இலாசுப் பேட்டை ஆறுமுகனார், சவராயலு (திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனாரின் மாணவர்), ஞான சித்த அடிகள், வில்வநல்லூர்க் கவி வீரராகவன், சாமுவேல், பொன்னுசாமி, பாரதி யார், பாவேந்தர், இலக்கணப் புலவர் வீ.துரைசாமி, இராமாநுசம், சுப்பராயப்பத்தர், இலக்கணச் செம்மல் சுந்தரகுமரனார், சுத்தா னந்த பாரதியார், வாணிதாசன், தமிழ் ஒளி முதலியோர் பெருமை வாய்ந்த புதுவைப் புலவர் மரபில் வந்த புகழ் சால்பெருமக்கள்.

நல்ல தமிழில் வல்லமை வளர்க்கும் சொல்வதெழுதுதல்.

தமிழ் நாட்டில் ஆங்கிலேயர் நடத்தி வந்த மெட்ரிகுலேசன் (Matriculaiton) என்ற ஆங்கிலத் தேர்வுக்குச் சமமாகப்பள்ளியிறுதித் தேர்வு (S.S.L.C.) என்னும் தமிழ்த் தேர்வை நடத்தியது போல், புதுவையில் பிரஞ்சியர், பிரவே (Brevet) என்னும் பிரஞ்சுத் தேர்வையும் அதற்குச் சமமான தமிழ்ப்பிரவே என்றே தேர்வையும் நடத்தி வந்தனர். அதில் 'சொல்வ தெழுதுதல்' (Dict'ee) என்று ஒரு தாள் உண்டு.

ஒலி ஒன்றாகவும் எழுத்தமைப்பு வெவ்வேறாகவும் சொல்வடிவங்கள் அமைவது பிரஞ்சு மொழியின் இயல்பு. பிரஞ்சில் 'ரெகார்தே' என்று ஒலிக்கப்படக்கூடிய சொற் களே, பத்து உள்ளன. Regarder (பார்த்தல்), regardez (பாருங்கள், பார்க்கிறீர்கள்), regardais (பார்த்துக் கொண்டிருந்தேன், பார்த்துக் கொண்டிருந்தாய்), regardait (பார்த் துக் கொண்டிருநதான், பார்த்துக் கொண்டிருந்தாள்), regardaient (பார்த்துக் கொண்டிருந்தனர், பார்த்துக் கொண்டிருந்தன, regar-dal (பார்த்தேன்) regarde' (பார்த்த-ஆண்பால் ஒருமை, regardee' (பார்த்த-பெண்பால் ஒருமை), regar de's (பார்த்த-ஆண்பால் பன்மை), regardee's (பார்த்த - பெண் பால் பன்மை) என்பன காண்க.

எழுதுவோர் 'ரெகார்தே' என்ற ஒலியைக் கேட்டு அதன் சரியான வடிவைச் சூழ்நிலைக்கு ஏற்பத்தான் அறிந்துகொள்ளவேண்டும். இதில் தேர்ச்சி பெறுவிக்கவே பிரஞ்சுக் கல்வியில் 'சொல்வதெழுதுதல்' பயிற்சி இடம் பெறுகிறது. பிழை யின்றி எழுதும் திறனை வளர்ப் பதிலும் இலக்கணத்தைக் கைவந்த கலையாக ஆக்குவதிலும் இதற்கு இணையான பயிற்சியே இல்லை. ஆயிரக்கணக்கான மாணவர் எழுதும் பொதுத்தேர்விலும் இத் தேர்வு நடத்தப்படும். இதுபோன்ற தேர்வினைப் பிரஞ்சுக்காரர்கள் தமிழ்ப்பிரவே தேர்விலும் புகுத் தினர். எல்லாப் பள்ளி வகுப்புகளி லும் சொல்வதெழுதுதல் பயிற்சி கட்டாயம் அளிக்கப்படும். சொற்க ளின் சரியான வடிவங்களை ற-ர, ன-ண-ந, ல-ள-ழ முதலிய எழுத்து வேறுபாடுகளை அறிந்தும், மிகுதல், இயல்பாதல், திரிதல் ஆகிய புணர்ச்சிவேறுபாடுகளை அறிந்தும் எழுதும் திறனும், நல்ல சொல் வளமும் இப்பயிற்சியால் ஏற்படும்.

15-20 வரியளவுள்ள ஓர் உரை நடைப் பகுதியை ஆசிரியர் ஒவ் வொரு சொல்லாகச் சொல்ல, மாணவர் அதைக் கேட்டு எழுதுவர். இது இலக்கணப் பயிற்சியாதலின், இறுதியில் சொற் பொருள், புணர்ச்சி விதி, தொடரிலக்கணம், சொல்லிலக்கணம் முதலியன குறித்த வினாக்களும் தரப்படும். அவற்றுக்கு விடை எழுத வேண்டும். சொல்வதெழுதுதலில் செய்யும்



காலத்தை வென்ற கவிவேந்தன் வாணிதாசன்!

புரட்சிப் பாவலர் தி. தேவிதாசன், எம்.ஏ., பி.எட்.,

முற்றாத காளையாக நானிருந்த காலை
முன்னவராம் என் அண்ணன் வாணிதாசன் என்றும்
வற்றாத கவியுள்ளத் தால்பாடி வைத்த
வளமான காவியங்கள் கொடிமுல்லை[1] யோடே
உற்றபெரும் புரட்சிப்பா தமிழச்சி[2] இன்றும்
உலகெங்கும் புகழ் பரப்பும் எழிலோவி யம்[3] தான்;
சற்றேனும் மறவாத சிரித்தநுணா[4] யாவும்
சலிப்பில்லா இனிக்கும்பா[5] விருத்தங்கள்[6] தாமே!

உற்றருவில் தோப்பிருந்து உவகையூட்டிப் பாட
உருண்டோடிச் சலசலக்கும் அருவியோநம் மானாய்
நற்றமிழ்சேர் சந்தனத்தைக் குழைத்துமேனி எங்கும்
நங்கையர்தாம் பூசிமூழ்கி நறுமணத்தை நல்கக்
குற்றமில்லா வட்ட நிலா குளிர் தென்றல் சூழக்
கோல மயில் ஆட்டமெல்லாம் தீந்தமிழில் தீட்டிக்
கற்றோரின் மனத்திருக்கும் கவிவாணி தாசன்
காலத்தை வென்றகவி வேந்தனவன் தானே!

(1,2,3,4,5,6 ஆகியவை வாணிதாசனாரின் பாவியங்களில் முக்கியமானவை.)

பிழைகளின் எண்ணிக்கை அடிப்படையில் மதிப்பெண் வழங்கப்படும். இதில் மதிப்பெண் மிகுதியாகப் பெற்றோர் நல்ல மொழித்திறன் பெற்றவராக மதிப்பிடப் பெறுவர்.

இந்தப் பயிற்சியை இன்றைய கல்வித்திட்டத்தில் இணைத்திருந்தால், சற்க்கும், கேட்க்கும் என்றும், முயர்ச்சி, தொடற்சி என்றும், மக்கட்தொகை, அஞ்சற்தலை என்றும் எழுதுவோரை இன்று காண முடியாது. வாளை உருவினான் என்பதை வாலை உருவினான் என்றும், சான்றோர்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதைச்சான்றோர்கள்ள அரிந்து கொல்ல வேண்டும் என்றும் எழுதும் அவலம் இராது. முன்னாள் அமைச்சர் என்ற பொருளில் முந்நாள் அமைச்சர் (மூன்று நாள் அமைச்சர்!) என்று எழுதும் அலங்கோலமும் இராது.

திங்கள் தோறும் இலக்கணக் கூட்டங்கள்

மதுரையிலிருந்து வந்து புதுவையில் சிலகாலம் பணிசெய்து திரும்பிய ஓர் அறிஞரை மதுரை நண்பர்கள், "புதுவையில் என்ன புதுமை?" என்று கேட்டார்களாம். "அங்கே தமிழ் இலக்கணத்துக்காகவே மாதம் ஒரு கூட்டம் நடத்துகிறார்கள். 70, 80 பேர் அதைத் தரையில் உட்கார்ந்து கொண்டு கேட்கிறார்கள். இது போல் தமிழ் நாட்டில் வேறு எங்கும் பார்த்தது இல்லை" என்று அதற்கு விடை சொன்னாராம். ஆண்டுக்கு ஒரு முறை இங்கே ஒருநாள் இலக்கணக், கருத்தரங்கமும் நடத்தப்படுகிறது. பள்ளியிறுதி, மேனிலைப் பொதுத் தேர்வுகளை எழுதும் மாணவர் அனைவர்க்கும் தமிழ் இலக்கணப் பாடப்பகுதியில் மட்டும் போட்டித் தேர்வு நடத்திப் பரிசளிக்கப்படுகிறது. இவற்றைச் செய்துவருவது புதுவைத் தமிழன்பர்களின் தமிழ்ப் பணி அறக் கட்டளை தான் என்பது குறிப்பிடத்தக்கது.

நல்லதமிழ் இதழ்கள்

புதுவையிலிருந்து தெளிதமிழ், வெல்லும் தூய தமிழ், அன்றில் ஆகிய மூன்று தனித்தமிழ் இதழ்கள் வெளிவருகின்றன. இவற்றில் தமிழ் வளர்ச்சி ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வெளிவருவது 'தெளிதமிழ்'. மொழிப்பாதுகாப்புக் குறித்த கட்டுரைகள், இலக்கண வினா விடைகள், எளிய முறை யாப்பிலக்கணப்பயிற்சி, குறித்த இலக்கணத்தில் பாட்டுப் படைத்தல், மாணாக்கர்க்கு மொழித்திறன் வளர்க்கும் போட்டி முதலிய பகுதிகளுடன் வெளிவரும் இத்திங்களிதழ் தமிழுலகம் இன்று வரை காணாத புதுமை.

தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழு

தமிழ் வளர்ச்சிப் பணியில் முனைப்பான செயற்பாடுகளையும், தேவைப்பட்டால் அரசை வற்புறுத்தும் போராட்டங்களையும் திட்டமிட்டு நடத்தும் நோக்கில், புதுவையில் உள்ள பல்வகை இலக்கிய அமைப்புகளைச் சார்ந்தும் சாராதும் உள்ள தமிழ் அன்பர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நிறுவனம் இது. அரசு ஏற்கெனவே செய்த சட்டங்களையும், பிறப்பித்த ஆணைகளையும், நிறைவேற்றிய தீர்மானங்களையும், அமைத்த அலுவலகங்களையும் சரிவர நடைமுறைப் படுத்துமாறு வற்புறுத்துவதை இந்நிறுவனம் முதற் பணியாக மேற்கொண்டுள்ளது.

1) 29 ஆண்டுகளுக்கு முன், புதுவையின் ஆட்சிமொழி தமிழே

என்றும், மாகியில் மலையாளமும், ஏனாமில் தெலுங்கும் பயன்படுத்தப் படலாம் என்றும் புதுவை அரசு சட்டம் இயற்றியது. ஆனால் இவ்வளவு காலத்துக்குப் பிறகும் அமைச்சர்கள் அரசு செயலர்கள் பலர்க்கு இதுபற்றித் தெரியாது. இவர்களில் சிலர் புதுவையின் ஆட்சி மொழிகள் ஐந்து; அவை ஆங்கிலம், பிரஞ்சு, தமிழ், தெலுங்கு, மலையாளம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும் எல்லா அரசு அலுவலகங்களிலும் அலுவல்கள் ஆங்கிலத்தில் மட்டுமே நடந்து கொண்டிருக்கின்றன. தமிழில் அலுவல் செய்யத் தேர்வு பெறும் எழுத்தர்களுக்குத் தமிழ் தெரிய வேண்டியதில்லை, தமிழ்த் தட்டச்சும் தெரியவேண்டியதில்லை. ஆங்கிலம் ஒன்று மட்டும் தெரிந்தால் போதும்.

2) 17 ஆண்டுகளுக்கு முன் நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளைத் தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் எழுத வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால், இன்றும் சில அரசு அலுவலகங்களிலேயே முழுவதும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகளைக் காணலாம்!

3) புதுச்சேரி என்ற பெயரைப் பிரஞ்சியர் 'பொந்திசேரி' என்றும், ஆங்கிலேயர் 'பாண்டிச்சேரி' என்றும் சொல்லிவைத்து விட்டுப் போனார்கள். இந்த அடிமை அடையாளக் குறி இன்னும் நீங்கிடவில்லை. 14 ஆண்டுகளுக்கு முன் புதுவைச் சட்டமன்றம் புதுச்சேரி என்ற பெயராலேயே இம் மாநிலத்தை அழைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியும், இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை.

4) சென்னையில் உள்ள தமிழ் வளர்ச்சி இயக்கம் போல் புதுவையில் ஆட்சி மொழி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன் 'தமிழ் வளர்ச்சிச் சிறகம்' என்ற அலுவலகத்தை அரசு அமைத்தது. ஆனால் இந்த அமைப்பின் மூலம் தமிழ்மொழி முன்னேற்றம் என்று ஒரு சிறிய அளவிலான நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. சொல்லப்போனால் இந்த அலுவலகத்தில் 'தமிழே' இல்லை என்பது கசப்பான உண்மை.

மேற்கண்ட நான்கும் அரசே பிறப்பித்தவை. தன் பிள்ளையைத் தானே தின்னும் முதலையைப் போலப் பெற்ற அரசே இவற்றைப் புறக்கணித்து அழித்து வருகிறது!

இவற்றை நடைமுறைப் படுத்துமாறு தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழு பல முறை வேண்டுகோள் விடுத்தது; 600 தமிழன்பர்களைக் கொண்ட கோரிக்கைப் பேரணி ஒன்றை நடத்தியது. எதற்கும் எள்ளளவும் பயன் இல்லை. இறுதியாக, 23.3.94 முதல் நடைபெற்ற புதுவைச் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முடியும் வரை, அரசின் ஆட்சி மொழிப் புறக்கணிப்புப் போக்கைக் கண்டித்துத் தமிழன்பர் வீடுகளில் கறுப்புக் கொடி ஏற்றுவது என்னும் போராட்டத்தை நடத்தியது. நாளேடுகள் ஆதரித்தன. சட்டமன்ற உறுப்பினர் சிலர் இது பற்றிச் சட்டமன்றத்தில் பேசினர்; வினாத் தொடுத்தனர்.

விளைவாக, "அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது" என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடமிருந்து மட்டும் விடை வந்துள்ளது.

இவ்வாறாக, மொழிப்புலமையில் முன் நிற்பதனால் இவ்வூரைச் சென்ற நூற்றாண்டில் திரிசிரபுரம் பெரும் புலவர் மீனாட்சி சுந்தரனார் 'வையம் புகழ் புதுவை' என்று பாராட்டியிருக்கிறார். 'செந்தமிழ்த் தென்புதுவை' என்று பாரதியார் குறிப்பிடும் இவ்வூர், அதன் தனித்தன்மையை இன்று வரையில் போற்றிக் காத்துவருகிறது.

பாரதிக்கு ஒரு கடிதம்

அன்புள்ள பார்தியே!
வெள்ளை நிறநூல் ஒன்று
என்னைச் சிறைப்படுத்தி
வைத்ததை நீ
கொடுமை என்றாய்
அடிமை என்றாய்.
சிலந்தி வலைக்குள்- நான்
சிறைப்பட்டுப் போனதுண்மை.
வலை அறுத்து என்னை மீட்டது
ஏன் என்று கேட்பது
ஏன் என்றால்...
இன்று என் சிறகுகள்
கிள்ளப் பட்டு
இந்திய வீதிகளில்
நான் சிதைபட்டுப்
போனதென்ன கொடுமை!
இன்று
தங்கமுலாம் பூசிய
ஆயிரமாயிரம்
சங்கிலிகளால் சிறைப்பட்டு
- வேதனையால் வெம்புவதை
யாரறிவார்?



பாஸ்கரன் பிச்சைமுத்து

திருநள்ளாறு: அன்றும் இன்றும்

வித்துவான் ரெ. நா. சீனிவாசன், எம்.ஏ.,

புதுவை மாநிலததைச் சேர்ந்த காரைக்கால் பிரதேசத்தின் ஆறு கொம்யூன்களுள் (வட்டம்) திருநள்ளாறும் ஒன்று. திருநள்ளாறு பாடல் பெற்ற ஸ்தலம். இங்குள்ள ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ சனீஸ்வர பகவான் கோயில் கொண்டுள்ளார்.

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் நான்கு ராஜ வீதிகளும், மூன்று தெருக்களும் அடங்கிய இவ்வூரில் சுமார் முப்பது ஓட்டு வீடுகளும் நாற்பது கூரை வீடுகளும் மட்டுமே இருந்தன. இன்றோ ஓட்டு வீடுகள், கூரை வீடுகளின் எண்ணிக்கை ஐநூறுக்கு மேல் உள்ளன. இரண்டரை ஆண்டுகளுக்கொரு முறை ஸ்ரீ சனீஸ்வரபகவான் ஒரு ராசியிலிருந்து அடுத்த ராசிக்குப் பிரவேசிக்கும் சனிப்பெயர்ச்சி விழாவுக்குச் சுற்றுப்பட்ட ஊர்களிலிருந்து நடந்தும், மாட்டு வண்டிகளிலும் நூற்றுக்கணக்கில் வந்து சென்றனர். சாலை வசதிகளும், பேருந்துகளும் அப்போது இல்லை.

இன்றோ, சனிப்பெயர்ச்சி விழாவுக்குச் சுமார் ஐந்துலட்சம் பக்தர்கள் வந்து செல்கிறார்கள். திருநள்ளாறு சுற்றுலா மையமாகவும் யாத்திரை ஸ்தலமாகவும் ஆகிவிட்டபடியால் நாள் தோறும் பேருந்துகளில் சுற்றுலாப்பயணிகள் வந்து சென்ற வண்ணம் இருக்கிறார்கள்.

திருநள்ளாற்றுக்கு வருகை தரும் பக்தர்கள், அருகிலுள்ள காரைக்கால் அம்மையார் ஆலயம், முஸ்லிம்களின் புனிதஸ்தலமாகிய நாகூர், கிறிஸ்தவர்களின் புனித ஸ்தலமாகிய வேளாங்கன்னி, சிக்கல் சிங்கார வேலன் சந்நிதி, திருவிடை மருதூர் அபிராமி அம்மன் கோயில், கண்ணகி பிறந்த பூம்புகார் போன்ற இடங்களுக்குச் சென்றும் வரும் வகையில் அருகருகே அவ்வூர்கள் இருக்கின்றன.

அரை நூற்றாண்டுக்கு முன் திருநள்ளாறு ஆலயம் வௌவால்களின் இருப்பிடமாக இருண்டு கிடந்தது. பகலில் ஆலயத்திற்குள் சென்று வரவே பயமாக இருக்கும். போதிய வருமானம் இன்மையால் பராமரிப்பும் சரிவர இல்லாதிருந்தது.

இன்றோ, இந்திய ஜனாதிபதிகள், பல்வேறு மாநில முதலமைச்சர்கள், நீதிபதிகள், பெருந்தொழிலதிபர்கள், தனவந்தர்கள், திரைப்பட நட்சத்திரங்கள் போன்றோர் சுவாமி தரிசனத்திற்காக வருகை தருகிறார்கள்.

ஆலய நிர்வாகம் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததன் பின் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 33 ஆண்டுகளாக ஓடாதிருந்த திருத்தேர் 1989 முதல் மீண்டும் ஓடத் தொடங்கியுள்ளது. சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன. மின் இணைப்பு, தரைக்கு அடியில் மாற்றப்பட்டு ஊர் முழுவதும் ஸோடியம் வேப்பர் விளக்குகள் பொருத்தப்பட்டு, ஊர் ஒளிவெள்ளத்தில் மிதக்கிறது. வீதிகளில் மணல் என்பதையே பார்க்க முடியாத அளவுக்கு இருபுறங்களிலும் சிமெண்ட் தளம் போடும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நளமகாராஜா சனியினால் பீடிக்கப்பட்டு மனைவி, மக்களையும் நாட்டையும் இழந்திருந்தபோது திருநள்ளாற்றுக்கு வந்து தீர்த்தக்குளத்தில் எண்ணெய் ஸ்நானம் செய்து கலி நீங்கப் பெற்றார் என்பது ஐதீகம். அந்தத் தீர்த்தத்திற்கு நளன்குளம் என்ற பெயர் ஏற்பட்டு, இன்றும் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் அந்தக் குளத்தில், எண்ணெய் ஸ்நானம் செய்வது வழக்கமாகியுள்ளது. இதனால் குளத்து நீரும் கரைகளும் அசுத்தமாகிவிடும். இப்போது நளன் குளத்தைச் சுற்றிலும் அகலமான சிமெண்ட் தளம் போடப்பட்டுள்ளது. எல்லாப் பருவகாலங்களிலும் யாத்ரீகர்கள் குளிக்க நீர்த்தட்டுப்பாடு இல்லாதிருக்கவும், அசுத்தமாகும் நீரை வெளியேற்றிப் புதிய நீர் பாய்ச்சவும் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

பெருகிவரும் யாத்ரீகர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நன்கொடையாளர்களும் இவ்வூருக்குப் பல வசதிகளைச் செய்து தருகிறார்கள்.

அண்மையில் திருநள்ளாற்றிலுள்ள கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. ஆலயத்தின் பல்வேறு சந்நிதிகளையும் அழகுபடுத்துவதற்காகச் சுமார் 50 லட்சரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய ஜனாதிபதி மேதகு கியானி ஜெயில் சிங் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட எழுநிலை ராஜகோபுரத்திருப்பணி சுமார் 40 லட்சரூபாய் செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ராஜகோபுரத்திருப்பணிக்காக ரூ.100க்கு மேல் நன்கொடை அளிப்பவர்களின் பெயர்கள் ஆலய வளாகத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

இன்னும் ஐம்பது ஆண்டுகளில் திருநள்ளாறு எப்படி இருக்கும், எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றிய பெருமளவிலான திட்டம் ஒன்றினை ஆலய நிர்வாகம் மேற்கொள்ள இருப்பதாகத் தெரிய வருகிறது. அந்தத் திட்டங்கள் நிறைவேறியதும் திருநள்ளாறு கண்கொள்ளாக் காட்சி நல்கும் நகராய்த் திகழும் என்பதில் ஐயமில்லை.

சங்கப் பலகை

பாரதிதாசன் கவிதைகள்

(ஆசிரியர் - பாவேந்தர் பாரதிதாசன். வெளியீடு - பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017. பக்கங்கள் - 624. விலை - ரூ. 20.00)

அன்னைத் தமிழுக்கு ஈடிணையற்ற அணிகலன்கள் எனச் சொல்லத்தக்க வகையில் பாவேந்தர் பாரதிதாசனார் இயற்றிய அழகு மணிக்கவிதைகள் அனைத்தையும் திரட்டி அழகிய ஆப்செட் அச்சில், குறைந்த விலையில் கையடக்கப் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. பயன்மிகு பணி, இறுதியில், இது வரை எந்தப் பதிப்பிலும் இடம் பெறாத கவிதைகள் என்ற தலைப்பில் சுப்பிரமணியர் துதியமுது, சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்னம் போன்ற ஆன்மிகப் பாடல்கள் இணைக்கப்பட்டிருப்பது இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

ஜே. கிருஷ்ணமூர்த்தியின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

(ஆசிரியர் - முனைவர் சோ. சேசாசலம். வெளியீடு - பாரதி நிலையம், 108, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017.)

மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்களின் பெருமதிப்பிற்குரியவரும், அன்னி பெசன்ட் அம்மையாரால் 'கிழக்கின் நட்சத்திரம்' என்று புகழப்பட்டவருமான, நாடறிந்த தத்துவ மேதை ஜே. கிருஷ்ணமூர்த்தி ஆவார்.

துயரங்களிலிருந்து விடுபட உலக மக்களுக்கு அவர் அவ்வப்பொழுது தெரிவித்த அருமையான தத்துவ முத்துகளை . இந்நூலில் அழகுறத் தொகுத்துத் தந்துள்ளார் நூலாசிரியர்.

—கு. சண்முகசுந்தரம்

டாக்டர் தயாவின் நாடகங்கள்

(ஆசிரியர் - தி. தயானந்தன் பிரான்சிஸ். வெளியீடு - கிறித்துவ இலக்கியச் சங்கம், 501. பார்க் டவுன், சென்னை - 3. பக்கங்கள் - 208 விலை - ரூ. 45/-)

ஆசிரியரின் கிறித்துவப் பணி பாராட்டத்தக்கது. எம்மதத்தினரும் மதபேதமின்றி ரசித்துப் படிக்கக்கூடிய நாடகங்கள். திரு. தயாவின் நாடகங்களில் வாழ்விற்கு ஒளியூட்டும் பல அரிய நற்செய்திகளைக் கூறியுள்ளார். இவரின் நாடகங்கள் என்றும் நினைவில் நிற்கக் கூடியவை.

இங்கும் சில மணிப்புறாக்கள்

(ஆசிரியர் - டாக்டர் எஸ். குலசேகரன். வெளியீடு - அமிழ்தம் பதிப்பகம், 15. முத்துப்பிள்ளை தெரு, வ.உ.சி. நகர், வேலூர் - 1. விலை - ரூ. 24/-)

வானொலி நாடகங்கள் பலவற்றைப் படைத்து அனுபவமிக்க இந்நூலாசிரியர் நாடகப் பாத்திரங்களை எங்ஙனம் உருவாக்க வேண்டும், அதனை எவ்விதம் செயல்முறைப்படுத்த வேண்டும் என்பதனை விவரித்ததுடன், நாடக வாழ்க்கையைப் பற்றி வெளி உலகம் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவும் வகையிலும் படைத்துள்ளார். இவரின் எழுத்தாற்றல் நாட்டு நடப்புக்கு ஏற்றதாக அமைந்து மனதிற்கு நிறைவைத் தருகின்றது.

மோகத்தைக் கொன்றுவிடு

(ஆசிரியர் - ஸ்ரீப்ரியா. வெளியீடு - தேவகி பதிப்பகம், புதுக்கோட்டை-622003 விலை - ரூ. 25/-)

ஆசிரியரின் இப் படைப்பு மனித உணர்ச்சிகளையும், பெண்ணின் பெருமையையும் நிலைநாட்டுவதாக உள்ளது. பல பிரபல இதழ்களில் வெளியான சிறந்த சிறுகதைகளைத் தொகுத்து இந்நூல் உருவாகியுள்ளது.

—எம். சகுந்தலாதேவி

காலம் கனியும்

(ஆசிரியர் - நீலவன். வெளியீடு - அருள் புத்தக நிலையம், 12, வாணியர் தெரு, குறிஞ்சிப் பாடி - 607 302. பக்கங்கள் - 192. விலை - ரூ. 30.00).

கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்களின் அணிந்துரையுடன் வெளிவந்துள்ள புதினம்.

அக்காள் பொன்மேனி, தங்கை பூரணி, பூரணியின் கணவன் ஆதி நாராயணன், தபால்கார ஆனந்தன், அவன் மனைவி சுமதி ஆகிய முக்கியப் பாத்திரங்களை மையமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ள குடும்பக் கதை. ஒவ்வொரு பாத்திரமும் மிகுந்த கவனத்துடன் ஏதாவது ஓர் உயர் பண்பைப் பெற்றிருக்கும் வகையில் படைக்கப்பட்டுள்ளது.

தொடக்கம் முதல் இயல்பான விறுவிறுப்புடன் முன்னேறும் கதை, கடைசி சில அத்தியாயங்களில் முடிவை நோக்கி வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லப் படுவது போல் தோன்றினாலும், அப்போது அமைக்கப்பட்டுள்ள திருப்பங்கள் அதை ஈடுசெய்கின்றன. ஆங்கில உரையாடல்களைச் சற்றுக் குறைத்திருக்கலாம்.

- "ஜய்ராம்ஜி"

அழகோவியம்

(ஆசிரியர் - முனைவர் கடவூர் மணிமாறன். விடியல் வெளியீட்டகம், 109, மேலைத்தெரு, கிருஷ்ணராயபுரம், 639102, திருச்சி மாவட்டம். பக்கங்கள் - 96. விலை - ரூ. 15/-)

பன்னூலாசிரியர் என்று பலராலும் பாராட்டப்பட்டு வரும் இவருடைய இந்நூல் காலத்தால், கருத்தால் வளர்ந்து பரநது செல்கிறது. இவரது பாநடை தொய்வில்லாத நடை. கவிதை வரிகள் ஒவ்வொன்றும் வாளாக, வேலாக, 'இழிவைச் சாய்க்கும் எரிமலை'யாகப் பொங்கிக் கொப்பளித்துப் பூரித்து வந்துள்ளன.

சிந்தனைத் தெளிவு பெற வைக்கும் சிறந்த கவிதைகளின் தொகுப்பு.

—தேனி. தேன்மொழி

சங்கப் பலகை

சாதனைக்கோர் பாலம்

(ஆசிரியர் - டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி. வெளியீடு - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17. பக்கங்கள் - 94+6. விலை - ரூ. 18.00).

மனிதன் உற்சாகம், நம்பிக்கை, வலிமை, ஆரோக்கியம், துடிப்பு, அன்பு, நல்லெண்ணம், உண்மை போன்ற உயர் குணங்களைக் கைக் கொள்ள வேண்டும். வாழ்க்கையின் யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு, அதற்கு ஏற்ப எவன் முன்னேறுகிறானோ, அவனால்தான் அரும்பெரும் சாதனைகளைப் படைக்க முடியும். எதிலும் ஓர் ஒழுங்கு, லட்சியம், மன உறுதி, கட்டுப்பாடு, திடமான முடிவெடுக்கும் திறன் ஆகியவைதான் வாழ்வின் அடிப்படை அம்சங்கள். அதன் மீது அமையும் வாழ்வுதான் மனநிறைவான வாழ்வாக அமைய முடியும். இந்தக் கருத்துகளை வலியுறுத்தி, நீண்ட முன்னுரை, ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய 12 கட்டுரைகள், பிற்சேர்க்கையாக ஆசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கி வெளிவந்துள்ள இந்நூல் தன்னம்பிக்கையை வளர்க்கும் பயனுள்ள நூல்.

321 'அரசு' பதில்கள்

(ஆசிரியர் - 'அரசு'. வெளியீடு - தமிழ்ப் புத்தகாலயம், 11, சிவப் பிரகாசம் தெரு, பாண்டிபஜார், தியாகராய நகர், சென்னை - 17. பக்கங்கள் - 104 + 8. விலை - ரூ. 18.00).

1975-76 ஆண்டுகளில் வெளியான 'அரசு' பதில்களில் 321ஐக் கவனமாகத் தேர்ந்தெடுத்து, அந்தக் கேள்விகளைக் கேட்டவர்களின் முகவரிகளுடன் தொகுக்கப்பட்டுள்ள சுவையான நூல்!

சமகால அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம், காதல், மருத்துவம், திரைப்படம், புத்தகங்கள், எழுத்தாளர்கள், தலைவர்கள் - இப்படி இன்னும் பல்வேறு விஷயம் பற்றிய கேள்விகள். பெரும்பாலானவை காலம் கடந்து நின்று எப்போது படித்தாலும் அறிவும் சுவையும் ஊட்டக்கூடியவை. நூல் முழுவதும் ஏராளமான அழகிய படங்கள். தெளிவான அச்சு - இப்படி இன்னும் பல சிறப்புகளைக் கொண்ட பயனுள்ள நூல்.

எனினும், இங்குமங்குமாய் சில எழுத்துப்பிழைகள் நேர்ந்துள்ளதைத் தவிர்த்திருக்கலாம்.

நல்ல பயனுள்ள பொது அறிவுக் கருத்துகளின் தொகுப்பு!

– "ஜய்ராம்ஜி"

அம்மன் அறுசுவை சமையல்

(ஆசிரியர் - ஸ்ரீமதி காமாக்ஷி. வெளியீடு - அருள்மிகு அம்மன் பதிப்பகம், 8. கங்கையம்மன் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14. விலை - ரூ. 17.00)

பல வகைப்பட்ட உணவு வகைகள் கூறப்பட்டுள்ளன. அனைத்தும் எளிய முறையில் செய்யக் கூடியவையே. சுமார் 161 வகைகள் உள்ளன. பலரும் விரும்பக்கூடிய மிக அருமையான சமையல் வழிகாட்டி.

சூப், சாலட், சாஸ் சிற்றுண்டி வகைகள் செய்முறை

(ஆசிரியர் - ஸுலக்ஷ்ணா ராஜகோபால். வெளியீடு - திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணா சாலை, தி. நகர், சென்னை - 17. விலை - ரூ. 15.00)

பல வகையான சூப், சாலட், சாஸ் போன்ற சிற்றுண்டி வகைகளை மிகவும் எளிமையான முறையில் கூறப்பட்டுள்ளது. இதனைச் செய்யும் முறையோ எளிதானது. உண்ணும் வகைகளோ சத்தானது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

(ஆசிரியர் - ப்ரியா கல்யாணராமன். வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம், த.பெ. எண் 1447, 4. தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17. விலை - ரூ. 32.00)

இந் நாவலில் ஆட்டோ தொழிற் சங்கத்தின் உணர்ச்சிகளின் ஊடே தோன்றிய காதல், ஒரு நயவஞ்சகனின் சூழ்ச்சியால் நசுக்கப்படுகிறது. வஞ்சகனுக்குத் தண்டனையும் கிடைக்கிறது. காதல், வஞ்சகம் ஆகியவற்றின் உணர்ச்சிகள் அழகாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

—சகுந்தலாதேவி

டென்ஷனைப் போக்க வழிகள்

(ஆசிரியர் - ஆர்.எம். சோமசுந்தர். பிரசுரம் - குமரன் பதிப்பகம், 2, முத்துகிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை - 17. விலை - ரூ. 20.00).

டென்ஷனைக் குறைக்க மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆர்.எம். சோமசுந்தர் 'ஹிப்னோ தெரபி' என்னும் மருந்தில்லாத மனநல மருத்துவத்தினால் முடியும் என்று இந்நூலில் ஆராய்ச்சி பூர்வமாகவும், விளக்கங்கள் மூலமாகவும் தெளிவுபடுத்துகிறார்.

மனதில் சஞ்சலமும் உடலில் இறுக்கமுமின்றி இருக்கும் நிலையைப் பெற்றுவிட்டால் நம் அன்றாட வாழ்க்கை இடரின்றி, துயரின்றி இனிதாய் மலர்ந்திடுமாம். இதற்குத் தளர்வு நிலைப் பயிற்சி பெரிதும் உதவுகிறது என்று சொல்கிறார் இந்நூலாசிரியர்.

மகாபாரதத்தில் திருதராஷ்டிரன் பீமன் மீதுள்ள கோபத்தை ஓர் இரும்புப் பதுமையை நசுக்கிப் பொடிப் பொடியாக்கித் தீர்த்துக் கொண்டானாம். பீமனுக்குப் பதிலாக இயந்திரப் பதுமையைத் திருதராஷ்டிரனுக்கு நகர்த்தியவர் கிருஷ்ணர்.

இப்படி அழகிய உதாரணங்களோடு நூல் முழுதும் டென்ஷனைக் குறைக்கும் முறைகளைக் காணலாம். இண்டர்வியூ சமயத்தில் ஏற்படும் பயத்தைப் போக்க வழியும் இந்நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. உடலியல் ரீதியில் அனைவருக்கும் பயன்படக்கூடிய நூல் இது.

– குண்டுமணி

இளைய அமுதம்

தயாரிப்பு : குண்டு மணி



ஆசிரியர் : பாபு! உன் வீட்டு வேலை நோட்புக்கில் இரண்டு கட்டுரைகள் இருந்தன. ஒன்று படிக்க முடிந்தது; இன்னொன்று படிக்கவே முடியலையே!

பாபு : கோபிச்சுக்காதீங்க சார் ஒரு கட்டுரை அம்மா எழுதி னாங்க; இன்னொன்று என் அப்பா எழுதினது சார்!

பொது அறிவின் பயன்

நீண்ட காலத்துக்கு முன்பு நான்கு நண்பர்கள் கிராமத்தில் வசித்தார்கள். அவர்கள் ஒருவருக் கொருவர் பேரன்பு செலுத்தி வந்தார்கள்.

நால்வரில் மூவர் படித்த மேதைகள். ஆனால் அவர்க ளுக்குச் சாதாரண பொதுஅறிவு இல்லை. நாலாவது நபர் படிக் காதவர். ஆனால் அவருக்குப் பொது அறிவு மிகுதி.

படித்த மேதைகளான மூவ ருக்குத் தங்கள் அறிவைப் பற்றி அளவற்ற பெருமை. தன் நாலா வது நண்பன் படுமுட்டாள் என்று கருதினர்.

நான்கு நண்பர்களும் தங்கள் மேதாவித்தனத்தைச் செலுத்திப் பணம் சம்பாதிக்கலாம் என்று முடிவு செய்தனர். அரசர்கள் தங்கள் புத்திசாலித்தனத்தைப் பாராட்டி வெகுமதி தருவார்கள் என்று கூறினர். மூவரும் அந்த முட்டாள் ஒரு சுமை என்று எண்ணினர். ஆனால் அவனைத் தனித்து விடவும் விருப்பமில்லை அவர்களுக்கு.

நால்வரும் ஒரு காட்டின் வழியாகச் சென்றனர். பசியினால் வாடியதால் அடர்ந்த ஒரு மரத்தி னடியில் ஓய்வு எடுத்தனர்.

மரத்துக்குச் சிறிது தூரத்தில் ஒரு மிருகத்தின் எலும்புத் துண்டுகள் கிடந்தன.

"நமக்கு அதீத ஞானம் அதிகம். ஆகவே இறந்த மிருகத்துக்கு உயிரூட்டுவோம்" என்று பெருமை யாய்ப் பேசிக் கொண்டனர். எலும்புகளுக்கு உடல் தந்தார் ஒரு மேதை; இரண்டாவது மேதை அந்த உடலுக்குச் சதையும் ரத்தமும் தம் மந்திரசக்தியால் பெற்றுக் கொடுத்தார். மூன்றா வது மேதை அந்தச் செத்த உட லுக்கு உயிரைத் தர முன்வந்தார்.




இவர்களால் முட்டாள் என்று வர்ணிக்கப்பட்ட அந்த நான்காவது ஆசாமி, "ஐயையோ! அந்த மிருகத் துக்கு உயிர் ஊட்டாதீர்கள். அது சிங்கம் ஆயிற்றே!" என்று கத்தி னான்.

மூவரும் அந்த எளிய ஆசாமி யின் குரலுக்குச் செவி சாய்த்தால் தானே? அந்த உயிரற்ற மிருகத் துக்கு உயிர் பிறந்தது!

நான்காவது ஆசாமி, "கொஞ்சம் பொறு. நான் மரத்தில் ஏறிக் கொள்கிறேன். அப்புறம் அந்த உயிரற்ற உடலுக்கு உயிர் கொடு!" என்று ஓடிப் போய் மரத்தில் ஏறிக் கொண்டான்.

மூன்று நண்பர்களும் எள்ளி நகையாடினார்கள். ஆனால் உயி ரூட்டப்பட்ட சிங்கம் அவர்களைப் பதம் பார்த்து விட்டது; மூவ ரையும் கொன்று தின்றுவிட்டது.


சிங்கம் மூன்று உயிர்களைச் சாப்பிட்ட திருப்தியில் உறங்கச் சென்றது. நான்காவது ஆசாமி மரத்தை விட்டு இறங்கித் தன் ஊர் திரும்பினான். அப்பொழுது அவனுக்கு உதயமாயிற்று : "பொது அறிவு இல்லாத ஞானம் எந்த மதிப்பும் இல்லாதது!"



தக்காளி

சென்ற நூற்றாண்டில் இந்தப் பழம் உண்ணுவதற்கு ஏற்றது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. உலகிலேயே மிகவும் பிரசித்த மானதாக விளங்குகிறது. பச்சை யாகவே சாப்பிடலாம்; ரசத்தில் நறுக்கிப்போட்டு உண்ணலாம்; சூப், சாஸ் என்று தக்காளியின் அருமை பெருகிவிட்டது. இது உருளைக்கிழங்கின் சகோதரன். இதன் விஞ்ஞானப் பெயர் 'லைக்கோ பெர்சிசன் எஸ்கு லண்டம்'. தக்காளிச் செடியில் மஞ்சள் பூக்கள்; மயிர் கொண்ட இலைகள்; பழம் 1.5லிருந்து 7.5 சென்டிமீட்டர் சுற்றளவு கொண் டது. 3.51 கிலோ எடையுள்ள ராட்சதத் தக்காளியை அமெரிக் காவில் 1986ஆம் ஆண்டு ஜி.கிரஹாம் உருவாக்கித் தந்தார். இந்தியாவுக்குத் தக்காளி 19ஆம் நூற்றாண்டில் வந்தது.

புத்திசாலி முயல்!



ஒரு தடவை காட்டில் நீர்ப்பஞ்சம் மிகுந்து சொட்டுத் தண்ணீர்கூட இல்லை! யானைகள் நீர்நிலைகளைத் தேடிப் படையெடுத்தன.

வழியில் ஓர் அழகிய குட்டை; யானைகள் மகிழ்ச்சியோடு அங்கே சென்றன. போகும் வழியிலிருந்த முயல்களை யானைகள் மிதித்து அழித்துக் கொண்டு சென்றன. யானைகள் குட்டையை விட்டு அகன்றதும் மிஞ்சியிருந்த முயல்கள் கூடிப் பேசின.

"இந்த யானைகள் மறுபடியும் குட்டைக்கு வந்தால் நம்மை மறுபடியும் துன்புறுத்தும். ஆகவே அந்த யானைகள் வராமலிருக்க ஏதாவது தந்திரம் செய்ய வேண்டும்!" என்று முயல்கள் முடிவு செய்தன.

ஒரு புத்திசாலி முயலிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அப்பொழுது இரவு வேளை. பௌர்ணமி நிலவு காட்டைப் பளிச்சிடச் செய்தது. அந்தப் புத்திசாலி முயல் ஒரு தந்திரத்தைக் கண்டுபிடித்து அதனைச் செயல்படுத்த முயன்றது. யானைகள் கூட்டத் தலைவனிடம் அந்த முயல் சென்று அதன் காலில் விழுந்தது!

"நீ யார்? நீ இங்கே எதற்கு வந்திருக்கிறாய்?" என்று யானைகளின் தலைவன் கேட்டான்.

"நான் நிலவில் வசிக்கும் முயல். அந்தக் குட்டையில்தான் நிலவுத் தெய்வம் வசிக்கிறது. நீங்கள் அங்கே போய்க் குட்டையைக் குழப்பியிருக்கிறீர்கள். நிலவுத் தெய்வம் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறது. இனி நீங்கள் அந்தக் குட்டைக்கு வந்து தொந்தரவு செய்யக் கூடாதென்று!" என்று கற்பனையான ஒரு செய்தியைக் கூறியது புத்திசாலி முயல்.


அந்த யானைத் தலைவனுக்கு முயலின் வார்த்தையில் நம்பிக்கை இல்லை. "நான் அந்த நிலவுத் தெய்வத்தைச் சந்திக்க நினைக்கிறேன். என்னை அழைத்துப்போ!" என்றது!

யானை குட்டையை அடைந்த போது பௌர்ணமி நிலவின் பிரதிபலிப்பு அந்த அசையாத நீரில் பிரதிபலித்தது. ஆகவே நிலவுத் தெய்வம் குட்டையில் ஓய்வு எடுப்பதாகவே அந்த யானை முடிவு செய்து விட்டது. குட்டையிலுள்ள நிலவுத் தெய்வத்துக்கு வணக்கம் செலுத்திவிட்டு அந்த யானைத் தலைவன் விடைபெற்றுச் சென்றது. அதன் பிறகு அந்தக் குட்டைக்கு யானைக் கூட்டம் வரவில்லை. புத்திசாலி முயலின் தந்திரத்தினால் பல முயல்கள் அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டன.



எழுத்தாணிக் குருவி!

அறிவிவேகியான சாலமன் அரசர் பறக்கும் சிம்மாசனத்தில் அமர்ந்து வானவீதியில் போய்க் கொண்டிருந்தார். வெயில் கடுமையாக இருந்ததால் அவர் வாட்டமுற்றார். அப்போது கழுகு ராஜா அவ்வழியே போய்க் கொண்டிருந்தான். தம்மீது நிழல் விழும் விதத்தில் பறக்கும்படி அவனை சாலமன் கேட்டுக் கொண்டார். கழுகு ராஜா அவ்வாறு பறக்க மறுத்து விட்டான்!



உடனே சாலமன் ஒரு சாபம் கொடுத்தார். கழுகுகள் கொடும் வெப்பத்தில் வாடும் விதத்தில் அவற்றின் கழுத்தில் சிறகுகளே முளைக்கக் கூடாது என்று சபித்து விட்டார்! சிறிது நேரத்துக்குப் பின் எழுத்தாணிக் குருவிகளின் ராஜா எதிர்ப்பட்டான். கழுகினிடம் கூறியது போலவே அவனையும் தமக்கு உயரே பறக்கும்படி சாலமன் கேட்டுக் கொண்டார். அவன் சாலமனுக்குக் குடைபிடிப்பது போலப் பறந்தான். அவனுக்கு வரம் தர சாலமன் முன்வந்த போது எழுத்தாணிக் குருவி ராஜா தங்கள் இனத்துக்குத் தங்கக் கொண்டை வேண்டும் என்று கோரினான். வேறு வரம் கோரும்படி சாலமன் அறிவுரை கூறியதும் அந்த வரத்தையே தரும்படி மீண்டும் கேட்டான் எழுத்தாணிக் குருவி ராஜா.

தங்கக் கொண்டை படைத்ததால் எழுத்தாணிக் குருவிகளின் உயிர்களுக்கு ஆபத்து வந்தது. மறுபடியும் எழுத்தாணிக் குருவி ராஜா இறகுக் கொண்டையே தரும்படி கெஞ்சினான். இதன் பிறகு எழுத்தாணிக் குருவி இனம் உயிர் தப்பியது. எழுத்தாணிக் குருவியை 'ஷா சலேமான்' என்று வழங்குகிறார்கள்!

தனிமரத் தோப்பு

ராஜேந்திரகுமார்

7

"என்ன? அதிர்ச்சியாயிருக்கா?" அனாமிகா சொன்னாள், "ஆனா, அதுதான் உண்மை!"

"புரியலையே?" இனியா கேட்டாள் : "நீங்க என்ன சொல்றீங்க?"

கண்ணீருடன் நிமிர்த்து பார்த்தாள் அனாமிகா. "ஆமாம் பெண்ணே! ஒரு காலத்தில். சஞ்சீவியும் நானும் உயிருக்குயிராக் காதலிச்சோம். ஆனா அவர்தான் கேவலம் பணத்துக்காக ஆசைப்பட்டு என்னை ஒரு சட்டை மாதிரி கழட்டி எறிஞ்சுட்டார்".

"பொய். நான் நம்ப மாட்டேன். எங்கப்பா யாருக்கும் துரோகம் பண்ண மாட்டார்" அழுத்திச் சொன்னாள் இனியா. "துரோகம் - அவருக்குத் தெரியாத சங்கதி. அது எனக்குத் தெரியும்".

"வருவார் இல்லையா? கேட்டுப் பாரு" எழுந்தவளின் கையைப் பற்றி நிறுத்தினாள். "ஏய், என்ன எழுந்துட்டே? நமக்குள்ளே சண்டையா என்ன? உட்காரும்மா. காப்பி சொல்லிட்டு வந்தேன். வரும். உன்னோட காப்பி சாப்பிடணும் போல ஆசையாயிருக்கு" இழுத்து எதிரே அமர்த்திக் கொண்டாள்.

அவளைக் கண்களால் ஆராய்ந்தாள், இனியா. கழுத்தில், கைகளில் நிறைய நகைகள் இருந்தன. உடம்பில் வழுக்கி ஓடும் நைலக்ஸ் சிவப்புப் புடைவை, வலக் கையில் வாட்ச். இடக் கையில் அரை டஜன் வளையல்.

"இவ்வளவு ஒப்பனை செய்து கொண்ட உங்களுக்கு ஒரு சின்னப் பொட்டும், பூவும் வைச்சுக்க மட்டும் நேரமில்லாமல் போய்விட்டதாக்கும்? சொல்லுங்க" அதுவரை தொடுத்த மல்லிகையை அவள் கூந்தலில் சூட முயன்றபோது திரும்பிக் கொண்டாள், அனாமிகா.

இனியாவின் கையிலிருந்த பூச்சரத்தை வாங்கி, அவள் தலையிலேயே சூட்டி விட்டாள், "உனக்காகக் கட்டினது. நீயே வச்சுக்க".

"இன்னும் நிறைய இருக்கே, கட்டிக்க மாட்டேனோ? உங்க சிவப்பு முகத்துக்கும் லட்சுமிகரத்துக்கும் பூ வைச்சா இன்னும் அழகாயிருக்குமே".

"அழகாயிருக்கும். ஆனா அதிர்ஷ்டமில்லேம்மா. பாரும்மா, எப்பவோ ஒருநாள் ஆசைக்காக கலர் புடைவை கட்டிக்கலாம், நகை, நட்டை மாட்டிக்கலாம். ஆனா இரண்டு மட்டும் என்னாலே பயன்படுத்த முடியாது. ஒண்ணு பூ, இன்னொன்று தாலி".

"நீங்க என்ன சொல்றீங்க? புரியலை".

"நான் விதவைம்மா. நீண்ட நாளைக்கப்புறமா சந்திக்கிற நண்பரைப் பார்க்கிறப்ப விதவைக் கோலம் வேணாம்னு கொஞ்சமா காம்ப்ரமைஸ் பண்ணிகிட்டேன். ஆனா பூவும் பொட்டும்... தப்பும்மா. என்னைப் பொறுத்த வரை ரொம்பவும் தப்பு".

"ஸாரி. எப்ப... எப்படி?"

"பத்து வருஷமாச்சு. அது ஒரு தனிக் கதை. சோகக் கதை".

"ஸாரி. உங்க சோகத்தைக் கிளறி விட்டுட்டேனா? அப்ப இவ்வளவு பெரிய இடத்திலே நீங்க தனியாகவா இருக்கீங்க?"

"பழகிப் போச்சு. தனி மரமாகவே வாழ்ந்துட்டேன். கல்யாணத்துக்கு முன்னேயும் சரி; கல்யாணத்துக்கு அப்புறமும் சரி... தனி மரமாகவே வாழ்ந்து பழகிட்டேன். நான் கொஞ்ச நாள் சிரிச்சது என் காதல் சமயத்தில் மட்டும்தான், என்ன பார்க்கிறே? உன் அப்பாவைக் காதலிச்ச கொஞ்ச நாள்தான். வசந்த காலப் பறவைகளாகப் பறந்த அந்த நாள்களில் மட்டும்தான், அவர் எனக்கு துரோகம் பண்ணிட்டுப் போன அப்புறம், இந்த நாள் வரைக்கும் நான் கசந்தகாலப் பறவை -

அதுவும் ஒற்றைப் பறவையாகத்தான் இருக்கேன்".

"அப்படிச் சொல்லாதீங்க. நானும் அப்பாவும் உங்களுக்கிருக்கோம். எப்ப என்ன உதவி வேணுமானாலும் மெட்ராஸுக்குப் ஃபோன் பண்ணுங்க. நான் வரேன். அப்பா வந்ததும் அனுப்பறேன்". கேட்டாள் : உங்க பிள்ளைங்க?"

"பிள்ளைங்கதானே? இருக்காங்க, பெத்த தோட என் கடன் விட்டதுன்னு அவங்களை ஊட்டியிலேயும், கொடைக்கானல்லேயும் அனுப்பி படிக்க வைச்சார். அப்புறம் மேல் நாட்டுக்குப் போய், படிச்சாங்க. பையன் அங்கேயே ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிகிட்டு அமெரிக்காவிலேயே செட்டில் ஆயிட்டான். மகள் மெட்ராஸ்லே இருக்கிறதாக் கேள்வி".

புரியாமல் பார்த்தாள். "பின்னே ஏன் இங்கேயே தனிமையிலே கிடந்து உழன்று கிட்டிருக்கீங்க?"

"என்ன பண்ணச் சொல்றே?"

"மெட்ராஸ் வரலாம். மகளோட கொஞ்ச நாள் தங்கலாம். இல்லே அமெரிக்காவுக்குப் போகலாம். மகன் குடும்பத்தோட தங்கிட்டு வரலாம். ஒரு மாறுதலாயிருக்கும் இல்லையா?"

"மகள்கிட்டேயா? முதல்ல அவளுக்கு என்னை அடையாளம் தெரியவே அரை மணியாகும். அப்புறம் பார்க்கும் பார்வையாலேயே 'ஏன் வந்தேன்னு' கேட்பாள். எதுக்கு அதெல்லாம்? அமெரிக்கப் பயணம் என்பதெல்லாம் நடக்கிற சங்கதியில்லே. நான் பாசத்துக்கு அலையற பரதேசிம்மா".

"ஏன் அப்படிச் சொல்றீங்க? அதான் சொன்னேனில்லையா? நாங்க இருக்கோம்னு".

காப்பி வந்தது.

காப்பியைக் கலந்தவாறு அனாமிகா கேட்டாள் : "உங்க அம்மா வரலையா?"

"வரமாட்டாங்க".

மேல் நோக்கிக் கை காட்டினாள், "போயிட்டாங்க".

"ஸாரி டியர்! ஞாபகப்படுத்திட்டேனா?"

"பரவாயில்லே. அம்மா இல்லாத குறையே எனக்குத் தெரிஞ்சதில்லே. அப்பாவாகவும் அம்மாவாகவும் இந்த அப்பா இருக்கிறாரே. அது போதும். அப்புறமென்ன?"

காப்பி சாப்பிட்டு முடியும் வரை மௌனம் காத்தார்கள்.

இனியா கேட்டாள்: "நான் கேட்டதற்கு நீங்க இன்னமும் பதில் சொல்லலே".

"எதைப் பற்றி?"

"அதான் சொன்னேனே, எப்ப வேணுமானாலும் எங்களை நீங்க தயங்காம கூப்பிடலாம்னு!"

"உன் பேச்சு எனக்கு ஆறுதலாயிருக்கு. ஆனா அது நடைமுறைக்கு சாத்தியப்படாது".

"ஏன்?"

"அவருக்கு நீ ஒரே மகள். அவர்கிட்டேயிருந்து உன்னைப் பிரிச்சா அது பாவம். தவிர, அவரைக் கூப்பிடறதும் கொண்டாடறதும் தவறுதான். என்னதான் ஆனாலும் எங்க பழைய காதல் கதை இந்த ஊரறிந்த ரகசியம். அப்புறம் நாளைக்கு நாலு பேர் நாலு விதமா பேசினா அதைத் தாங்க என்னாலும் முடியாது. அவராலும் முடியாது".

"நீங்கதானே சொன்னீங்க? காலம் அனுமதிச்சிருந்தா இன்னைக்கு நான் உங்க மகளா இருந்திருப்பேன்னு. அம்மான்னு நான் கூப்பிடலாமில்லையா?"

"கூப்பிடும்மா".

"அம்மா! வாழ்க்கையில இயற்கை ஏமாற்ற நினைக்கறச்ச இரவல் செயற்கை உறவுகளை ஏற்படுத்திகிட்டா அதிலே தவறேயில்லே. நான் உங்களை அம்மான்னு நினைச்சா உடனே நீங்க எங்கப்பாவுக்கு வைப்பாட்டின்னு கூட ஆயிடுமா? சரி, அப்படியே தவறா நினைச்சாலும் அப்படி நினைக்க வேண்டிய முதல் ஆள் நான்தான். நானே அதை லட்சியம் பண்ணாதப்ப, நீங்க ஏம்மா பயப்படணும்? நீங்க தைரியமாயிருங்க. இது போதும்".

"இனியா..." என்ற கூச்சலான அழைப்புக்குத் திரும்பிப் பார்த்தார்கள். இரண்டடி நீள வஞ்சிரம் மீனைத் தூக்கிக் கொண்டு மகிழ்ச்சியாக வந்து கொண்டிருந்தார், சஞ்சீவி.

"ஓ! என் இனிய இனியா! மை டியர். ஐ காட் இட்" என்றார் உற்சாகக் கூவலாக, "நழுவப் பார்த்தது. விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு வந்துட்டேன்". "அப்பா" பதிலுக்கு இனியா கூவினாள். "நீங்க எப்பவோ கை நழுவி விட்டதை நானும் பிடிச்சு வைச்சிருக்கேன்" என்றவள், அனாமிகாவை இழுத்து முன்னால் நிறுத்தியதும் –

அவரது நடை தடைப்பட்டு நின்று போயிற்று.

"போய் அந்த மீனை வாங்கி வா, இனியா! ஸ்பெஷலாகக் காரமாக வறுத்து அனுப்பச் சொல்றேன் போ. வாங்கி வா".



"ஏனோ? அதை ஏன் நீங்களே செய்யக் கூடாது?"

"அவர்தான் என்னைப் பார்த்ததும் ஏனோ அங்கேயே நின்னுட்டாரே? என்னோட பேசப் பிடிக்கலைன்னு அர்த்தம். தெரியல்லையா?"

"அதெல்லாமில்லை. திடீர்னு பார்த்த அதிர்ச்சி. அவ்வளவுதான். போங்க அம்மா. நீங்களே போய் வாங்கிக்குங்க".

படியிறங்கி அவரை நோக்கி நடந்தாள் அனாமிகா.

கைகளை நீட்டினாள் : "கொடுங்க. காரமா வறுத்து அனுப்பச் சொல்றேன்".

தர முயன்றவர் தயங்கினார்.

உதட்டைச் சுழித்துச் சிரித்தாள் அனாமிகா. "இன்னுமா என் மீது உங்க குற்ற உணர்வு போகலை?"

"அதில்லே. என் கையைப் போல உன் துணியும் நாறும். வா. நானே கொண்டு வரேன்".

அவர்கள் இருவருமாக நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த இனியாவின் முகத்தில் மகிழ்ச்சியிருந்தது.

•

அமெரிக்காவின் சீதோஷ்ணம் கணிசமாகக் குறைந்திருந்தது. விடாது பெய்த மழையினால் குளிர் அதிகமாக இருந்தது.

இரவு நேரம்.

வீணா பார்த்துக் கொண்டிருந்தாள். கணவன் டாக்டர் மகேஷ் அரைமணியாக ஃபோனுடன் மல்லாடிக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்தாள்.

"என்ன டியர்? யாரைப் பிடிக்க இந்தப் பாடு படுகிறாய்?"

"இந்தியாவில் என் தங்கையை, எத்தனை தடவை முயன்று பார்த்தாலும் வீட்டு நம்பர் அடிக்கிறது. பட் நோ ரெஸ்பான்ஸ்".

"ஆபீஸில் இருக்கிற நேரமிது, இந்தியாவில். ஆபீஸை முயன்று பாரேன்".

டைரியை எடுத்து அவளின் ஆபீஸின் நம்பரைத் தேடும்போது –

ஏழு வயதுப் பையனும் நான்கு வயதுப் பெண்ணும் ஓடி வந்து நின்று வீணாவிடம் கன்னத்தைக் காட்டினார்கள்.

"குட் நைட் மம்மி".

"குட் நைட் மாம்".

கன்னங்களில் முத்தங்களை வாங்கி "குட்நைட்! மை டியர் கிட்" அப்பாவிடம் முத்தம் வாங்கி குட்நைட் சொல்லிட்டு தூங்கப் போங்க."

நம்பர் கிடைத்து ஃபோனில் முயன்று கொண்டிருந்த மகேஷ் கன்னத்தில் ஒற்றப்பட்ட முத்தங்களுக்கு பதில் முத்தம் தந்தான்.

"குட் நைட் மை ஸன். குட் நைட் மை ஸ்வீட்டி".

குதித்துக் கொண்டே ஓடி அவர்கள் மறைந்ததும் –

அவசரமாக ஃபோனை முயன்றான். லைன் கிடைத்தது.

இனிய குரல் ஒன்று, "இன்ஸ்டண்ட் இன்டீரியர் டெகரேட்டர்" என்றது.

"நான் அமெரிக்காவில் இருந்து வினிதாவின் அண்ணன் பேசுகிறேன். வினிதாவைக் கூப்பிட முடியுமா?"

"ஸார்! அவங்க இல்லையே, ஏதோ வில்லேஜுக்குப் போகிறதாகக் கிளம்பிப் போனார்கள். இந்நேரம் திண்டிவனம் தாண்டி இருப்பார்களே".

"ஓ, காட்! எப்ப திரும்புவதாகச் சொல்லிப் போயிருக்கிறாள்?"

"ஒரு வாரம் பத்து நாளைக்குள் அவர்கள் இங்கே இருந்தாக வேண்டிய ஒரு சூழ்நிலை. ஏதும் அவசரச் செய்தி உண்டா?"

"ஆமாம். மிஸ்... மிஸ்?"

"மிஸ் ப்ரியா ராமநாதன்!"

"மிஸ் ப்ரியா ராமநாதன்! அவள் எதற்காவது ஆபீஸில் தொடர்பு கொண்டால் இந்த அமெரிக்க அண்ணன் இருபதினாயிரம் டாலர் அனுப்புகிறதாகச் சொல்கிறீர்களா? ப்ளீஸ்!"

"அவசியம் சொல்றேன் ஸார்".

"மறக்கமாட்டீங்களே?"

"மறக்கிற விஷயமில்லை. அவர்களுக்கு இப்போதைய தேவையே பணம்தான்".

"தேவையானால் ஃபாக்ஸ் செய்தி அனுப்பி வைக்கிறேன்."

"நன்றி!" என்று ஃபோனை வைத்ததும் –

வீணா கேட்டாள்: "நேற்று அவள் கேட்ட போது அவள் ஃபோனை அவாய்ட் பண்ணினாய். பணம் கேட்காதே என்றாய். இப்போது மட்டும் என்ன திடீர் மனமாற்றம்? இருபதாயிரம் டாலர் அனுப்புகிறாய்?"

"அவள் ஒரு தினுசான பெண். பணத்துக்காக எதையும் செய்யும் பேய்".

"சிரிக்க வைக்காதே. எங்கேயோ இந்தியாவில் இருக்கும் அவளால் இங்கே அமெரிக்காவில் இருக்கும் உனக்கு என்ன ஆபத்து வரும் என்று எதிர்பார்க்கிறாய்?"

"எனக்கில்லை. என் அம்மாவுக்கு".

"உனக்கு அம்மாவென்றால் அவளுக்கும் அம்மாதானே?"

"ஆமாம். ஆனால் எனக்கு இருக்கும் கொஞ்சமான ஒட்டுதலும் அவளுக்குக் கிடையாது. தேவைப்பட்டால் கொலை செய்யக்கூடத் தயங்கமாட்டாள்".

→

"அதற்கேன் இவளைத் தேடுகிறாய். நேரே உன் அம்மாவுக்கே ஃபோன் பண்ணி சொல்லி விட வேண்டியதுதானே?"

"அதுதானே சிக்கல். அவர்கள் ஃபோன் கிடைப்பது கஷ்டம். இங்கிருந்து நேரடியாகப் பேச முடியாது. இந்தியாவிலேயே இரண்டோர் இடங்கள் தான் ட்ரங்க்கால் பேச முடியும்".

"அப்படியானால் உன் மதுரை சிநேகிதி களோட நேரில் நேரடி ஃபோன் கிடைக்குமே. அவரை விட்டு எச்சரிக்கச் சொல்லேன்".

"குட் ஐடியா" என்றவன், டயல் பித்தான் களை நிறையத் தரம் ஒற்றினாள் - மதுரை நமபருக்காக.

நம்பரில் ஆள் கிடைத்ததும் இவன் பேசும் பதற்றப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள் லீனா.

"தயவு செய்து உடனே சொல்லிடுங்க, ப்ளீஸ். சார்!" என்று அவன் ஃபோனை வைத்ததும் சொன்னாள் -

"டார்லிங் குழந்தைகளுக்கு விடுமுறை ஆரம்ப மாகிவிட்டது. எங்காவது அவுட்டிங் போய் வந்தால் என்ன?"

"ஓ, ஷ்யூர். லாஸ் ஏஞ்சலஸ் போகலாமா? இல்லை, ஸ்காண்டிநேவியா போகலாமா?"

"இந்தியாவுக்குப் போனால் என்ன?"

வியப்பாகத் திரும்பிப் பார்த்தான்.

"என் மாமியாரைப் பார்க்கும் ஆசை அபரி மிதமாக வருகிறது. அவரும் பேரக் குழந்தை களைப் பார்த்த மாதிரி இருக்கும்".

"அதுவும் நல்லதுதான்".

மீண்டும் டயலைத் தட்டினான். டிராவல் ஏஜென்ஸியைக் கூப்பிட்டான்.

"அடுத்த அவய்லபிள் பிளைட்டில் இந்தியா வுக்கு நான்கு சீட்டுகள் தேவை. எமர்ஜென்ஸி கோட்டாவில் முயன்று பாருங்கள்!"

பத்து நிமிடங்களுக்கெல்லாம் பதில் வந்தது. "ஆறு நாளைக்கு அப்புறம்தான் கிடைக்கும் போலிருக்கிறது. வாங்கி விடவா?"

"வேண்டாம். வைத்து விடுங்கள்" என்றவன் ஏர்-இண்டியா நண்பரை ஃபோனில் முயன் றான். "ஒரு சின்ன உதவி".

"சொல்லுங்கோ" என்றவரின் பேச்சில் ஸ்ரீரங்கமிருந்தது. "டாக்டருக்கு இல்லாத உதவியா? சொல்லுங்கோ. என்ன உதவி செய்யட்டும்?"

"ஒரு சின்ன எமர்ஜென்ஸி. அம்மாவைப் பார்க்க நாகர்கோயில் பக்கம் போக வேண்டி யிருக்கிறது. நாலு டிக்கெட் ஏற்பாடு செய் தாகணும். டிராவல்ஸ் ஏஜெண்ட் ஆறு நாளைக்கப்புறம்தான் என்கிறார்."

"அநியாயத்துக்கு அதிர்ஷ்டசாலி, நீங்கோ. இண்டியன் அம்பாஸிடர் ஆபீஸில் ஒருத்தர் பத்துநாள் முந்தியே குடும்பத்தோட இந்தியா போக டிக்கெட் வாங்கி இருந்தார். என்ன காரணமோ இப்பதான் கொடுத்தனுப்பி கான்ஸல் பண்ணச் சொல்லிட்டார். கொடுத்து வைத்தவர் நீங்கோ. சீக்கிரமா மூட்டை முடிச்சைக் கட்டுங்கோ."

"குட் நைட்" என்று சொல்லி ஃபோனை வைத்துவிட்டு, "லீனா! கிளம்பத் தயார் செய். நாளைக்கே காலையில நாம் இந்தியா கிளம்பு கிறோம்" என்றான், உற்சாகமாக. "ஆஸ்பத் திரியில் சில மாற்று ஏற்பாடுகள் செய்தாக வேண்டும்" என்றவன் மீண்டும் ஃபோனைப் பறித்தான்.

சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது கார். ஓட்டுநராக அமர்ந்திருந்த வினிதாவின் கண்கள் சாலையில் நெடுந்தூரம் ஒளிக்கோடு போட் டிருப்பதையே வெறித்துப் பார்த்தன. மனத் துக்குள் புலம்பினாள்.

"பணம் வேண்டும். எனக்கு நிறைய பணம் வேண்டும். அதை அடைய எதையும் செய்ய வேண்டும்".

சற்றே மேலிருந்த பின்னோக்கிக் கண் ணாடி வழியாகப் பார்த்தாள். பின் ஸீட்டில் இடம் கொள்ளாமல் காலை மடக்கி அமர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான், அந்தப் பாண்டி. அவனைக் கொஞ்சம் கண்ணியவானாக்கிக் காட்டும் ஆசையில் அவசரமாக வாங்கிய ரெடிமேட் முழு நீள கோட்டும், தொப்பியும், கறுப்புக் கண்ணாடியும் அவனைக் கண்ணிய வானாகக் காட்டுவதற்குப் பதிலாக மாஃபியா கொலைகாரன் மாதிரி ஆக்கிக் காட்டியது.

எடுத்த எடுப்பில் இவனை ஏவிவிடக் கூடாது. கொஞ்சம் நாள் காட்டேஜில் இருக் கட்டும். அம்மாவிடம் கெஞ்சி அனுதாபத்தை சம்பாதித்துச் சாதிக்கப் பார்க்கலாம். முடி யாது - தோல்வி என்ற நிலை வந்தால் பிறகு இவனை ஏவி விடலாம்.

'கடன்காரியாய்ப் போகிற நான், திரும்பும் போது கோடீஸ்வரியாய்த் திரும்பப் போகி றேன்' என்ற நினைப்பே உற்சாகத்தைத் தர - ஆக்ஸிலேட்டரை ஆன மட்டும் அழுத்தவே - கார் பறந்தது.

—தொடரும்

பாவையர் பக்கங்கள்

காலை 'டென்ஷனை'க் குறைப்போம்! கவலையின்றி இருப்போம்!!

இப்பொழுது உள்ள கணிப்பொறி யுகத்தில் நாம் எல்லாவற்றிற்கும் ஈடுகொடுக்க நேரமும் போதவில்லை; பொறுமையும் போதவில்லை. வேலைக்குச் செல்லும் சகோதரிகளுக்குச் சொல்லத் தேவையேயில்லை, காலை வேளைகளில் அவர்களுக்குள்ள டென்ஷனை. ஆகமொத்தம், இன்றைய பெண்கள் யாவரும் அவதிப்படுவது காலை நேர டென்ஷனினால்தான்.

வேலைக்குப் போகும் பெண்களாயினும், வீட்டில் இருப்பவர்களாயினும் எப்படி இந்த டென்ஷனை நிவர்த்தி செய்வது?

வாழ்க்கையின் முதல் வெற்றிப்படி, திட்டமிட்டுச் செயல்படுவதே! ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளையும் நாம் ஓய்வு நாளாகக் கழிக்கிறோம். வாரம் முழுவதும் ஓடியாடிவிட்டு சற்றே நாம் இளைப்பாறுவது அந்த ஒரு நாளில்தான். அதில் ஓர் அரை மணி நேரம் நாம் திட்டமிடுவதில் செலவழித்தால் போதும், பின் நீங்களே ராணி!

1. முதலில் அடுத்த ஒரு வாரத்திற்கு என்ன ஐட்டங்கள் சமைப்பது, அதற்குத் தேவையான சாமான்கள் உள்ளனவா என்பதையும், முதல் தேதியன்று நாம் வாங்க மறந்த டூத்பேஸ்டையோ, அல்லது குழந்தையின் சோப்பையோ, அல்லது கணவருக்குரிய ஷேவிங் லோஷனையோ முதலில் குறித்துக் கொள்ளலாம்.

2. பின் அலுவலகத்துக்குப் போகும் சகோதரிகள் என்னென்ன புடைவைகள் அல்லது சல்வார்கள் அணியலாம், அவற்றில் எதில் பொத்தான் விழுந்துள்ளன, அல்லது எவை அயர்ன் செய்யாமலிருப்பவை என்பதைக் கவனித்து அவற்றைச் சீர் செய்து கொள்ளலாம்.

3. ஸ்கூலுக்குப் போகும் குழந்தைகளிருந்தால், யூனிபாரம், ஷூ, சாக்ஸ் போன்றவை தயாராக உள்ளனவா? நோட்டுப், புத்தகங்கள் சரியாக உள்ளனவா என்பதைக் கவனிக்கலாம்.

4. கணவருடைய வேலைகள் ஏதாவது பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதா? என்பதை ஆராயலாம்.

5. கறிகாய்களைச் சுத்தம் செய்து சிறு பைகளில் போட்டு, ப்ரிஜ்ஜில் வைத்துக் கொள்ளலாம்.

மேற்கூறியவாறு யோசித்து ஒரு பட்டியல் போட்டு அதன்படி செயல்படுத்தினால் ஓரளவு டென்ஷனைக் குறைக்கலாம்.


மாலை வேளைகளில் டி.வி பார்க்கும்போது ரூமில் தூசி தட்டுவது, ரூமில் உள்ள செடிகளுக்குத் தண்ணீர் விடுவது, பட்டன்களைத் தைப்பது, உறவினர், நண்பர்களுக்குக் கடிதம் எழுதுவது, சீப்பில் அழுக்கெடுப்பது, இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதுபோன்ற சின்னஞ் சிறு வேலைகள் படிக்க சுலபமாகவும் வேடிக்கையாகவும் இருந்தாலும் அவை நடைமுறைக்கு வந்தால் நன்மை பல கோடி! இப்படிப்பட்ட சிறிய செயல்கள் அநாவசிய விவாதங்களையும், மனக்கசப்பையும் தவிர்த்து, காலை வேளை டென்ஷனைக் கண்டிப்பாகக் குறைக்கும்.

முடிந்தவரை வேலைகளில் மும்முரமாய் ஈடுபட்டு அடுத்தவருடன் பேசுவதைக் காலை வேளைகளில் குறைக்கலாம். இதனால் வீண் விவாதங்களும் குறையும், நமக்கு டென்ஷனும் குறையும்!

காலை வேளை டென்ஷனைக் குறைப்போம்! கவலையின்றி இருப்போம்!!

சீதா சந்திரசேகர்
சிதம்பரம் – 1





இந்த மாதம் பரிசு பெறும் கோலத்தை வரைந்தவர் : சூரியா பிரேம்நாத், 24–பி, காலாண்டார் தெரு, காஞ்சிபுரம்.

வாசகர்கள் இந்த இடம் பிடித்துப் பரிசு பெற இதுவரை வெளிவராத புதுமையான சிறந்த கோலத்தை, கறுப்பு மையினால் வரைந்தனுப்பவும். தேர்ந்தெடுக்கப்படும் கோலத்துக்குப் பரிசு ரூ. 50/-. தேர்ந்தெடுக்கப்படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.

13 புள்ளி 3 தடவை நேர்புள்ளி 3இல் நிறுத்தவும்.

முன் எச்சரிக்கையுடன்...



எங்கள் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரப் பாட்டி தான், என் தோழி வீட்டிலும் வேலை செய்கிறார்கள். ஒருநாள் என் தோழியின் துணிகளையெல்லாம் பாட்டி துவைக்கும்போது, தோழியின் ஜாக்கெட்டில் மாட்டியிருந்த பின்னை (ஹுக்கு) எடுக்க மறந்து விட்டிருக்கிறாள். அந்தப் பெரிய பின் பாட்டியின் கையில் ஆழமாகக் குத்திவிட்டதாம். பிறகு என் தோழிதான் அதை ஜாக்கிரதையாக எடுத்து இருக்கிறாள். உடனே பக்கத்தில் உள்ள டாக்டரிடம் பாட்டியை அழைத்துப் போய், மருந்து போட்டுக் கட்டியிருக்கிறார்கள். கையில் காயம் நன்கு ஆறிய பிறகுதான், பாட்டி வேலைக்கு வரமுடிந்தது.

இந்த அஜாக்கிரதையினால் பாட்டி ஒருவாரம் வேலைக்கு வர முடியவில்லை. அந்த ஒரு வாரத்தில் ஏழைமையிலிருக்கும் அந்த பாட்டிக்கு டிபன், காப்பி, சாப்பாடு கிடைக்கவில்லை. வீட்டில் சின்னக் குழந்தைகளை வைத்துக் கொண்டு எல்லா வேலைகளையும் நாங்களே சிரமப்பட்டுச் செய்ய நேர்ந்தது. டாக்டருக்கு பீஸ் வேறு செலவு. அதைவிட நம் அஜாக்கிரதையினால் அந்த வயதான பாட்டியின் கை புண்ணாகி சிரமப்பட்டார்களே என்கிற மனவருத்தமும், அந்தப் பாட்டியின் வேதனையும் தான் மிஞ்சியது. இந்த நிகழ்ச்சியை என்னிடம் சொல்லி அந்தப் பாட்டியும், தோழியும் வருத்தப் பட்டார்கள்.

நம் வீட்டில் வேலை செய்பவர்களுடைய உடல் நலத்தைப் பாதுகாப்பதும் நம்முடைய கடமை அல்லவா?

இதைப் படித்த சகோதரிகள் தம்முடைய துணி மணிகளையோ அல்லது குழந்தைகளின் துணிமணிகளையோ துவைக்கப் போடுமுன், அத் துணிகளை நன்கு பரிசீலனை செய்து, கையில் குத்தும் பின்கள், உடைந்த கூரான பொத்தான்களை முன்எச்சரிக்கையுடன் அகற்றி விட்டுப் போடலாமே! என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சூர்யா பிரேம்நாத்,
காஞ்சிபுரம்.

சமையல் குறிப்புகள்

1. ரவை ஓர் ஆழாக்கு, மைதா ஓர் ஆழாக்கு இரண்டையும் கரைத்து ஐந்து தக்காளிப் பழங்களையும் சேர்த்து மிக்ஸியில் அடிக்கவும். தேவையான உப்பு சேர்த்து வெங்காயம், பச்சை மிளகாய், கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை சேர்த்துத் தாளித்து தோசை வார்க்கலாம்.

2. சில சமயம் தேன்குழல் செய்யும்போது அரிசி மாவில் உளுத்தமாவு குறைவாகச் சேர்த்து விட்டால், மிகவும் கெட்டியாகி தேன்குழலை வாயில் போட்டால் கடிக்கவே முடியாது. அப்படி ஆகிவிட்டால் கவலை வேண்டாம். தேன்குழலைக் கொஞ்சம் ஒன்றிரண்டாக உடைத்து மிக்ஸியில் போட்டுப் பொடி செய்து கொண்டு சர்க்கரைப் பொடி, ஏலப்பொடி, நெய், முந்திரி ஆகியவற்றைச் சேர்த்து உருண்டையாகப் பிடித்து விடுங்கள். பேஷ்! பேஷ்! என்று பாராட்டும் கிடைக்கும்.

சீதாலக்ஷ்மி
சென்னை 600 078



வேப்பிலையின் மகத்துவம்

நீரிழிவு நோய் : வேப்பிலையை நிழலில் உலர்த்தவும். பொடி செய்த பின் சிறிது பனைவெல்லம், சுக்கு, ஓமம் சேர்த்துப் பொடித்து வைக்கவும். இரவு தூங்கப் போவதற்கு முன் ஒரு டம்ளர் பாலில் இரண்டு டீஸ்பூன் பொடியைக் கலக்கிக் குடிக்கவும்.

பயோரியா : வேப்பிலையைப் பன்னிரண்டு மணிநேரம் தண்ணீரில் ஊற வைக்கவும். வடிகட்டி நிழலில் காய்ந்தபின் பொடியாக்கவும். சிறிது உப்பை அந்தப் பொடியுடன் கலந்து பல்துலக்க உபயோகிக்கலாம். இந்தப் பொடியை இளஞ் சூடான வெந்நீரில் கரைத்து வாயைக் கொப்பளித்தால் வாயிலுள்ள துர்நாற்றம் போகும்.

—இந்திரா ஆராவமுதன்,
ஸ்ரீரங்கம்.

எண்ணிப் பார்க்கலாம் பெண்ணே!



அன்புச் சகோதரிகளே!

இனி வரும் காலம் விழாக் காலம். பொங்கல் வரையில் மாதா மாதம் விசேஷம்தான். அவரவர்கள் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், கையிருப்புகளைப் பொறுத்து விதவிதமாகக் கொண்டாடுவோம்.

இதைப்போன்ற விசேஷங்களில் வீட்டுப் பெண்கள் பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் அளவுக்கு அதிகமாகப் பிடித்துக் கொண்டு, நிகழ்கால சந்தோஷங்களை இழந்து வருகிறார்களோ, என்று சில சமயம் நினைக்கத் தோன்றுகிறது.

"எங்க பாட்டி இப்படித்தான் செய்வாங்க" என்றும், "வழி வழியாக எங்க புகுந்த வீட்டுல இப்படித்தான் வழக்கம்" என்றும் - அவர்கள் சொல்லிக் கொடுத்த பல விஷயங்களை வேகமாக, இப்போதும் செய்யத் துடிக்கிறோம்.

ஆனால் இப்போதைய வாழ்க்கை முறையில் பல மாறுதல்கள். இவ்வளவு காரியங்களிலும் ஈடு கொடுக்க அப்போதைய நாள்களைப் போலக் கூட்டுக் குடும்பம் கிடையாது. நாமிருவர் நமக்கிருவர் பாணிக் குடும்பத்தில், எல்லா வேலையையும் பெரும்பாலும் வீட்டுத் தலைவியே செய்ய நேரிடுகிறது.

அதுபோன்ற சூழ்நிலையில் சில விஷயங்களில் "காம்ப்ரமைஸ்" செய்து கொள்ளலாம். தவறில்லை. அதற்காக, வழிவழியாக வந்த பழக்கங்களை மாற்றிக் கொள்ளலாமா என்று கேட்கலாம்.

நம்முடைய வீட்டையும், நம் சூழ்நிலையையும் பார்த்துக் கொண்டு அதற்கு இசைகிறாற்போன்ற வேலைகளை வைத்துக் கொள்ளலாம்.

இல்லையென்றால் உடலும் உள்ளமும் சோர்ந்து போய், கடைசியில் பண்டிகைக்கான சந்தோஷத்தைக் கொண்டாட முடியாமல் போய்விடும்.

தவிரவும் இந்தச் சோர்வு கோபமாக மாறி, கணவன் குழந்தைகள் மேல் காட்ட, அவர்கள் பதிலுக்குக் கோபப்பட்டு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு... சரியாகச் சாப்பிடாமல் என்று இத்தனையும் ஆகி - கடைசியில் யாருக்காக இத்தனை பாடுபட்டோமோ அந்தக் குடும்பமே கோபத்திலும் குழப்பத்திலும் இருக்கும்.

ஆகவே, பண்டிகைகள், விழாக்கள் எல்லாம் குடும்பத்தின் சந்தோஷத்திற்காக. அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை முதலில் யோசிப்போம். எண்ணிப் பார்த்தால் உங்களுக்கே எண்ணற்ற யோசனைகள் வரும்.

வாசகர்கள் பலர் இந்தப் பகுதிக்குக் கட்டுரைகள் எழுதிக் குவிக்கத் தொடங்கி விட்டனர். இன்னும் எழுதுங்கள். உங்களைச் சுற்றி உற்றுப்பார்த்துப் பிரச்னைகளை, நிகழ்வுகளைக் கவனித்து அவற்றை உங்கள் கண்ணோட்டத்தில் எழுதுங்கள்.

பெண்களின் சிந்தனைகள் வளர வளர, சுற்றியிருக்கும் சமுதாயமே செழிக்கும்.

நட்புடன்

கிரிஜா ராகவன்

சில சின்ன டிப்ஸ்

1. வாயில் புண் இருந்தால் அதன் மேல் விளக்கெண்ணெய் தடவினால் குணமாகும்.

2. பனை நுங்கு நீரைப் பருக்களின்மேல் தேய்த்தால் பருக்கள் உடைந்துவிடும்.

3. உடம்பில் அரிப்பு ஏற்பட்டால், சோடா உப்பு ஒரு சிட்டிகை எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உடம்பில் தேய்த்தால் அரிப்பு அடங்கிவிடும்.

4. படுத்தவுடன் தூக்கம் வராவிட்டால் கசகசாவைக் கொஞ்சம் அம்மியில் வைத்து அரைத்து ஒரு டம்ளர் பாலில் கலந்து சாப்பிட்டால் தூக்கம் வரும்.

சீதாலக்ஷ்மி

சென்னை 600 078

ஓல்ட் இஸ் கோல்ட்

முதுமை என்பது வாழ்க்கையில் உரிய வயதில் தானாகவும், தவறாமலும் வந்து விடும் ஒரு விஷயம். நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, ஆண்டொன்று போனால் வயதும் ஒன்று கூடுதல் ஆகவே செய்யும்.

அது மட்டுமல்ல; இன்றைய இளமையும் நாளைய முதுமையை நோக்கிப் பயணமாகும் படிக்கட்டின் ஆரம்பமே!

இதைப் புரிந்து கொண்டு விட்டால் "அந்தப் பெரிசுக்கு சொன்னா விளங்காது" என்று இளையவர்களும், "நான் சொல்றதக் கேக்கறதேயில்லை" என்று முதியவர்களும் புலம்புவதற்கு இடமேயில்லை.

சில நடைமுறை விஷயங்களை இரு தரப்பாருமே பின்பற்றினால் பிரச்னையேயில்லை.

இளையோருக்கு :

1. வீட்டில் பெரியவர்கள் ஏதாவது அறிவுரை கூறினால், "போ பாட்டி! உனக்கு ஒன்னும் தெரியாது" என்று அலட்சியப்படுத்தாமல், "சரி பாட்டி" என்று பதில் சொல்லுங்கள். மகிழ்ச்சியுடன் அவர்களாகவே ஒதுங்கிக் கொள்வார்கள்.

2. எங்கே வெளியில் போவதானாலும் பெரியவர்களிடம் போய், இன்ன இடத்திற்குப் போகிறேன், போய்விட்டு வருகிறேன் என்று சொல்லிக் கொண்டு செல்லுங்கள். இந்தப் பழக்கத்தால் அவர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

3. அதேபோல் வெளியிலிருந்து திரும்பி வந்தாலும், அவர்களிடம் போய் இரண்டு வார்த்தைகள் பேசுங்கள்.

4. வயதானவர்கள் எங்காவது கோயில், விசேஷம் என்று கிளம்பினால் அவர்களைத் தடுக்காதீர்கள்.

5. வயதானவர்கள் தம் கையில் கொஞ்சம் பணம் வைத்துக் கொண்டு ஏதோ செலவு செய்தால், அதைப் பெரிய குற்றமாக்கிப் பேசிக் காட்டாதீர்கள்.

6. வயதானவர்களுக்கு நோய் வந்து விட்டால் அசிங்கப்படாமல் அவர்களை அன்புடன் கவனித்துக் கொள்ளுங்கள். நாளைக்கு நமக்கும் இந்த நிலை வரலாம்.

7. சின்னப் பிரச்னைக்கெல்லாம், முதியோர் இல்லத்தில் சேர்த்து விடலாமா என்று யோசிக்க ஆரம்பித்து விடாதீர்கள்.

முதியவர்களுக்கு :

1. சமுதாய மாறுதலை முதலில் புரிந்து கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் "எங்க காலத்துல" என்று பேசத் தொடங்கி விடாதீர்கள். அதைப் பெரிய அறுவை என்று இளையவர்கள் நினைக்கிறார்கள்.

2. இப்போதைய தேவைகள் பெருகி இருப்பதாலும், வாய்ப்புகள் அதிகமாகி இருப்பதாலும், நிறையப் பெண்கள் பல வழிகளில் சம்பாதிக்கத் தொடங்கியுள்ளனர். அதை இடித்துக்காட்டிக் குறை சொல்லாதீர்கள்.

3. வீட்டில் முடிந்தவரை சிறுசிறு வேலைகளை ஏற்றுக் கொண்டு சந்தோஷமாகச் செய்து கொடுங்கள்.

4. எங்கே வெளியே போனாலும் நேரத்திற்கு வீட்டிற்கு வந்து விடுங்கள். வீட்டில் இருப்பவர்களைத் தவிக்க விடாதீர்கள்.

5. பொழுது போகவில்லை என்றால் நீங்களாகவே ஏதாவது ஓரிரு வேலைகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

6. எல்லாப் பொறுப்புகளையும் நீங்களே கையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்காதீர்கள். "ஹாண்ட் ஓவர்" செய்வதுதான் புத்திசாலித்தனம்.

7. தனக்கு எப்போதுமே மற்றவர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்து எரிச்சல் படுத்தாதீர்கள். அது வெறுப்பைத்தான் வளர்க்கும்.

மொத்தத்தில் இன்றைய பெரிசுகள், "நாம் நேற்றைய இளசுகள்தானே" என்றும், இளையவர்கள், "நமக்கும் முதுமை வெகு தூரத்தில் இல்லை" என்றும் புரிந்து கொண்டால் என்றும் வாழ்க்கை இனிமைதான்!

சாவித்ரி சீனிவாசன்
சென்னை 600 028



உடல் ஆரோக்கியமா? சிக்கனமா?



சிறந்த முறையில் பயிரிடப்பட்டு, பராமரிக்கப்பட்ட சூரிய காந்தி விதைகளை 'எக்ஸ்பெல்லர்' முறையில் ஆட்டி எண்ணெய் எடுக்கப்படுகிறது. இவ்விதம் எடுக்கப்பட்ட எண்ணெயைத் தூய்மைப் படுத்தும் முறையாக (Refining process) காஸ்டிக் சோடா சேர்த்து எண்ணெயை 'வாஷ்' செய்து பிறகு பிளீச் செய்யப்படுகிறது. 'ஆக்டிவேட்ட் கார்பன்' 'பிளீச்சிங் எர்த்' என்ற மணல் கலவையினுள் செலுத்தி வெளிக் கொணருவதால் நிறமற்ற எண்ணெய் எடுக்கப்படுகிறது. இதை சுமார் 200° வெப்பத்திற்கு மேல் சூடாக்கி ஒவ்வொரு துளி எண்ணெயும் அடிக்கப்பட்டு, துகள்கள் தெரிக்கும்போது இதிலிருந்து மணத்தைச் சூன்யமுறையில் (Vacuum) பிரித்தெடுக்கப்படுகிறது. இப்படி எடுக்கப்பட்ட எண்ணெய், நிறம், மணம் இன்றி இருக்கும். இந்தச் செயல் முறைக்கு (deodourisation) என்று பெயர். பிறகு 8° குளிர்ச்சியில் பதனப் படுத்தப்பட்டு எண்ணெயிலிருக்கும் 'வாக்ஸ்' குருணையாக்கப்பட்டு வடிகால் மூலம் பிரித்தெடுத்து தூய சூரியகாந்தி எண்ணெய் எடுக்கப்படுகிறது. இம்முறை 'டிவாக்ஸிங்' என அழைக்கப்படுகின்றது. இந்த எண்ணெய் அரை லிட்டர், ஒரு லிட்டர் கொள்ளளவு கொண்ட பிலிம் பாக்கெட்களிலும் 1 லிட்டர், 2 லிட்டர், 5 லிட்டர், 15 கிலோ அளவு பிளாஸ்டிக் பாட்டில்களிலும் அடைக்கப்பட்டு கடைகளில் 'சன்பீம்' என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகின்றது.

'டிவாக்ஸிங்' செய்யப்படுவதால் மெல்லியதாக இருக்கும் 'சன்பீம்' எளிதில் சீரணமாக்கக் கூடியது. கொழுப்புச்சத்து குறைவானது. உடலுக்குக் கேடு விளைவிக்காதது. உபயோகித்த எண்ணெயை சுமார் மூன்று முறை வரை, திரும்ப உபயோகிக்கலாம். அதனால் நிறமோ, மணமோ மாறுவதில்லை. இதன் தரம் கருதி சென்னையிலுள்ள பல ஐந்து நட்சத்திர ஒட்டல்கள், ரெஸ்டாரெண்ட்கள், ஏன்? மருத்துவமனைகள்கூட மொத்த அளவில் வாங்கி உபயோகிக்கிறார்கள்.

பல விதத்தில் கணவன் தரும் மாதப் பணத்தில் சிக்கனம் பிடித்து சேமிப்பும் செய்யும் திறமை வீட்டை நிர்வகிக்கும் பல பெண்களிடம் உண்டு. சராசரி ஒரு வீட்டில் ஒரு மாதத்துக்கு சுமார் 3லிருந்து 4 கிலோ எண்ணெய் உபயோகிக்கப்படும். தரமான சூரிய காந்தி எண்ணெய் விலையில் சுமார் ரூ. 1/- கூடுதல் என்றால்கூட மாதத்திற்கு ரூ. 4/—தான் அதிகமாகும். பல வேண்டாத செலவினைத் தவிர்த்து உடல் நலத்தில் அக்கறை உள்ள அனைவரும் இதைப் பொருட்படுத்தாமல் தரமான சூரியகாந்தி எண்ணெயை வாங்கி உபயோகித்து பிற்காலத்தில் பெருத்த மருத்துவச் செலவிலிருந்து சேமிப்பு செய்யலாம். 'சன்பீம்'! இது ஒர் ஏவிடி நிறுவனத்தின் தயாரிப்பு. ஏவிடி நிறுவனம் 1925 முதல் 'பிளான்டேஷன்' தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தேயிலை, வாசனைத் திரவியம், ரப்பர் ஆடைகள் உற்பத்தி மேலும் ஏற்றுமதியில் சிறந்து விளங்குகிறது இந் நிறுவனம். ஆகையால் அவர்கள் தயாரிப்புகள் அனைத்தும் எல்லா வகையிலும் சிறந்தவை. 'ஏவிடி'ன்னா ஏவிடிதான். —டி. ஆர். ஜி.

டைகர் பாம்

சீன மருத்துவ முறைப்படி தயாரிக்கப்படும் டைகர் பாம் தனிப்பெரும் மதிப்பைப் பெற்றது. 36 ஆண்டுகளுக்கு மேலாக உலகம் முழுவதிலும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவிலேயே முதல் முறையாக வலி நிவாரணியான 'டைகர் பா'மை ஷாஷேயில் கொண்டு வந்திருக்கிறார் வெல்வெட் நிறுவனத் தலைவர் டாக்டர் சி.கே. ராஜ்குமார்.

வெல்வெட் நிறுவனத்திலிருந்து வெளிவரும் இந்த 'டைகர் பாம்'மின் விலை ரூ. 2/-தான். ஷாஷேயில் வெளிவருவதால் கையடக்கமானது. பயணங்களுக்கு எடுத்துச் செல்ல சுலபமானது.

சிறந்த தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த மருத்துவர்களின் அணுக்கக் கண்காணிப்பின் கீழ் டைகர்பாம் தயாரிக்கப்படுகிறது.



தசை வலிகள், குத்தல்கள், சிராய்ப்புகள், கீல் பிடிப்பு வாதம், பூச்சிக்கடி, அரிப்பு, இடுப்பு - முழங்கால் வலிகள், ஜலதோஷம், தலைவலி ஆகியவற்றுக்கு இது பாதுகாப்பானது; நம்பகமானது. பக்க விளைவுகளுக்கு இடமேயில்லை.

ஒரு ஷாஷேயில் இரண்டு பிரிவுகளைக் கொண்டது.

ஷாம்பு, டால்கம் பவுடர்களில் தனியிடத்தைப் பெற்றிருக்கும் வெல்வெட் நிறுவனம் 'டைகர் பாம்' தயாரிப்பிலும் தனித் தன்மையைத் தக்க வைத்துக் கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை.

உங்களுக்குத் தெரியுமா?

உங்களுக்குத் தெரியுமா, நல்ல தூய தேங்காய் எண்ணெயை எப்படிக் கண்டறிவது என்று? இதோ சில வழிகள். தூய தேங்காய் எண்ணெய் 24° சீதோஷ்ண நிலையில் உறைய வேண்டும். யார் கூறினாலும் நம்பாதீர்கள், மூன்று மாதங்களுக்கு மேலும் அப்படியே இருக்கும் என்றால், கட்டாயம் ஓரளவேனும் அதன் தரத்திலும் மணத்திலும் மாற்றம் ஏற்பட்டுவிடும். அப்படி ஏற்படவில்லையெனில் அது தூய தேங்காய் எண்ணெய் இல்லை. பாதுகாக்க 'ப்ரிசெர்வேடிவ்' சேர்க்கப் பட்டுள்ளது என்று கொள்ள வேண்டும். உங்களுக்குத் தெரியுமே இப்படி 'ப்ரிசெர்வேடிவ்' (Anti-oxidant) சேர்க்கப்பட்ட பொருள்கள் உடலுக்கும் கேசத்திற்கும் நல்லதல்ல என்று. 'ப்ரிசெர்வேடிவ்' சேர்க்கப்படாமல் தயாரிக்கப்பட்ட தூய தேங்காய் எண்ணெய்தான் 'தீபிகா'. இது ஏவிடி நிறுவனத்தின் சமீபத்திய தயாரிப்பு.



காலிகட், ஆலப்புழா (அலபி) யிலிருந்து தருவிக்கப்படும் சிறந்த தேங்காய்க் கொப்பரையிலிருந்து முதல், இரண்டாவது 'கிரஷிங்'கிலிருந்து எடுக்கப்பட்ட தூய தேங்காய் எண்ணெய் 'தீபிகா'. மூன்றாவது கிரஷிங் எண்ணெயை உபயோகிப்பது இல்லை. இப்படி இரண்டாவது கிரஷிங் வரை எடுக்கப்பட்ட எண்ணெய் பலமுறை மிக நுண்ணிய வடிகட்டிகள் மூலம் (microfilter) வடிகட்டப்படுகிறது. தரம் மாறாத அத்தருணத்திலேயே கைபடாமல் தானியங்கி (Automatic) இயந்திரத்தின் மூலம் பாக்கிங் செய்யப்படுகிறது. மூன்றாவது முறையாக சக்கையைப் பிழிந்தெடுக்கும் எண்ணெயை உபயோகிக்காததால் 'தீபிகா' மெல்லியதாக, பிசுபிசுப்பின்றி இருக்கின்றது. மெல்லியதாக இருப்பதால் கேசத்தின் அடிவேர்க்கால் வரை எளிதில் பரவும். பண்டைய காலம்தொட்டு கேசப் பராமரிப்பிற்குச் சிறந்ததென எல்லாராலும் ஒருமுகமாகக் கருதப்படுவது சிறந்த தூய தேங்காய் எண்ணெய். தூய தேங்காய் எண்ணெயை மேற்கூறிய முறையில் பரிசோதித்து வாங்கலாம் அல்லது நேரிடையாகக் கடைக்குச் சென்று 'தீபிகா' என்று கேட்டு வாங்கலாம். உங்கள் கேசமும், உணவும் உண்மையோடு உறவாடட்டும்.

—டி. ஆர். ஜி.

சுலபமாக சில யோசனைகள்

சிலருக்கு அடிக்கடி தலைவலி வரும். விதவிதமான மாத்திரைகளைச் சாப்பிட்டு, தற்காலிகமாகத் தலைவலியைத் தீர்த்துக் கொள்வதைவிட தலைவலியே மீண்டும் வராத ஒரு வைத்தியம் இருக்கிறது.

☆ கொஞ்சம் மிளகும், கரிசலாங்கண்ணி இலை கொஞ்சமும் சேர்த்து நன்றாக மைபோல அரைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

காலையில் வெறும் வயிற்றில் சிறிதளவு இந்த விழுதைத் தொடர்ந்து இருபத்து ஒரு நாள்கள் சாப்பிட்டு வந்தால் தலைவலி கிட்டவே வராது.

☆ அறிவாற்றலும் நினைவாற்றலும் பெருக ஒரு கைவைத்தியம் உண்டு.

சுக்கு, இந்துப்பு, கோஷ்டம், அதிமதுரம், ஓமம், வசம்பு, மஞ்சள், சீரகம், திப்பிலி – இவை அனைத்தையும் தலா 10 கிராம் எடுத்துக் கொள்ளவும்.

இவற்றை நெய்யில் பொரித்து உரலில் போட்டு நன்றாக இடித்துப் பின் சலித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு சிட்டிகை, காலையில் ஒரு வேளையும் மாலையில் ஒரு வேளையும் பசுநெய்யில் கலந்து மூன்று வாரம் தொடர்ந்து சாப்பிட்டுப் பாருங்கள். ஞாபக மறதி ஓடியே போய்விடும்.

☆ தேனுடன் வெங்காயச் சாறு கலந்து சாப்பிட்டால் கண் பார்வை பிரகாசம் அடையும்.

☆ தேனுடன் எலுமிச்சம் பழச் சாறும், இஞ்சிச் சாறும் கலந்து கொடுத்தால் வாந்தி நிற்கும்.

☆ தேனுடன் பாலைக் கலந்து சாப்பிட்டால் சளியும் காய்ச்சலும் குறையும்.

☆ தேனுடன் மாதுளம்பழ ரசத்தை சம அளவு சேர்த்துத் தினமும் சாப்பிட்டால் இருதய நோய்கள் தீரும்.

☆ தேனும், முட்டையும், பாலும் கலந்து சாப்பிட்டால் ஆஸ்துமா தொல்லை தீரும்.

☆ காலையில் குளிர்ந்த நீரில் தேனைக் கலந்து சாப்பிட்டால் சளி பிடிக்காது.

சுகுணா,

சென்னை – 600 004.

மனம் விட்டுப் பேசுவோம்

● செப்டம்பர் திங்கள் என்றாலே மகாகவி பாரதியாரின் நினைவு தான் வரும். அந்த வகையில் நினைவு வரும் அவரின் மகத்தான கவிதைகளில் ஒன்றான 'ஓடி விளையாடு பாப்பா; நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா' என்ற பாடலின் வரிகளை உண்மையாக்கி, சாதனை புரிந்து வரும் நம் தமிழகத்து குற்றாலீஸ்வரனின் அட்டைப் படமும், உள்ளே மோதிரக்கை யால் (வாழ்த்து) குட்டு வாங்கியதும் கண்டு பூரித்தேன்.

திருமதி நாராயணராவ், வியாசர் காலனி.

● மிகக் குறைந்த வயதில் உலகச் சாதனை புரிந்து தமிழகத்தின் புகழை உலகெலாம் பரப்பிய குற்றாலீஸ்வரனை அட்டையில் அலங்கரித்து கௌரவித்த 'அமுத சுரபி'க்குப் பாராட்டுகள்.

ந. சுந்தர், திருவனந்தபுரம்.

● செப்டம்பர் மாத இதழில் வெ.இறையன்புவின் கவிதை மின்னல் கீற்றாய் மனமெங்கும் வியாபித்தது. மூன்று வரிகளுக்குள் முழுக் கடலையே அடக்கி உள்ள தற்குப் பாராட்டுகள் - வெளியிட்ட உங்களுக்கும்தான்.

வெ. துளசிதாஸ், சேலம்.

● 'தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில்...' சிறுகதை மனதை உலுக்கியது. இன்றைய அரசியல் - நாட்டு நடப்பை அப்படியே பிரதிபலித்து விட்டார் வித்யா சுப்ரமணியம்.

அ. செபாஸ்டின், களியல்.

● 'உறவு' சிறுகதை மனித நேயம் மிக்கது. இந்தக் காலத்தில் யாரும் இப்படிச் செய்வதில்லை. ஆனால் கதையைப் படித்தபோது இப்படி யும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணமே நிறைவைத் தந்தது.

அன்பின் செபா, குமரி - 629 101.

● 'ஒரு புனித உலா' கட்டுரை யைப் படித்தபோது நாமே நேரடி யாகச் சென்று வந்த திருப்தியைத் தந்தது. ஒருநாள் என்பதை இரு நாள்களாக அமைத்து ஏற்பாடு செய்தால் மேலும் சிறப்பாக இருக்கும் என்பது கட்டுரையின் நோக்கம் மட்டுமல்ல; என் போன்றவர்களின் எண்ணமும் அதுதான்.

எம். ரவி, அரிமழம்.

● 'பாவையர் பக்க'த்தில் தாய் மார்களே கவனியுங்கள் செய்திகள் ஒவ்வொரு தாய்மாரும் கட்டாயம் படித்து உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த யோசனை களாகும். 'என்ன கொண்டு வந் திருக்கேன் பார்' கட்டுரை, பிள்ளை களுக்குப் பரிசு கொடுப்பதால் உறவுச் சங்கிலிகள் இணைவது பற்றியும், பாசம் வளர்வது பற்றி யும் மிக அருமையாக விளக்கி யுள்ளது.

அ.செ. கடையல்.

● பாண்டிச்சேரியில் படகுச் சவாரி. அதாவது உல்லாசக் கப்பல் பிரயாணம் பற்றிய கட்டுரை மூலம், பாண்டிச்சேரியை நேரில் பார்த்த உணர்வு, கடல் சவாரி செய்த இன்பக் களிப்பு!

தி.சோ.கணேசன், சென்னை - 14.

அமுதசுரபி – இந்தியன் வங்கி இணைந்து வழங்கும் சிறந்த காப்பியத்திற்குப் பரிசு

முதற் பரிசு	– ரூ. 5,000/-
இரண்டாம் பரிசு	– ரூ. 3,000/-
மூன்றாம் பரிசு	– ரூ. 1,000/-

★ காப்பியம், இதுவரை வெளிவராததாக இருக்க வேண்டும். சரித்திர நிகழ்ச்சிகள், சமூகப் பிரச்னைகள் குறித்த காப்பியங்களாக இருக்கலாம். ஏற்கெனவே நூல் வடிவில் வெளி வந்ததாகவோ, பத்திரிகையில் பிரசுரமானதாகவோ இருக்கக்கூடாது.

★ கையெழுத்துப் பிரதியாக இருந்தால் வெள்ளைத் தாளில் 250 முழுப் பக்கங்களுக்கு மேற் படாமலும், தட்டச்சு செய்திருப்பின் 150 முழுப் பக்கங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

★ தேர்வு செய்யப்பட்ட காப்பியத்தை, தனி நூலாக வெளியிடும் உரிமை ஸ்ரீராம் டிரஸ்டுக்கு உரியதாகும்.

★ பரிசுக்குரிய காப்பியத்தைத் தேர்வு செய்யும் உரிமை நடுவர் குழுவையே சார்ந்தது. தனிப்பட்ட கடிதப் போக்குவரத்துகள் தவிர்க்கப்பட வேண்டும்.

★ கையெழுத்துப் பிரதிகள் அமுதசுரபி அலுவலகத்துக்கு வந்துசேர வேண்டிய கடைசி தேதி : 30-12-94


'அமுதசுரபி' 145, லிங்கச் செட்டி தெரு சென்னை 600 001

மகாகவி பாரதியார் விழா

மகாகவி பாரதியார் நினைவு நாள் விழா, அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னை (பதிவு எண் 530/62) சார்பில் நடைபெற்றது.

சென்னை மெரீனா கடற்கரை காமராசர் சாலையில் இருக்கும் பாரதியார் சிலைக்கு எழுத்தாளர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் கலைமாமணி விக்கிரமன் தலைமை தாங்கினார்.



சாந்தோம் விருது வழங்கும் விழா

மனித நேய மதிப்பீடுகளை வெள்ளித் திரைகளில், தொலைக் காட்சியில், படைப்பிலக்கியங்களில் படைத்த படைப்பாளிகளுக்கு ஆண்டுதோறும் தமிழக ஆயர் பேரவையின் சாந்தோம் கலைத் தொடர்பு நிலையம் விருது வழங்கி கௌரவிக்கிறது.

12 ஆவது ஆண்டு விருது வழங்கும் விழா சென்னையில் அண்மையில் நடைபெற்றது.

சென்னை மயிலைப் பேராயர் பேரருட்திரு. அருள்தாஸ் ஜேம்ஸ் குத்து விளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தார்.

அபிநயா நாட்டியப் பள்ளி மாணவ மாணவியரின் இறை வணக்க நடனத்திற்குப் பிறகு சாந்தோம் கலைத் தொடர்பு நிலைய இயக்குநர் அருட்திரு ஏ.எஸ். கிருபாகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். தேசியத் திரைப்பட வளர்ச்சிக் கழக (பம்பாய்)த் தலைவர் திரு. ரவி குப்தா விழாத் தலைமையுரையாற்றினார்.

1994 ஆம் ஆண்டிற்கான சிறப்பு சாந்தோம் விருது மெல்லிசை மன்னர் திரு. எம்.எஸ். விஸ்வநாதனுக்கு வழங்கப்பட்டது.

'உழவன்' சிறந்த திரைப்படமாகவும், 'கதிர்வேலு' சிறந்த தொலைக்காட்சித் தொடராகவும், 'மின்மினிகள்' சிறந்த மாணவர் திரைப்படமாகவும், 'விளைவும் விபரீதமும்' சிறந்த கருத்து விளக்கப் படமாகவும் தேர்வு பெற்றன.

திரு. கதிர், திரு. ஸ்ரீதர் ரெட்டி, திரு. வி.சி.ரவி, திரு. க.சரவணன், திரு. கே.ராஜீவ் பிரசாத், திரு. எம்.சிவகுமார் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

சிறந்த தமிழ் எழுத்தாளராக திரு. செ.யோகநாதன் கௌரவிக்கப்பட்டார்.

அருட்திரு. வின்சென்ட் சின்னதுரை நன்றி கூறினார். விழாவிற்கு முன்தினம் சாந்தோம் கலைத் தொடர்பு நிலையம், தேசியத் திரைப்பட வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு திரைப்படம் - தொலைக்காட்சி மையத்தின் சார்பில், 'எப்படிப்பட்ட திரைக் கதைகளை மக்களுக்குச் சொல்கிறோம்?' என்ற தலைப்பில் நடந்த ஒருநாள் கருத்தரங்கு மிகப் பயனுள்ள கருத்தரங்காமாய் இருந்தது. கருத்தரங்கில் பிரபல இயக்குநர்கள் பலர் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.





முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. கியானி ஜெயில்சிங், பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றார். அருகில் ஸ்ரீ பரத்வாஜ சுவாமிகள் உடனிருக்கிறார்.

14.10.94 முதல் 28.10.94 முடிய

திருமலையில்

விச்வ சாந்தி ஸஹஸ்ர குண்டாத்மக ஸ்ரீமஹாவிஷ்ணு யாகம்



புனிதமான யாகங்கள் நடைபெறுவதால் பருவ மழை தப்பாமல் பொழிந்து, பயிர் பச்சைகள் அமோகமாக விளைந்து நாடெங்கும் சுபிட்சமாக விளங்கும். இத்தகைய யாகங்களைத் தரிசிப்பவர்களும், அதில் பங்கு கொள்பவர்களும் உள்ளத்தாலும் உடலாலும் மேன்மை அடைவார்கள். வாழ்க்கை அன்பு மிக்கதாகவும் அமைதியாகவும் விளங்கும். மற்ற தலங்களில் நடைபெறும் யாகத்தை விட சாட்சாத் ஆதி சேஷனே திருவேங்கடமுடையான் எழுந்தருளியிருக்கும் திருத்தலமான புனிதமான தெய்வத் திருமலையில் இத்தகைய யாகம் நடைபெறும்போது அதனால் இவ்வுலகம் பெறும் பயன்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

மனிதகுல மேம்பாட்டிற்காகச் செய்யப்படும் இதுபோன்ற யாகங்களைப் பற்றி ஆகம நூல்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன. ஆகம சாஸ்திரங்களில் பலவிமான யாகங்களைப் பற்றிக் கூறப்பட்டிருந்த போதிலும் 1008, ஹோம குண்டங்களைக் கொண்டதாயும், விஷ்ணுவையே ப்ரதான தேவதையாகக் கொண்டதாயும் உள்ள இந்தப் புனிதமான வேள்விக்கு ஈடு, இணை கிடையாது.

முதல் முதலாக சாஸ்திரங்களில் கூறப்பட்ட முறையில் 'ஸஹஸ்ர குண்டாத்மகக்ரது' வினை, த்ரிதண்டி பெரிய ஜீயர் ஸ்வாமிகள் 1972இல் திருமலையில் நடத்தி வைத்தார். பிறகு 1980 ஆம் ஆண்டு பெரிய ஜீயர் ஸ்வாமிகள் வகுத்த நெறியிலேயே அவரால் முறையாக்கப்பட்ட வேள்வி முறையினைப் பின்பற்றி, ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ த்ரிதண்டி சின்ன ஜீயர் ஸ்வாமிகள் 1008 ஹோம குண்டங்களுடன் 108ஆவது ஸ்வாத்யாய ஞான யக்ஞத்தைச் சிறப்புற நடத்தினார்.

14 ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வருடம் அக்டோபர் 14ஆம் நாள் விஜயதசமி நன்னாளில் தொடங்கப் பெற்று மூன்று நாள்கள் சாந்தி பாராயணங்கள் நடக்க விருக்கின்றன. 17.10.94 முதல் 28.10.94 முடிய ஸஹஸ்ர குண்டாத்மக ஸ்ரீ மகா விஷ்ணு யாகத்தை ஸ்ரீ ஸ்ரீநிவாச பகவான் சந்நிதியில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ த்ரிதண்டி சின்ன ஸ்ரீமத் நாராயண ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகளின் தலைமையில் திருமலையில் 'கோகர்ப்பம்' அணைக்கட்டுக்கு அருகே இந்த யாகம் நடைபெறுகிறது.

பக்தர்களின் பல்வேறு விதமான வேண்டுதல்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றும் பொருட்டும், எதிர்வரும் இடையூறுகள் அனைத்தும் நீங்கும் பொருட்டும் குறிப்பிட்ட மந்திரங்களுடனும் விதிமுறைகளுடனும் ஒரு நாளைக்கு ஒரு வேண்டுதல் வீதம் 12 இஷ்டிகள் சாஸ்திர விதிப்படி நடைபெற உள்ளன.

உங்கள் ராசி பலன்

17-10-1994 முதல் 15-11-1994 வரை

வித்வான் வே. லட்சுமணன்

	கேது		
சனி -வ	கிரக நிலை		செவ்
		சூரி,புத சுக்,ராகு குரு	

கிரக மாறுதல்

24-10-1994 முதல் கன்னி - புதன் (வக்) 30-10-1994 முதல் புதன் - வக்கிரநிவர்த்தி. 5-11-1994 முதல் துலா - புதன் 9-11-1994 முதல் சனி - வக்கிரநிவர்த்தி. 11-11-1994 முதல் விருச்சிக - குரு.

நட்சத்திர பாதசாரம் : 17-10-1994

சூரியன் - சித்திரை 3. சந்திரன் - பூரட்டாதி 4 செவ்வாய் - பூசம் 3. புதன் - சுவாதி 1 (வக்). குரு - விசாகம் 2. சுக்கிரன் - விசாகம் 2 (வக்). சனி - சதயம் 2 (வக்.). ராகு - விசாகம் 1. கேது - பரணி 3.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை *1ஆம் பாதம் முடிய)*

குரு, சனி ஆகியோரது பலம் காரணமாக உங்கள் அறிவாற்றலும், செயல்திறமையும் கூடும். நல்லவர்களின் நேசம் கிட்டும். அதனால் ஓரிரு எண்ணங்கள் நிறைவேறும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் வெற்றி பெறுவார்கள். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். கறுப்பு நிறப்பொருள்கள் ஆதாயம் கொண்டு வரும். எண்ணெய் வகையறாக்கள், தாதுப்பொருள்கள் ஆகியவை லாபம் தரும். வியாபாரிகளுக்கு மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். பயணம் பயன்படும் என்றாலும் பாதுகாப்புடன் மேற்கொள்வது நல்லது. சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள்.

ஆசிரியர்களது நிலை உயரும். ஆன்மிகவாதிகள், சட்ட வல்லுநர்கள், அரசியல்வாதிகள் ஆகியோருக்கெல்லாம் செல்வாக்கும், மதிப்பும் கூடும். கணிதத்துறை ஆக்கம் தரும். கடல்வாணிபம் செய்வோர் லாபம் கூடப் பெறுவார்கள். இயந்திரப் பணியாளர்கள் ஒரளவு வளர்ச்சி காண்பார்கள். பொருளாதாரநிலை சீராக இருந்துவரும். மக்களால் ஓரிரு நன்மைகள் உண்டாகும். 9ஆம் தேதி முதல் சனி வக்கிர நிவர்த்தி பெறுவதால் வரவினம் சற்று அதிகரிக்கும். உழைப்பும் அலைச்சலும் குறையும். 11ஆம் தேதி முதல் குரு 8ஆமிடம் மாறினாலும்கூட பணநடமாட்டம் சீராகவே இருந்துவரும். குடும்ப நலமும் திருப்தி தரும். நண்பர்கள், உற்றார், உறவினர்கள் தொடர்பு ஆக்கம் தரும். அக்டோபர் 17,18,21,23,24,26,27,31 நவம்பர் 1,3,7,9,12,14,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத்திசைகள், அனுகூலமானவை. 3,8 எண்கள் அதிர்ஷ்டமானவை. துலா, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

பொதுவில் அனுகூலமான மாதமிது.

ரிஷபம் : (கிருத்திகை 2ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2ஆம் பாதம் முடிய)

3இல் உள்ள செவ்வாயும் 6இல் உள்ள ராகு, சூரியன், புதன் ஆகியோரும் உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார்கள். துணிவோடும், தன்னம்பிக்கையோடும் எடுத்த காரியங்களில் திறம்பட ஈடுபட்டு வெற்றி வாய்ப்பைப் பெறுவீர்கள். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு, விவகாரங்களிலும் அனுகூலமான போக்கு நிலவிவரும். இயந்திரப்பணிகள் ஆக்கம் தரும். இஞ்சினியர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். கடல் வாணிபம் லாபம் தரும். கடிதப்போக்குவரத்து நற்செய்தி கொண்டு வரும். எதிரிகள் விலகிப் போவார்கள். அரசியல்வாதிகளுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் செழிப்பான பாதை புலப்படும். நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள்.

வியாபாரிகளது எண்ணம் நிறைவேறும். மாணவர்கள் தங்கள் திறமைக்குரிய வகையில் வளர்ச்சி காண்பார்கள். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு நலம் உண்டாகும். கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகள் ஆக்கம் தரும். பிறமொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். உழைப்பு வீண்போகாது. குடும்பநலம் சீராக இருந்துவரும். எதிர்பாராத ஓரிரு செலவுகளை மேற்கொள்ளவும் நேரலாம். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. 9ஆம் தேதி முதல் சனி வக்கிரநிவர்த்தி ஆவதாலும், 11ஆம் தேதி முதல் குரு 7ஆமிடத்திற்குப் பெயர்வதாலும் வெளிச்சமான

சூழ்நிலை உருவாகும் நல்ல வாய்ப்புகள் கூடி வரும். அக்டோபர் 17,18,21,23,24,26,27,31 நவம்பர் 1,3,5,9,12,14,15 தேதிகள் சிறப்பானவை. தெற்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கடக, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4,5,9 எண்கள் நலம் தரும்.

மொத்தத்தில் சுமாரான மாதமிது.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3ஆம் பாதம் முடிய)

குரு, சுக்கிர பலம் காரணமாக உங்கள் மனத்தில் நல்ல எண்ணங்கள் வேர்விடும். உடல் ஆரோக்கியம் சீராக இருந்துவரும். மற்றையோரால் மதிக்கத்தக்க வகையில் உங்கள் செயல்கள் அமையும். புகழ் கூடும். பெரியவர்களது, தொழில் அதிபர்களது ஆதரவு கிட்டும். கலைத்துறை ஊக்கம் தரும். மாதர்களும், சமுதாய நலப்பணியாளர்களும் உற்சாகமான சூழ்நிலையைக் காண்பார்கள். மக்களால் மனத்தில் மகிழ்ச்சி கூடும். பொருளாதார நிலை வளர்ச்சி பெறும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்- வாங்கல் இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். திரவப்பொருட்களால் லாபம் கிடைக்கும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், ஆன்மிகவாதிகள், அமைச்சர்கள், சட்ட வல்லுநர்கள் ஆகியோர் தங்கள் நிலைமையில் அபிவிருத்தி காண்பார்கள்.

கணவன், மனைவியிடையே களிப்புறவு கூடும். கூட்டுத் தொழில் வளர்ச்சி பெறும். பயணத்தால் பயன் உண்டாகும் என்றாலும் பாதுகாப்புடன் மேற்கொள்வது அவசியமாகும். வியாபாரிகள் அளவோடு ஆதாயம் பெறுவார்கள். மாணவர்களது திறமை பளிச்சிடும். தெய்வப் பணிகள் நிறைவேறும். ஞானமார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். 2இல் செவ்வாய் உலவுவதால் பேச்சில் கடுமையைக் குறைத்து இனிமையைக் கூட்டிக் கொள்வது அவசியமாகும். சிறுசிறு இடர்ப்பாடுகள் அவ்வப்போது ஏற்படும். மனக்குழப்பத்திற்கு இடம் தராமல் துணிவை வரவழைத்துக் கொண்டு செயல்களில் ஈடுபட்டால் இரட்டிப்புப் பயன்பெறலாம். 11ஆம் தேதி முதல் குரு 6ஆமிடம் மாறுவதால் பொருளாதார நிலையில் சிக்கல்கள் ஏற்படும். மக்களாலும், வாழ்க்கைத் துணைவராலும் ஓரிரு தொல்லைகள் சூழும். பக்குவத்தோடு சமாளிப்பது நல்லது. அக்டோபர் 17,18,21,23,24,26,27,31 நவம்பர் 1,3,5,7,12,14,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சிறப்பான மாதமிது.

கடகம் : (புனர்பூசம் 4ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

புத, சுக்கிர பலம் காரணமாகச் சங்கடங்கள் என்பவை சற்றுக் குறையும். நெருங்கிய நண்பர்களாலும், உற்றார், உறவினர்களாலும் நலம் உண்டாகும். குடும்பநலம் சீராகவே இருந்துவரும். வியாபாரம் வளர்ச்சி பெறும். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு உண்டாகும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு நலம் ஏற்படும். தாயாராலும், தாய்வழி உறவினராலும் நன்மைகள் விளையும். அயல்நாட்டுத் தொடர்பு அளவோடு லாபம் தரும்.

சமுதாய நலப்பணியாளர்களுக்கும், மாதர்களுக்கும் வரவேற்பு கூடும். மாணவர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். ஜன்மத்தில் செவ்வாய் உலவுவதால் எதிலும் அவசரம் கூடாது. பக்குவம் அவசியம் தேவை. 8இல் சனி உலவுவதால் அதிகம் உழைக்க வேண்டிவரும். அதற்கான பயன் குறைந்திருக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளை எண்ணிக் கைப்பொருளை வீணாக்க வேண்டாம். குறுக்கு வழியில் செல்ல நினைப்பதும் கூடாது. மக்கள் நலனில் அக்கறை தேவைப்படும். பணியாளர்களிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. வீண் அலைச்சலைத் தவிர்ப்பது அவசியம். 11ஆம் தேதி முதல் குரு பஞ்சம ஸ்தானம் மாறுவதால் தொல்லைகளும், மனப்போராட்டங்களும் விலகி, நல்ல திருப்பம் வாழ்வில் தெரியவரும். அக்டோபர் 17,18,21,23,24,26,27,31 நவம்பர் 1,3,5,7,9,14,15 தேதிகள் சிறப்பானவை. துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். வடக்கு, தென்கிழக்கு திசைகள் அனுகூலமானவை. 5,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சுமாரான மாதமிது.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் 3இல் அமர்ந்திருப்பதாலும், ராகு, சுக்கிரபலம் கூடியிருப்பதாலும், உங்கள் ஆற்றல் பிரகாசிக்கும். கடிதப்போக்குவரத்து நற்செய்தி கொண்டுவரும். சிறு பயணம் ஒன்றை மேற்கொள்ளவும், அதன்மூலம் பயன் பெறவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். பிறமொழி, மதக்காரர்கள் உதவுவார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். சமுதாய நலப் பணியாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் செல்வாக்கு உயரும். மாதர் தங்கள் குறிக்கோள் நிறைவேறப் பெறுவார்கள். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும். தோல் பொருள்கள் லாபம் தரும். ஏற்றுமதி, இறக்குமதி இனங்களில் ஈடுபாடு உள்ளவர்கள ஆதாயம் கூடப் பெறுவார்கள்.

உடன்பிறந்தவர்களால் உங்களுக்கும், உங்களால் உடன்பிறந்தவர்களுக்கும் அனுகூலம் உண்டாகும். அரசாங்கத்தாரால் ஓரிரு காரியங்கள் நிறைவேறும். அலைச்சலும், உழைப்பும் சற்று அதிகரிக்கும். கணவன், மனைவியிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் சமாளித்து வருவார்கள். வியாபாரிகளுக்கு மாமூலான லாபம் கிடைத்துவரும்.

கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் ஓரளவு வளர்ச்சி காண்பார்கள். செவ்வாய் விரயத்தில் இருப்பதால் வீண் சண்டை, சச்சரவுகளைத் தவிர்ப்பது நல்லது. எதிலும் அவசரப்போக்கு கூடாது. பொறுமையும், பக்குவமும் மிகவும் தேவை. பெரியவர்களின் மனம் புண்படும்படியான காரியங்களில் ஈடுபட வேண்டாம். நூதனமான முயற்சிகளை ஒத்திப் போடுவது நல்லது. அக்டோபர் 21,23,24,26,27,31 நவம்பர் 1,3,5,7,9,12 தேதிகள் சிறப்பானவை. துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். தென்கிழக்கு, தென் மேற்குத் திசைகள் அனுகூலமானவை. 1,4,6 எண்கள் நலம் தரும்.

பொதுவில் சுமாரான மாதமிது.

கன்னி : (உத்திரம் 2ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் உலவுவதால் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எதிர்ப்புகளும், தடைகளும் விலகும். மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் மேலோங்கும். நல்லவர்களது நட்புறவு கிட்டும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் வருவாய் வந்து சேரும். பேச்சாளர்கள், ஆசிரியர்கள், சட்ட வல்லுநர்கள், அமைச்சர்கள் ஆகியோர் தங்கள் நிலைமையில் அபிவிருத்தி காண்பார்கள். முக வசீகரம் கூடும். கலைத்துறை ஆக்கம் தரும். பெற்றோரால் மக்களுக்கும், மக்களால் பெற்றோருக்கும் அனுகூலங்கள் உண்டாகும். வியாபாரிகள் செழிப்புப் பெறுவார்கள். கணிதத்துறை ஆக்கம் தரும். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும்.

நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச் சொத்துகளின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெறுவீர்கள். விருந்து உபசாரங்களிலும், கேளிக்கை, உல்லாசங்களிலும் ஈடுபாடு அதிகரிக்கும். மாதர் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். கணவன், மனைவி உறவு நிலை திருப்தி தரும். உடன்பிறந்தவர்கள் ஓரளவு உதவுவார்கள். கடல் வாணிபம் ஆதாயம் கொண்டு வரும். உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் செழிப்பான பாதை புலப்படும். செந்நிறப்பொருள்கள் லாபம் தரும். 2இல் ராகுவும், 8இல் கேதுவும் உலவுவதால் ஓரிரு இடையூறுகள் அவ்வப்போது ஏற்படுமென்றாலும் சமாளித்து விடுவீர்கள். நவம்பர் 11ஆம் தேதி முதல் குருபலம் குறைவதால் தாய் நலனில் அக்கறை தேவைப்படும். பொருளாதாரநிலை சீராகவே இருந்துவரும். அக்டோபர் 17,18,23,24,26,27,31 நவம்பர் 1,3,5,7,9,12, 14,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,5,6,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் விசேடமான மாதமிது.

துலாம் : (சித்திரை 3ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய)

சுக்கிரனும், செவ்வாயும் அனுகூலமான நிலையில் உலவுவதால் சங்கடங்களைச் சமாளிக்கிற சக்தி பிறக்கும். உடல் ஆரோக்கியம் சீர்பெறும். தோற்றப்பொலிவு கூடும். எடுத்த காரியத்தை எப்பாடு பட்டாவது நிறைவேற்றுவீர்கள். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகள் ஆக்கம் தரும். மாதர் தங்கள் குறிக்கோள் நிறைவேறப் பெறுவார்கள். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளில் ஈடுபாடு உள்ளவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு, வியாஜ்ஜியங்களிலும் ஓரளவு வெற்றி கிட்டும். தெய்விக மார்க்கங்களில் ஈடுபாடு கூடும். தருமப்பணிகளில் பங்கேற்க முடியும். மக்கள் நலம், வாழ்க்கைத் துணைநலம், பெற்றோர் நலம் யாவும் சீராக இருந்துவரும்.

பொருளாதாரநிலை சாதாரணமாகவே காணப்படும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. வீண் அலைச்சலைத் தவிர்ப்பது அவசியமாகும். பிறமொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. உத்தியோகஸ்தர்களும், உழைப்பாளர்களும் தங்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றுவது நல்லது. நவம்பர் 11ஆம் தேதி முதல் குருபலம் கூடுவதால் செல்வநிலை உயரும். குடும்பத்தில் உற்சாகம் கூடும். தடைப்பட்ட காரியங்கள் உங்கள் விருப்பம்போல் நிறைவேறச் சந்தர்ப்பம் கூடிவரும். பிரச்னைகளிலிருந்து விடுபட மார்க்கம் புலப்படும். அக்டோபர் 17,18,21,26,27,31 நவம்பர் 1,3,5,7,9,12,14,15 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சுமாரான மாதமிது.

விருச்சிகம் : (விசாகம் 4ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் உலவாததால் விசேடமான நன்மைகளை நீங்கள் இந்த நேரத்தில் எதிர்பார்க்க இயலாது. அலைச்சலும், உழைப்பும் கூடவே செய்யும். மனத்தில் கிலேசம் உண்டாகும். நண்பர்கள், உற்றார், உறவினரால் அனுகூலமிராது. நில புலங்கள் விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. பொருள் வரவைக் காட்டிலும் செலவுகள் கூடுமென்பதால் சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. வீண்செலவுகளைத் தவிர்ப்பது அவசியம். தொழில்துறையில் முன்னேற்றம் காண்பது அரிது. மக்களால் தொல்லைகள் சூழும். வியாபாரிகள் அகலக்கால் வைக்க வேண்டாம். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றுவது நல்லது.

அலுவலகப் பணியாளர்கள் தங்கள் நிலைமையில் முன்னேற்றம் காண அரும்பாடுபட வேண்டி

வரும். மேலதிகாரிகளின் அதிருப்திக்கு உள்ளாகவும் நேரும். குடும்பத்தில் குழப்பம் குடிகொள்ளும். பயணம் தவிர்ப்பது நல்லது. நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள், அரசுப்பணியாளர்கள், அரசியல் வாதிகள் ஆகியோர் ஓரிரு சோதனைகளுக்கு ஆளா வார்கள். பெற்றோர் நலம் சீராக இராது. ஸ்பெகு லேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபட வேண்டாம். புதிய முயற்சிகளை ஒத்திப்போடுவது அவசியமாகும். மாமூலான பணிகளிலும்கூட எச்சரிக்கை மிகத் தேவை. இறைவழிபாட்டில் முழுமையான கவனம் செலுத்துவதன் மூலம் ஓரளவு நிம்மதி பெறலாம். உங்கள் ஜனன கால ஜாதகப் படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் பிரச்னைகள் விலகும். அக்டோபர் 17,18,21,23,27,31 நவம்பர் 1,3,5, 7,9,12,14,15 தேதிகள் சிறப்பானவை. வடமேற்குத் திசை நலம் தரும். மேஷ ராசிக்காரர்கள் ஓரளவு உதவுவார்கள். 6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சாதாரணமான மாதமிது.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம் முடிய)

3,11ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார்கள். புத்தி சாலித்தனமும், கவர்ச்சி அம்சமும் கூடும். பொருளாதாரநிலை உயரும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடிவரும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களில் ஈடுபட்டு வருவாய் கிடைக்கப் பெறுவீர்கள். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். அரசியல்வாதிகள், சமுதாய நலப்பணியாளர்கள் ஆகியோர் தங்கள் செல்வாக்கும் மதிப்பும் உயரப் பெறுவார்கள். வியாபாரம் அபிவிருத்தி அடையும். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் புகழ் கூடும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பெண்களுக்கு உற்சாகமான பாதை புலப்படும். பிற மொழி, மதக்காரர்கள் உதவ முன்வருவார்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர் களுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். பதவி உயர்வு, இடமாற்றம்,ஊதிய உயர்வு ஆகி யவை பெறச் சந்தர்ப்பம் கூடிவரும். வேலையில் லாதவர்கள் தகுந்ததொரு வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். கடல் வாணிபம் லாபம் தரும் எண்ணெய் வகையறாக்கள், தாதுப் பொருள் ஆகிய வற்றால் ஆதாயம் கிடைக்கும். தெய்வப்பணிகள் நிறைவேறும். தரும காரியங்களில் பங்கேற்கச் சந்தர்ப்பம் கனிந்துவரும். 8இல் செவ்வாய் உலவுவ தால் எக்காரியத்திலும் பதற்றம் வேண்டாம். பொறுமையோடும், பக்குவத்தோடும் ஈடுபடுவது நல்லது. பயணத்தின்போதும், இயந்திரங்களின் பக்கம் நெருங்கும்போதும் பாதுகாப்புத் தேவை. நவம்பர் 11ஆம் தேதி முதல் குரு விரயம் புகுவதால் வரவினம் சற்று குறையும். நிலபுலங்கள் விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. அக்டோபர் 17,18,21,23,24,31 நவம்பர் 1,3,5,7,9,12,14,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. கும்ப, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4,5,6,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் விசேடமான மாதமிது.

மகரம் : (உத்திராடம் 2ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் முடிய)

10ஆம் இடத்தில் உள்ள கிரகங்கள் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவார்கள். எதிர்ப்புகளைக் கடந்து வாழ்வில் வெற்றி காண வழி பிறக்கும். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு, வியாஜ்ஜியங் களிலும் ஓரளவு அனுகூலமான போக்கு தென்படும். வியாபாரிகள் சுபிட்சம் காண்பார்கள். எழுத்தாளர் களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் புகழும், பொரு ளும் கூடும். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். அரசியல்வாதிகள் தங்கள் நிலை உயரப் பெறு வார்கள். நிறுவன, நிர்வாகத் துறையினருக்குச் செழிப்பான சூழ்நிலை உருவாகும். சுபகாரியங் களில் ஈடுபாடு கூடும். தெய்வப் பணிகள் நிறை வேறும். நெருங்கிய நண்பர்கள், உற்றார், உறவின ரால் அனுகூலம் உண்டாகும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் தரும்.

பிறருக்கு உதவுவதில் ஆர்வம் கூடும். பொது நலப்பணியாளர்கள், மருத்துவர்கள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்கள், விஞ்ஞானிகள் ஆகி யோருக்கெல்லாம் முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். பிற மொழி, மதக்காரர்களது உதவி களைப் பெறுவீர்கள். அலைச்சல் சற்று அதி கரிக்கும். 7இல் செவ்வாய் உலவுவதால் பய ணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும் போதும் பாதுகாப்புத் தேவை. கணவன், மனைவி உறவுநிலை சீராக இராது. கூட்டுத் தொழிலில் கவனம் தேவைப்படும். 11ஆம் தேதி முதல் குரு 11ஆம் இடம் மாறுவதால் வெற்றி வாய்ப்புகள் கூட வழி பிறக்கும். மக்களால் நலம் உண்டாகும். குடும்பநலம் சீர்பெறும். பொருளாதார நிலையிலும் வளர்ச்சி காணலாம். அக்டோபர் 17,18,21,23,24,26,27 நவம்பர் 1,3,5,7,9,12,14,15 தேதிகள் சிறப்பானவை. வடக்கும், தென்கிழக்கும் அனுகூலமான திசை களாகும். துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4,5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சுமாரான மாதமிது.

கும்பம் : (அவிட்டம் 3ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3ஆம் பாதம் முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் அறிவாற்றலும், தோற்றப்பொலிவும், செயல்திறமையும் பளிச் சென்று பிரகாசிக்கும். மற்றையோரால் புகழப் படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் கூடும். எதிர்ப் புகள் விலகும். மேலதிகாரிகளின் பாராட்டுகளுக்கு உரியவராவீர்கள். தெய்வ தரிசனம், சாது தரிசனம் ஆகியவை கிட்டும். தொலை தூரப் பயணம் பயன் படும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகள் ஆக்கம் தரும். வியாபாரிகள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். பெற்றோரால்

மக்களுக்கும், மக்களால் பெற்றோருக்கும் அனுகூலங்கள் உண்டாகும். பொருளாதாரநிலை திருப்தி தரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடிவரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள்.

கலைத்துறையினருக்கு உற்சாகமான போக்கு நிலவிவரும். மாதர், தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். பொன், பொருள்களின் சேர்க்கை நிகழும். நிலபுலங்களால் நலம் உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். கேளிக்கை, உல்லாசங்களிலும், விருந்து உபசாரங்களிலும் பங்கேற்பீர்கள். கடுமையாக உழைக்கவேண்டிவரும் என்றாலும் அதற்கான பயனும் கிடைத்துவரும். கணவன், மனைவி உறவு நிலை ஒருநாள் போல் மறுநாளிராது. விட்டுக்கொடுத்துப் பழகி வருவது நல்லது. திரவப் பொருள்கள் ஆதாயம் கொண்டுவரும். ஏற்றுமதி இறக்குமதி இனங்கள், தோல் பொருள்கள், எண்ணெய் வகையறாக்கள், ஆகியவற்றால் ஆதாயம் கிடைத்துவரும். 11ஆம் தேதி முதல் குருபலம் குறைவதால் சிறுசிறு தொல்லைகள் சூழும். அக்டோபர் 17,18,21,23,24,26,27 நவம்பர் 3,5,7,9,12,14,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. கடக, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,7,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் விசேடமான மாதமிது.

மீனம் : (பூரட்டாதி 4ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகியோரது பலம் திருப்திகரமாக இல்லாததால் உங்கள் தேக ஆரோக்கியம், மதிப்பு, அந்தஸ்து, புகழ், வாழ்க்கை வசதிகள் யாவும் சாதாரணமாகவே காணப்படும். எதிலும் முழுமையான வெற்றிக்கு இடமிராது. தடைகளும், குறுக்கீடுகளும் முளைக்கும். எதிர்ப்புகளின் கரம் வலுத்திருக்குமாகையால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகவேண்டாம். மனத்தில் நிம்மதி குறையும். உஷ்ணாதிக்கம் கூடும். பயணம் தவிர்ப்பது நல்லது. நூதனமானவர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். மருத்துவச் செலவுகள் சற்று அதிகரிக்கும். தந்தை நலனில் அக்கறை தேவை. மக்களால் அனுகூலத்திற்கு இடமிராது. கணவன், மனைவியிடையே சிறுசிறு சலசலப்புகள் ஏற்படும். விட்டுக்கொடுத்துப் பழகுவதன் மூலம் நிலைமையைச் சமாளிக்க முடியும்.

தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும் அகலக்கால் வைக்க வேண்டாம். நூதனமான துறைகளில் ஈடுபட இந்த நேரம் ஏற்புடையதாகாது. வெளிநாட்டுத் தொடர்பால் அனுகூலம் காண்பது அரிது. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. பெரியவர்களின் மனம் புண்படும்படியான காரியங்களில் ஈடுபடவேண்டாம். தெய்வ வழிபாட்டிலும் கிரக வழிபாட்டிலும் சிரத்தை தேவை. அதன்மூலம் மனநிம்மதி பெறமுடியும். நவம்பர் 11ஆம் தேதி முதல் இதுவரையிலும் அஷ்டமத்தில் உலவிக் கொண்டிருந்த உங்கள் ராசிநாதன் 9ஆமிடம் மாறுவதால் தொல்லைகளும் பிரச்னைகளும் விலகி, வெளிச்சமான பாதை தெரியவரும். தடைப்பட்டிருந்த நற்காரியங்கள் நிகழத் தொடங்கும். பொருளாதாரநிலையில் இருந்துவந்த தொய்வு நிலை அகலும். அக்டோபர் 17,18,21,23,24, 26,27,31 நவம்பர் 1,5,7,9,12,14,15 தேதிகள் சுமாரானவை. வடக்கும் தென்கிழக்கும் அனுகூலமான திசைகளாகும். மேஷ, மிதுன ராசிக்காரர்கள் ஓரளவு உதவுவார்கள். 5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சாதாரணமான மாதமிது. ❖

விக்கிரமன்

16. அரசியின் சீற்றம்

இராசராச பிரம்மராய உத்தமசோழரும், மிலாடுடையாரும் கோதாவரி நதிக் கரையில் சிறப்பாகக் கட்டப்பட்டிருந்த மாளிகையில் அமர்ந்து, இராசேந்திர சோழரிடம் மனம்விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

பல காத தொலைவு பயணம் செய்து வந்த களைப்பு எதுவும் அவர்களிடம் இல்லை. இருந்த சிறிது சோர்வும், இராசேந்திர சோழ தேவரை மிக நெருக்கத்தில் சந்தித்த போது நீங்கிவிட்டது.

அவர்கள் உரையாடும் போது பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவியையும் அருகேயே இருக்குமாறு அரசர் பணித்தது, தங்களுக்கு அரசர் அளித்த மிகப்பெரிய கௌரவம் என்று நினைத்தனர். அவர்கள் மனத்தில் இருந்த சிறிதளவு குறையும் மறைந்து விட்டது. அவர்கள் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். அவர்கள் உடலில் புதிய தெம்பு ஏற்பட்டது. சோழர்க் குலத்திற்கு ஏழேழு தலைமுறைக்கும் உண்மையுடையவர்களாக இருக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார்கள்.

சோழ நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசினார்கள். இந்த ஆண்டு நல்ல விளைச்சல் என்று உற்சாகமாகச் சொன்னார்கள். மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதாகப் பெருமையுடன் சொன்னார்கள்.

சோழ அரசர் அவர்கள் சொல்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவ்வப்போது தலையசைத்தார். மெல்லிய புன்னகைக் கோட்டினால் அவர்களை மேலும் உற்சாகப்படுத்தினார்.

பணியாள்களை அழைத்து, முக்கனிகளைக் கொண்டு வருமாறு பணித்தார். சக்கரவர்த்திகளின் எதிரே அமர்ந்து உண்பதா? அவர்கள் திகைத்தார்கள். மேலும் உற்சாகம் அவர்களிடம் பொங்கியது.

மூன்றாவது மனிதர்கள் பேசும்போது பொதுவாக அரசி அந்த மண்டபத்திலோ, இடத்திலோ இருப்பதில்லை. அரசரும் அரசியாருடன் உரையாடிக்கொண்டிருக்கும் போது மற்றவர்களை அழைப்பதில்லை. சபை கூட்டப்படும்போது அரியணையில் அரசருடன் சமமாக அமர்ந்திருப்பாள். சில போது, சபை கொலுமண்டபத்து மேல் மாடத்தில் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கவனிப்பாள். அரசியும் அவள் பரிவாரங்களும் மாடத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளை நோக்குவதை அவையிலிருப்பவர் பார்க்க முடியாது.

கோதாவரி நதிக்கரையில் அரசருடன் அமர்ந்து தனியே பேசிக் கொண்டிருக்கும் வேளையில் சமயம் போவது தெரியாமல் சோழ நாட்டுச் செய்திகளைப் பேச வந்துவிட்டார்களே என்ற கோபம் அரசிக்கு எழுந்தது.

ஆனால், புதிதாக உருவாகும் கோயிலைப் பற்றியும், நகரத்தைப் பற்றியும், வெட்டப்படும் ஏரியைப் பற்றியும், போடப்படும் சாலைகளைப் பற்றியும் அவர்கள் விவரிக்கும்போது மேலும் மேலும் ஊர்ச் செய்தியை அறிய அரசி ஆவல் கொண்டாள்.

காடுகள் வெட்டப்பட்டதை அவர்கள் சொன்னார்கள். அகலமான பெரும்பாட்டை போடப்பட்டிருப்பதை விவரித்தார்கள்.

சிதம்பரத்திலிருந்து அந்தப் புதிய நகரத்திற்கு அகலமான சாலை போடப்படுவதையும், சாலையின் இருபக்கங்களிலும் மரக் கன்றுகள் நடப்படுவதையும் தெரிவித்தார்கள். இன்னும் பத்து ஆண்டுகளில் கன்றுகள் பெருமரங்களாக வளர்ந்து குளிர்நிழல் தரும் காட்சியை இப்போதே காண்பதாக அவர்கள் சொன்னார்கள்.

"சக்கரவர்த்திகளே! அங்கே புதிய புதிய வீடுகள் கட்டப்படுகின்றன. பழையாறை

கங்காபுரிக் காவலன்

யிலும், தஞ்சைபுரியிலும் இருக்கும் வீடு, களைவிடப் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன. புதுமையாக இருக்கின்றன. சில ஆண்டுகள் கழித்து உருவாகும் அந்த நகரம் எப்படியிருக்கும் என்று கற்பனைக் கண் கொண்டு பார்க்கிறேன்.


"தஞ்சைபுரியையும், பழையாறையையும் விட மிகப் பெரியதாக அந்த நகரம் அமையும் போல் தோன்றுகிறது. பாண்டிய நாட்டு மதுரைக்கும் சென்றிருக்கிறேன் - அந்த நகரத்திற்கில்லாத பெருமை இந்த நகரத்திற்கு இருக்கப் போகிறது" என்று கூறி மிலாடுடையார் சற்று நிறுத்தியபோது, 'அது என்ன பெருமை, சொல்லுங்கள்' என்று வினவுவதுபோல் இராசேந்திர சோழர் அவர்களை நிமிர்ந்து பார்த்தார்.

"பெரிய கடலும், கடலுக்கு அருகே பெரிய கோயிலும் வேறு எந்த நகரத்துக்குப் பெருமை சேர்க்கின்றன?" என்று பெருமையுடன் கூறினார் மிலாடுடையார்.

அவர் சொல்வதற்கெல்லாம் பிரம்மராய உத்தமசோழர் தலையசைத்துக் கொண்டிருந்தார்.

"பெரிய கடலா - கடலுக்கு அருகே பெரிய கோயிலா? விளங்கவில்லையே" என்று அரசர் கேட்டார்.


"ஆ! பெரியகடல் போன்ற ஏரி என்று சொல்வதற்கு மாறாக அவசரத்தில் அப்படிச் சொல்லிவிட்டேன்" என்று பல்லை இளித்த அவரைப் பார்த்து, அரசர், "கடலை நகரத்திற்குள் கொண்டு வர நான் விரும்பவில்லை. விளை நிலங்கள் உப்பாக மாறி பயனில்லாமல் போய்விடுமல்லவா?"



"கங்கை நீரைக் கொண்டுவர விரும்புகிறேன். அதனால்தான் கடல் போன்று பெரிய ஏரி அங்கே உருவாயிற்று! கங்கை நீரை அதில் நிரப்ப கங்கையைக் கொண்டு வரத்தானே நான் இங்கே வந்திருக்கிறேன்" என்றார் அரசர்.

அவர்கள் இருவரும் தலையசைத்தனர். "ஆமாம், ஆமாம். அங்கே எல்லாம் மிகப் பிரம்மாண்டமாக உருவாகிறது. இளவரசி தாமே முன்னின்று பெரிய கோயிலை, பெரிய நகரத்தை உருவாக்குகிறார்கள். அவர்களுக்கு வேறு சிந்தனையே இல்லை. இங்கும் அங்கும் ஓடி அலைந்து மேற்பார்வையிடுகிறார்கள். சோழ சக்கரவர்த்திகளே! இன்னும் சில மாதங்களில் புதிய சுவர்க்கமே அங்கே நிர்மாணமாகி விடும். இந்த சமயத்தில் சக்கரவர்த்திகள் பழையாறையிலிருந்து திடீரென்று வட திசைக்குப் போர் வீரர்களுடன் சென்றதாகக் கேள்விப்பட்டோம். தாங்கள் எடுத்த முயற்சிகள் எல்லாவற்றிலும் நாங்கள் இதுவரையிலும் பங்கு கொண்டு எங்களால் இயன்றதைச் செய்திருப்பது தாங்கள் அறியாததா? நாங்கள் என்ன பிழை புரிந்தோம்? நாங்கள் பங்குபெறாமல் செய்துவிட்டீர்கள். அதனால்தான் படைவீரர்களுடன் தாங்கள் அழைக்காமலே வந்துவிட்டோம். எங்கள் கடமையல்லவா?"

"புதிய சுவர்க்கம் உருவாகி வருகிறது என்றா சொன்னீர்கள்? தென்னாட்டில் கயிலாயம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என்பதே வீரமாதேவியின் ஆசை. பெரிய கோயிலில் சிற்பங்கள் எல்லாம் உருவாகி விட்டனவா? விமானத்தில் சுதை உருவங்கள், திருச்சுற்றில் உள்ள கோட்டங்களில் தேவதைகளின் திருஉருவங்கள், மகாலட்சுமி கலைத்தேவி, மகாவிஷ்ணு - சிற்பங்களைப் பார்த்தீர்களா? எல்லாம் வீரமாதேவி திட்டமிட்டபடி நடைபெறுகின்றனவா?"



அரசர் சற்று நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பவர் போல் மௌனமாக இருந்தார்.

"சக்கரவர்த்திகளுக்கு ஒரு வேண்டுகோள்! சோழ இளவரசி கலை ஆர்வம் மிகுந்தவர்கள் என்று நாடு நகரம் எல்லாம் புகழ்கின்றன. எங்கள் வாழ்நாளில் புதிய நகரம் ஒன்று உருவாவதைப் பார்க்கும் பேறு பெற்றிருக்கிறோம். சுற்றுப்புற ஊர்களிலிருந்து கூட்டங் கூட்டமாக வந்து புதிய நகரத்தைப் பார்த்துச் செல்கிறார்கள். புதிய நகரத்தில் வீடு கட்டிக்கொண்டு வாழப் பலர் இப்போதே ஆயத்தமாகிறார்கள். தரிசாகக் கிடந்த நிலங்களை உழுது பயிரிட வேளாண் குடிமக்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். பெரிய ஏரியிலிருந்து பாசனத்துக்குப் பஞ்சமில்லாமல் தண்ணீர் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். வடக்கே சிதம்பரம் சென்று ஆடவல்லானைத் தரிசிக்க முடியாதவர்கள், தங்கள் ஊரிலேயே பெரிய கோயில் எழப் போவதை எண்ணிப் பெரிய அளவில் மகிழ்கிறார்கள்.

"கோயில் திருப்பணி விரைவில் முடிவடைய வேண்டும் என்று கருவூர்ச் சித்தர் இரவு பகலாக அங்கேயே தங்கியிருந்து ஆலோசனை கூறி வருகிறார்கள். கருவறையில் மிகப்பெரிய ஆவுடையார் லிங்கம் - அப்பாடி! எதிர்பார்த்து எங்களைப் போலவே பலரும் ஆவலுடன் இருக்கிறார்கள். தேவலோகத்துக் கல்தச்சர்கள் தாம் வந்து சிற்பங்களை வடிக்கிறார்களோ என்று மக்கள் பிரமிப்படைகிறார்கள்.

"சக்கரவர்த்திகளே! நாங்கள் பாக்கியசாலிகள். இந்தப் புனிதமான பணியில் எங்களுக்குப் பங்கு கொடுங்கள். விரைவில் தலைநகரம் திரும்புவதற்கு இடையூறாக எதிரிகள் இருந்தால் சொல்லுங்கள்; அவர்களை துவம்சம் செய்கிறோம். கங்கையில் நீராடச் செல்லாமல் தங்களைத் தடுப்பவர்கள் யார்? கட்டளையிடுங்கள் - அவர்களை நிர்மூலமாக்குகிறோம்".

உண்மையிலேயே உற்சாகமாகவும், தூய உள்ளத்துடனும் பேசும் உத்தம சோழரையும், மிலாடுடையாரையும் அரசர் கை உயர்த்தி வாழ்த்தி, "உங்கள் அன்பு என்னை மெய் சிலிர்க்க வைக்கிறது. தங்களைப் போன்றவர்களின் உற்ற துணையுமிருந்தால் எனக்கும் இந்த நாட்டிற்கும் எந்தவிதக் குறையுமுண்டோ?

"என் புனித யாத்திரைக்கு இடையூறு செய்ய ஒரே ஓர் எதிரி மட்டுமே இருப்பதாக எண்ணினேன். இப்போதோ புதிய எதிரி முளைத்துவிட்டார். வடநாட்டு அரசர்களுக்குப் பெரும் ஆபத்து. அவர்களுக்கு மட்டும்தானே ஆபத்து என்று நாம் எளிதில் தள்ளிவிட்டால் அந்தக் கொடியவர்கள், தெற்கு நோக்கிப் படைகளுடன் வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? கஜினி முகமது என்ற பெயருடைய அந்த அயல் நாட்டு மன்னனுக்கு நாட்டைப் பிடிக்க ஆசை இருப்பதாகத் தெரியவில்லை. நம் முன்னோர்கள் கட்டி வைத்த கோயில்களின் கருவறையில் மதிப்பிட முடியாச் செல்வம் இருக்கிறது. இறைவனுக்கும் இறைவிக்கும் விலைமதிப்பிட முடியாத வைர, வைடூரிய நவரத்ன ஆபரணங்களை மூதாதையர் காணிக்கையாக சேர்த்து வைத்துச் சென்றிருக்கிறார்கள். அவற்றைக் கொள்ளையடித்துச் செல்வதே கஜினியின் நோக்கம். பலமில்லாமல் ஒற்றுமையில்லாமல் இருக்கும் வடபுலத்து மன்னர்களை எளிதில் வென்று செல்வங்களைக் கொள்ளையடித்து வருகிறான். அவனைத் தடுக்க வேண்டும். அடித்து விரட்ட வேண்டும். வடநாட்டரசர்களை ஒற்றுமையாக இருக்குமாறு செய்துவிட்டேன். என் உதவியை அவர்கள் நாடினார்கள். தோள்வலி மிகுந்த ஆயிரக் கணக்கான நம் வீரர்களை, கஜினியை எதிர்த்துப் போராட அனுப்ப முடிவு செய்துள்ளேன்.

"நம் படையில் ஒரு பிரிவினர் கங்கைக் கரை நோக்கிச் சென்றுள்ளனர். நான் சில நாள்களில் புறப்படுகிறேன்..." என்று கூறி அரசர் சற்று நிறுத்தினார்.

"சக்கரவர்த்திகளே! கட்டளையிடுங்கள். நாங்கள் கங்கைக் கரைக்குத் தங்களுக்குத் துணையாக வருகிறோம்" என்ற மிலாடுடையாரை நோக்கிக் கையசைத்து, "வேண்டாம், வேண்டாம். நீங்கள் உடனே வடமேற்கு நோக்கிச் செல்லுங்கள். சோழர்ப் படைகளுடன் சேர்ந்து கொள்ளுங்கள். கண்ண

பிரான் பிறந்து, வளர்ந்து, லீலைகள் புரிந்த மதுரா நகருக்கும் ஆபத்து நெருங்குகிறது. சிந்துநதிக்கரையிலுள்ள மாசுணி நாட்டிற்குப் பேராபத்து.

கஜினி முகமதுவை எதிர்க்கப் போகிறோம் என்று நான் நினைக்கவில்லை. கங்கைக் கரைக்குச் செல்லும்போது நம்மைத் தடுக்க வரும் அரசர்களை எதிர்க்கப் போதுமான வீரர்களுடன் புறப்பட்டேன். இப்போது படை வீரர்களை இரு பிரிவுகளாகப் பிரித்தேன். பலமிக்க கஜினியை எதிர்க்க அரசர்கள் பலரை ஒன்று சேர்த்துள்ளேன். இன்னும் பலம் பொருந்திய சோழர்ப் படைகள் தேவை. நல்ல வேளையாக நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். உடனே நீங்கள் கஜினியை எதிர்க்கப் புறப்படுங்கள். சிந்துநதியின் நீரைக் கொண்டு வாருங்கள். நர்மதை, சிந்து, கங்கை நீர்களைக் கொண்டு பெருவுடையாருக்குப் புனித நீராட்டுவோம். உடனே புறப்படுங்கள். கங்கை வெற்றியில் தங்கள் பங்கும் என்றும் நின்று நிலவும். புதிய கோயிலின் விமானத்தை கங்கை நீரால் குடமுழுக்காட்ட நீங்கள் உதவியதாக நான் சொல்கிறேன். உம் . புறப்படுங்கள்" என்றார்.

கோதாவரி நதியில், மேற்குத் திசையில் கதிரவன் மூழ்கி மறைந்தான். எங்கும் இருள் சூழ்ந்தது.

"தேவி! நெடுநேரம் இங்கே அமர்ந்திருந்ததால், சோர்வுற்றிருப்பாய். சற்று ஓய்வு எடுத்துக் கொள். மீண்டும் நாம் இங்கே வந்தமர்ந்து இசையின்பத்தில் திளைப்போம்" என்றார்.

ஐந்தாம் பிறைச் சந்திரன் வானவெளியில் பவனி வந்து தண்ணிலவைப் பொழிந்து கொண்டிருந்தான்.

வீணையை மீட்டி, குழலூதி இன்னிசை எழுப்ப கலைப் பெண்கள் வந்தமர்ந்தனர்.

காப்பீரா?

குடந்தை புகழேந்தி

கவிஞ னாக வாழ் பவனைக்
காலம் போற்ற மறக் கிறது!
புவியில் நொந்தே வாழ்க்கை யதில்
புழுவாய்த் துடித்து உழல் கின்றான்.
இலக்கியம் அவனால் வாழ்ந் திடினும்
இங்கே அவனோ சாகின் றான்
இலக்குடன் வாழும் அவ னாலோ
இலக்கைப் பிடிக்க முடிய லையே!
பிச்சை எடுக்கத் துணி வில்லை
பிழைப்பை மாற்ற வழி யில்லை
எச்சில் வாழ்க்கை சுக மில்லை
எதுவும் உலகில் சத மில்லை!
உயிரோ டிருக்கும் போதெல்லாம்
ஊமைய ராகி இருந் திட்டு
உயிரோ பிரிந்த போதிங்கு
ஊரே கூடிப் பய னென்ன?
கூட்டம் கூடிப் பேசிடி னும்
குமையும் அவன்துயர் தீர்ந் திடுமா?
வாட்டம் இன்றி அவன் வாழ
வகையைச் செய்து காப் பீரா?

பாடலுக்கேற்றபடி நடனமிட இரண்டு அழகிய பெண்கள் வந்து நின்றனர்.

பட்டத்தரசியும் வந்தமர்ந்தாள். அவள் முகத்தில் சோர்வு மிகுந்திருந்தது. சென்ற சில நாள்களாக இருந்த மகிழ்ச்சி இன்று முகத்தில் காணவில்லை.

தேவாரப் பண்ணிசைக்க வந்த மங்கையை நோக்கி, "மாதர் பிறைக் கண்ணி யானை–பதிகம் தெரியுமா?" என்று அரசர் கேட்டார். அரசருக்கு மிகவும் பிடித்தமான பதிகமன்றோ?

பாடலும், வீணையொலியும், குழல் ஓசையும் எழுந்தன. பாடலுக்கு ஏற்ப மங்கையர் ஆடினார்கள். திடீரென அரசர், 'நிறுத்துங்கள் நிறுத்துங்கள்' என்று குரல் கொடுத்தார்.

'காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்' என்ற பாடலுக்கு இப்படியா ஆடுவது? வீரமாதேவியின் நடனத்தைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லாவிட்டால், நாடு திரும்பியதும், இளவரசி வீரமா தேவியிடம் நாட்டியம் பயிலுங்கள்" என்று சற்றுக் கோபத்துடன் கூறினார்.

அரசி பஞ்சவன்மாதேவி அதிர்ச்சி யடைந்தாள்.

கோபம் பொங்கியது. வீரமாதேவி, வீரமாதேவி. அவள் நினைவு இங்குமா? விருட்டென்று எழுந்து, அந்த வெளி முற்றத்திலிருந்து உள்ளே சென்று மஞ்சத்தில் சாய்ந்தாள்.

இராசேந்திர சோழ தேவர், பஞ்சவன் மாதேவியின் அருகே சென்றமர்ந்து, "தேவி! உடல்நிலை சரியில்லையா? ஏன் திடீரென எழுந்து சென்று விட்டாய்?" என்று கேட்டு நெற்றியில் கரம்பதித்து மெல்ல வருடினார்.

பஞ்சவன்மாதேவி பேசவில்லை. "இலே சாகக் காய்ச்சல் இருக்கிறதே" என்றார். அவள் பேசவில்லை.

பஞ்சவன்மா தேவிக்கு இரவு உறக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள்.

காலையில் அரசரைச் சந்தித்தவுடன், "பழையாறைக்கு உடனே புறப்படவேண்டும்" என்றாள்.

இராசேந்திரன் வியப்புடன் அவள் முகத்தை நோக்கினார்.

திடீரென்று ஏன் இந்த மாற்றம்? என்று விழியாலேயே கேட்டார்.

"ஆமாம், இங்கே இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. உங்கள் அபிமான வல்லி வீரமாதேவி உருவாக்கும் புதிய சொர்க் கத்தை நான் உடனே பார்க்க வேண்டும். அந்த அதிசய நகரத்தை நான் உடனே காண வேண்டும்" என்றாள்.

– தொடரும்

84, டி.டி.கே. சாலை, சென்னை-600018-இல் உள்ள 'தமிழ் அரசி' அச்சகத்தில் அச்சிடப் பட்டு, ஸ்ரீராம் டிரஸ்ட்- 600001-சார்பில் வெளியிட்டவர் ஏ.வி.எஸ். ராஜா. ஆசிரியர்: 'கலைமாமணி' விக்கிரமன். நிர்வாக அலுவலகம் : 145 லிங்கிச் செட்டி தெரு, த.பெ. எண். 5043, சென்னை – 600 001. தொலைபேசி : 5228545, 510535.